# தம்பதி நல்லாள்

## தம்பிலுவில் ஊர்ச் சிறப்பு



- நூலாசிரியர் -
சிவ தொண்டர்
திரு.ச. திருஞானமூர்த்தி

## சமர்ப்பணம்

தம்பிலுவில்லைச் சேர்ந்த சிவபதம் எய்திய
என் மதிப்புக்குரிய ஆருயிர்த்தந்தை
காலம் சென்ற "வைரமுத்து சண்முகம்"
அவர்களுக்கும் மற்றும் இப்பிரதேசத்தில் வாழ்ந்து
இறைபதம் அடைந்த பெரியார்கள்,
கல்விமான்கள், தனவந்தர்கள்,
முது செம்மல்கள் ஆகிய அனைவருக்கும்
சமர்ப்பணம் செய்து வழிபடுகின்றேன்.

"என்னை இறைவன் நன்றாகப் படைத்தனன்!
தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே!

# தம்பதி நல்லாள் தம்பிலுவில் ஊர் சிறப்பு




ஆக்கியோன்
சிவ தொண்டன். திரு.ச.திருஞானமூர்த்தி
சமாதான நீதவான்

வெளியீடு,
சிவத் தொண்டர் சபை, ஆலையடிவேம்பு
அம்பாரை மாவட்டம் அக்கரைப்பற்று
பதிவு இல HA/04/AM/96

# நூல்விபரம்


| | | |
|---|---|---|
| தலைப்பு | : | தம்பதி நல்லாள் தம்பிலுவில் ஊர் சிறப்பு |
| ஆசிரியர் | : | திரு.ச.திருஞானமூர்த்தி, (சிவதொண்டர்)<br>நெசவு நிலையமுன் வீதி,<br>அக்கரைப்பற்று - 07 |
| பதிப்பு | : | சிவதொண்டர் |
| மொழி | : | தமிழ் |
| வெளியீடு | : | சிவத் தொண்டர் சபை |
| கணணிவடிவம் | : | டெக் ஸ்மார்ட் அக்கரைப்பற்று |
| அச்சுப்பதிப்பு | : | சிற்றிசன் ஓப்செற் அச்சகம் அக்கரைப்பற்று |
| அட்டை அமைப்பு | : | ஓவியர். இ. வினாயகமூர்த்தி |
| பிரசுரதிகதி | : | 2018 |
| புறுப்திருத்தம் | : | திரு.சி.மகேஸ்வரனும், நூலாசிரியரும் |
| பக்கங்கள் | : | 152 |
| பிரதிகள் | : | 500 |
| விலை | : | 300.00 ரூபா |
| பதிப்புரிமை | : | நூலாசிரியர் **ISBN: 978-955-71344-06** |

# வாழ்த்துச் செய்தி



"தம்பதி நல்லாள் தம்பிலுவில் ஊர்ச்சிறப்பு வரலாறு" கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகியவை ஒன்றிணைந்து 2017 ஆம் ஆண்டில் நடாத்திய தேசிய கையெழுத்துப் பிரதிப் போட்டியிற் திரு. ச. திருஞானமூர்த்தி அவர்களுக்குத் திறமைக்கான பாராட்டினைப் பெற்றுக்கொடுத்த, தம்பிலுவில் ஊர்ச்சிறப்பு, ஆலய வரலாறுகள், பூர்விக வரலாறுகள், பண்பாடு, பழக்க வழக்கங்கள், செந்தமிழ் மற்றும் பேச்சுத்தமிழ், பெரியார்கள், புவிச்சரிதவியல் அமைப்புக்கள் முதலான அனைத்து அம்சங்களையும் தன்னகத்தே தாங்கி ஊர்ச்சிறப்பு வரலாறு கூறும் நூலாக வெளிவருவது பாராட்டுக்குரியது. இவரது இம் முயற்சி சிறப்புற அமைய எல்லாம்வல்ல எம்பெருமானின் பாதார விந்தங்களைப் பணிந்து வாழ்த்தி அமைகின்றேன்.

அ.உமாமகேஸ்வரன்
பணிப்பாளர்
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

# தேசிய கையெழுத்துப் பிரதிப் போட்டி - 2017

கலாசார அலுவல்கள் திணைக்களம்
மற்றும்
உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும்
கலாசார அலுவல்கள் அமைச்சு
ஒன்றிணைந்து நடாத்தும்
தேசிய கையெழுத்துப் பிரதிப் போட்டித் தொடர் - 2017இல்
'தம்பதி நல்லாள் தம்பிலுவில் ஊர்ச்சிறப்பு வரலாறு' எனும்
தலைப்பை முன்வைத்தமைக்காக

வரலாறு பிரிவில்
முதலாம் இடத்தினை / இரண்டாம் இடத்தினை / மூன்றாம் இடத்தினை / திறமைக்காக
பெற்றுக்கொண்ட

ச. திருஞானமூர்த்தி அவர்களுக்கு

2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 திகதி

இச்சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டதாக உறுதிப்படுத்துகின்றோம்.

அனுஷா கோகுல பர்னாந்து
பணிப்பாளர்
கலாசார அலுவல்கள் திணைக்களம்

டீ.ஸ்வர்ணபால
செயலாளர்
உள்ளக அலுவல்கள்,
வடமேல் அபிவிருத்தி மற்றும்
கலாசார அலுவல்கள் அமைச்சு

## வாழ்த்துச் செய்தி

சைவமும்தமிழும் மேன்மையுடன் பிரகாசிக்கும் தனித் தமிழ்ப் பிரதேசமான திருக்கோவில் பிரதேசத்தின் தம்பிலுவில் எனும் இடத்திற் பிறந்த சண்முகம் திருஞான மூர்த்தியின் மேம்பாடுற்ற மனதினில் உதித்த எண்ணமானது இன்று ஒளி மிளிரப்பிரகாசிக்கும் "தம்பதி நல்லாள் தம்பிலுவில் ஊர்சிறப்பு, பண்டுபரவணியாக வந்து கொண்டிருக்கும் நடைமுறைகள், இங்கு மக்கள் ஆரம்பம் தொட்டு இன்று வரை எப்படித்தங்கள் வாழ்க்கையில் படிப்படியாக முன்னேற்றம் கண்டார்கள், தங்களது தாய் மொழிக்கும் சமயத்திற்கும் முன்னுரிமை கொடுத்தார்கள். என்றும், அவர்களது குடியுரிமைகளை எப்படிப்பாதுகாத்தார்கள் என்றும் நீர்வளம், நிலவளங்களினால் எவ்விதமான முறையில் பொருளைச் சேர்த்தார்கள் என்ற பல விடயங்களைச் சேர்த்து எல்லோராலும் அறிந்து கொள்ள வேண்டிய விடயங்களை எல்லாம் மிகவும் நுணுக்கமாகக் காலம் நேரம் பார்க்காது, ஆராய்ந்து தந்து இருக்கிறார். பல நிறங்களைக் கொண்ட முத்து மணிகளால் கோர்த்து, இணைக்கப்பட்ட மாலையைப் போன்று இந்நூலில் அன்னாரின் ஆர்வமும், ஊக்கமும், மனம்தளராத முயற்சியும் பிரதிபலிக்கின்றது. திருக்கோவில் பிரதேச மக்கள் அறிந்திருக்க வேண்டிய அனைத்தும் அடங்கிய வரலாற்றை, எமக்குத் தந்திருக்கின்றார். இந்நூலானது பாராட்டினையும், பரிசினையும் பெற்றுள்ளது எனின் இதன் பெருமையை எடுத்தியம்ப முடியாது. இவரது முயற்சிக்கு நாமும் துணை நின்று இன்னும் பல விடயங்களை ஆராய்ந்து அறிமுகம் செய்து மேம்பட உதவி அளிக்க வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனின் பாதங்களை வேண்டி நீடு காலம் இவ்வுலகில் வாழ்ந்து சிறப்புற வாழ்த்தி வணங்குகின்றேன்.

"தயாகம்"
தம்பிலுவில் 02 கிழக்கு

தம்பிமுத்து மகேந்திரன் கலாபூசணம்
முன்னாள் திருக்கோவில்
ஸ்ரீ சித்திரவேலாயுதர் ஆலய தர்மகர்த்தா
ஓய்வு நிலை எழுது வினைஞர்
கந்த புராணப்படன ஆலோசகர் சமாதான நீதவான்

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

## முகவுரை

நூலாசிரியரின் முயற்சி மிகவும் பாராட்டுக்குரியதாகும். பல தமிழ் பிரதேசங்களின் வரலாறுகள் சரியான முறையில் பதிவு செய்து ஆவணப் படுத்தபடாத நிலமை இலங்கையில் காணப்படுகிறது.

வரலாற்றுச் சிறப்பு மிக்க எமது மக்களின் பாரம்பரிய பூமியாக திருக்கோவில் பிரதேசத்தைப் பற்றிய வரலாற்றை ஆசிரியர் ஆவணப்படுத்தியுள்ளமை, தற்காலத்தில் மிகவும் முக்கியமான வரவேற்கத் தக்க விடயமாகும். இவ்வரலாறு, தமிழ் மக்களின் தொன்மையும், கலாச்சாரம் மற்றும் வாழ்வியல் என்பன எந்தளவு கிழக்கிலங்கையில் காலூன்றி இருந்தது என்பதைத் தெளிவு படுத்துகிறது.

தமது பிரதேசங்களில் தம்மினத்தின் தொன்மையான வரலாறு பற்றி, எமது வருங்கால சந்ததியினருக்கு ஒரு வரப்பிரசாதமாக இந்நூல் அமைகிறது.

மன்னர்கள் பலர் ஆட்சி புரிந்திருந்தாலும், தமிழர் மரபு தொடர்ந்தும் பேணப்பட்டு வந்திருப்பது கண்கூடாகத் தெரிகிறது.

வரலாற்று நூல்கள், ஆராய்ச்சிக் கட்டுரைகள் மரபுவழிக் கதைகள், சான்றுகள் என பல கோணங்களிலும் ஆராய்ந்து சாட்சியங்களோடு எடுத்தியம்பியிருப்பது தனிச் சிறப்பாகும். இது போன்ற நல்ல முயற்சிகள், பல பேருக்கு சான்று போவதாக அமைந்து, மேன் மேலும் பல நூலாசியர்கள் உருவாகி, எமது பிரதேசங்களைப்பற்றிய வரலாற்று உண்மைகளை பதிவிட முன்வருவார்கள் என்பதில் ஐயமில்லை.

நூலாசியர்களின் அரிய முயற்சிக்கு எனது வாழ்த்துக்களும் மனமுவந்த பராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

செல்வம் அடைக்கலநாதன், பா.உ.
குழுக்களின் பிரதித் தவிசாளர்
இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை
இலங்கை.

## அணிந்துரை

திரு. சண்முகம் திருஞானமூர்த்தி அவர்களின் ஊர்ப்பற்றும், இலக்கியதா கமும், அவரை "தம்பதி நல்லாள் தம்பிலுவில் ஊர்ச்சிறப்பு வரலாறு" என்னும் அரிய நூலை எழுதத் தூண்டியிருக்கிறது. தம்பிலுவில் என்னும் பழந்தமிழ் கிராமத்தின் தோற்றம், வளர்ச்சி என்பன அவரால் நுணுகி ஆராயப்பட்டு வாசகர்கட்கு எளிய நடையில் எடுத்தியம்பப்பட்டிருக்கின்றன. இந்தக் கிராமத்தைப் பற்றி முன்னோடிகளினால் எழுதப்பட்ட பல்வேறு நூல்களை உசாத்துணையாகக் கொண்டும், மேலும் பல தரப்பட்டவர் களிடம் உசாவி அறிந்து கொண்டும். விடாமுயற்சியுடன் இந்நூல் படைக்கப்பட்டிருக்கின்றது.

தம்பிலுவில் நல்லூரில் பிறந்து அக்கரைப்பற்றில் இல்லாளைப் பெற்று சீரும் சிறப்புமாக வாழ்ந்து வரும் "சிவம்" என எல்லோரலும் அன்பாக அழைக்கப்படும் நண்பர் சிவ தொண்டன் திருஞானமூர்த்தி அவர்களின் பொழுது போக்கு இவ்வாறான பாரம்பரியச் செய்திகளைச் சேர்ப்பதும் அவற்றைக்கோர்ப்பதும் பின் அச்சிலேற்ற விழைவதுமாகும் என்பது கண்கூடு இவ்வாறாக திரட்டிய பெருஞ் செல்வந்தான் இந்நூல்.

இதில் தம்பதிநல்லாள் தொடக்கம் அடிகளார் வரை பல்வேறு பிரபல்யங் களின் செய்திகள் கூறப்பட்டுள்ளன. ஊரில் நிலை பெற்றிருக்கும் ஆலயங்கள் களுதாவளைப்பிள்ளையாரில் ஆரம்பித்து தம்பிலுவில் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம், ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலயம், திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயம் முதலியவற்றின் சிறப்புக்கள் எடுத்தியம்பப்பட்டுள்ளன.

தம்பிலுவில் என்னும் ஊர்பெயர் வரக் காரணம் இங்கு வசிக்கும் குடிகளின் விபரம், பாரம்பரியங்களான கொம்பு விளையாட்டு, வசந்தன் பாடல்கள், மக்களின் பழக்கவழக்கங்கள், பேச்சு வழக்குகள் முதலியன சிறப்பாக எடுத்தியம்பப்பட்டுள்ளன. இப்பிரதேச ஆதிகால துறைமுகச் சிறப்பும் வரலாற்றுச் செய்தியாகத் தரப்பட்டுள்ளது.

மேலும் இப்பகுதியில் தளைத்தோங்கிய ஆயுர்வேத வைத்தியத்துறையும் அலசப்பட்டுள்ளது. அது மாத்திரமல்லாது இப்பிரதேச விஸ்தீரணம், நிலவளம், நீர்வளம், பயிர்வளம், பயன்மிகு செல்வங்கள் போன்ற விடயங்களும் தரப்பட்டுள்ளன. பழங்காலத்து போக்குவரத்து முறைகள், கலை, கலாசார இலக்கிய பண்பாட்டு விழுமியங்கள் யாவும் இயன்றவரை தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இப்பகுதியில் தோன்றிய பாடசாலைகள், கல்வி வளர்ச்சி என்பனவும் சான்றுப்படுத்தப்பட்டுள்ளன. இப்பகுதி வாழ் வனக்குறவர் பற்றியும் குறிப்பிடத்தவறவில்லை.

மொத்தத்தில் ஊர்ச்சிறப்பின் பல்வேறு பரிமாணங்களையும் எடுத்துக் காட்டி பிற்காலத்தில் இத் தலைப்புகளை ஆராய விழையும் ஆர்வலர்களுக்கு உதவும் வகையில் ஒரு குறிப்பிடக்கூடிய மூலநூலைத் தந்துள்ளார். என்றால் அது மிகையாகாது இவரது ஆய்வுப்பணிகளைப் பாராட்டுவதுடன் எதிர்காலத்திலும் மனம் தளராது ஊர்ச்சிறக்க பல்வேறு துறைகளிலும் கவனஞ்செலுத்தி வெற்றி பெற எல்லாம் வல்ல தம்பிலுவில் ஸ்ரீ சித்தி விநாயகனையும் வேண்டி உளமார நன்றியுடன் நிறைவு செய்கின்றேன்.

வ. ஜயந்தன் B.Sc.PGDE,Princepal
அதிபர் அகில இலங்கை சமாதான நீதவான்
தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம் தேசிய பாடசாலை
திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத ஆலய வண்ணக்கரும்

## வாழ்த்துச் செய்தி

தம்பதி நல்லாள் தம்பிலுவில் ஊர்ச்சிறப்பு - என்ற வரலாற்று நூலை வெளியிடுவதில் இவ்வாசிரியர் மிகவும் ஆர்வம் காட்டினர். இந்நூல் கலாச்சார அலுவல்கள் திணைக்களம் நடாத்திய (2017) தேசிய கையெழுத்து பிரதிபோட்டியில், வரலாற்றுப் பிரிவில், திறமைக்கான விருது பெற்றுள்ளது. இங்கு பழந்தமிழ்க் கலைகளும் இலக்கியங்களும் சிறப்புற்றிருந்தன.

வெருகல் தொடக்கம் - கூமுனை வரையுள்ள மட்டக்களப்பு தமிழகத்தில் தென்கிழக்கில் அமைந்துள்ள தம்பிலுவில் பல வரலாறு சிறப்புகளைக் கொண்டுள்ளது. பழந்தமிழ் பண்பாட்டுடன் வாழ்ந்த தமிழர்கள் கலை பண்பாடுகளையும் பாதுகாத்தனர். சிற்றரசர்கள் இவற்றுக்கு உதவினர். பாண்டி நாட்டினருக்கும், திருக்கோவில் மக்களுக்கும் தொடர்பிருந்தமை க்குச் சான்றாக இவர்கள் காணப்படுகின்றனர். (உ-ம் தம்பிலுவில் கண்ணகி அம்மன் கோயில்) (திருக்கோயில் சித்திரவேலாயுத முருகன் கோயில்) திருக்கோயிலின் பழம்பெரும் வரலாறும் அங்கு வாழ்ந்த மக்கள் ஆதிதிராவிடர். திருக்கோயிலின் தோற்றம், கட்டுவித்த அரசர்கள் போன்ற சிறப்பம்சங்கள் கூறப்படுகின்றன. இந் நூலில் "தம்பட்டை" ஊரின் பெயர் வரக்காரணமும் கூறப்பட்டுள்ளது. "தம்பதிவில்", தம்பிலுவில் ஆன வரலாற்றையும் ஏழுமன்னர்களின் ஆட்சியையும் ஆசிரியர் கூறியுள்ளார். திருக்கோயில், தம்பிலுவில் பிரதேசங்களில் ஏழுகுடிகளின் தோற்றமும் பரம்பலும் இலக்கிய வளர்ச்சியும் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மழைக்காவியம், கண்ணகியம்மன் பள்ளு மற்றும் கொம்பு விளையாட்டு என்பன தம்பிலுவில் ஊர்ச் சிறப்புகள் சொல்லப்படுகின்றது.

சித்தி விநாயகர், சிவலிங்கப்பிள்ளையார் இவர்களால் வழிபடப்பட்ட தெய்வங்களாகும். வசந்தன் பாடல்கள் சிறப்புற்று விளங்கினதாக கூறப்படுகின்றது. குலவிருதுகள், விருந்தோமல், குரவையிடல், குடுக்கை கூறுதல் பிரதான பிரதேச வழங்கள் ஆகும். புராதான காலத்தில் வழக்கில் இருந்த செந்தமிழ் சொற்களும் அதன்

கருத்துக்களும் இப்பிரதேச மொழிச் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது. இங்கு வாழ்ந்த பெரியார்களின் ஆயுர்வேத வைத்திய முறைகளும் மூலிகைகளைப் பற்றிய குறிப்பும். பெரிதும் பயன் தர வல்லன. நிலம், பயிர் வகைகள் மற்றும் இயற்கை வளங்கள் பற்றி எடுத்துக் கூறப்படுகிறது.தம்பிலுவில் மக்களின் கலை, கலாசாரப் பண்பாடு, வாழ்க்கை முறைகள் மற்றும் பராம்பரிய வழக்கு முறைகள், மக்களின் வாழ்வியல் முறைகளை விபரிக்கின்றது. பல சமூக சேவையாளர்களும் தமது சமூக வளர்ச்சிக்காக பணியாற்றியுள்ளனர். இப் பிரதேசத்தின் கல்வி வளர்ச்சி முக்கியமாகக் கருதப்பட்டது.

ஆகவே இந்நூல் தம்பிலுவில்லைப் பற்றிய சிறப்பான வரலாறு, கல்வி, கலை, இலக்கிய பண்பாட்டு விடயங்களை தாங்கி வந்துள்ளது. மேலும் பல நூல்கள் இவ்வாசிரியர் வெளியிட்டு வைக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

கலாநிதி அனுசியா சேனாதிராஜா,
சிரேஸ்ட விரிவுரையாளர்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்,
ஒலுவில்.

## சிறப்புரை

திருக்கோவில் பிரதேசத்தின் தம்பிலுவூரில் பாரம்பரியம் வாழ்ந்த மக்களது மரபு முறைகளும் அவர்களுக்கு பிரதேசத்தில் இருந்து வந்த பெருமையும் ஆதரவும் கீழ்ப்படிவும் ஒவ்வொரு தொழில் செய்பவர்களுக்கும் உரிய கடமைகளும் செயற்பாடும் ஒவ்வொருவருக்கும் இருந்த திறமைகளும் மக்களிடம் பதிந்திருந்த தன்மையினையும் அவர்கள் தங்கள் பிரதேசத்தில் மட்டுமல்லாமல் வேறுபகுதிகளிற் சென்று திறமையை நிரூபித்து பரிசில்களைப் பெற்றுக் கொண்டமையும், ஆலயங்களின் ஆரம்பங்களும் மக்களது பங்களிப்பும், மரபு முறை மாறாத நிர்வாகமும் தொண்டுகளும், தொழிலும் தொழில் செய்வோரது செயற்பாடும், பழமை அறிந்து உணரமுடியாது இருந்த இக் காலத்து மக்களுக்கு திரு.ச.திருஞானமூர்த்தி அவர்கள் மிகவும் சிரமத்தின் மத்தியில் "தம்பதி நல்லாள் - தம்பிலுவில் ஊர்ச்சிறப்பு வரலாறு" என்னும் இந்த நூலின் மூலம் திருக்கோவில் பிரதேசத்தின் தொன்மையையும் நடைமுறைகளையும் எல்லோரும் அறிந்து கொள்ளக் கூடிய விதத்தில் எடுத்துக் கூறி இருப்பது ஒரு வரவேற்கத்தற்க விடயமாகும்.

இந்நூலானது இனி எல்லோரது கைகளுக்கும் கிடைத்து தங்களது சந்தேகங்களை இலகுவாக அறிய வழி வகுத்துக் கொடுக்கும் என்பதோடு மட்டுமல்லாமல் அக்காலத்து மக்களின் ஒற்றுமை என்பவற்றைப் பார்த்து பிரதேசத்தின் வளர்ச்சிக்கும் செயற்பாட்டிற்கும் ஒத்துழைத்து.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு கொள்வது

என்ற வாக்கிற்கு ஏற்பவாழவேண்டும் என வேண்டிக் கொள்வதுடன் இப்படியான சிறப்புப் பொருந்திய விடயங்கள் அடங்கியுள்ள நூல்களை எமக்குத் தந்து பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழவும் அன்னாரின் முயற்சிக்கு இறைவன் துணை நிற்க வேண்டும் எனவும், வேண்டி வாழ்த்துகின்றேன்.

நன்றி

இராசையா வின்சண் கமலராஜன்,
தவிசாளர்,
திருக்கோவில் பிரதேசபை,
தம்பிலுவில்

# என்னுரை

தம்பதி நல்லாள் ஊர்ச்சிறப்பு என்னும் நூல் திருக்கோவில் பிரதேச சரித்திரத்தைக் கூறுகின்றது. ஒல்லாந்தர் காலம் வரையுள்ள ஒரு சில திருக்கோவில் பிரதேச சரித்திரம் இந்நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. திருவளரிலங்கை தன்னில் திகழ் மட்டக்களப்பின் சரித்திரத்தை அறிவதற்கு மட்டக்களப்பு மான்மியம் என்னும் சரித்திர நூல் அமைந்திருப்பது போல் திருக்கோவில் பிரதேசத்துக்கு தம்பதிநல்லாள் தம்பிலுவில் ஊர்ச்சிறப்பு என்னும் நூல் எழுத்தப்பட்டிருக்கின்றது. இந்நூலில் இடைக்கிடையே வரலாறுகளும் பொதிந்தும் காணப்படுகின்றன.

இதுவரை திருக்கோவில் பிரதேசம் அடங்கிய வரலாறு, மட்டக்களப்பு மான்மியம் எனும் நூலில் அடங்கி இருந்தது. பிந்திய சில தகவல்களிலும் கோவில்களிலும் சில நூல்களிலும் அடங்கி இருந்தன. சென்ற சில ஆண்டுகளாக திருக்கோவில் பிரதேசத்தின் சரித்திரத்தை அங்கொன்றும் இங்கொன்றுமாக வெளிவந்த நூல்களில் இருந்து வித்து வான் பண்டிதர் வீ.சி கந்தையா அவர்கள் எழுதி வெளியிட்ட மட்டக்களப்புத் தமிழகம், மற்றும் இலக்கிய செம்மல் கலாசூரி இலக்கிய கலாநிதி F.X.C. நடராசா அவர்களினாலும் எழுதி வெளி வந்த நூலில் இருந்து சில முக்கிய குறிப்புக்களை அறிந்து ஒப்பு நோக்கி சிறப்புடைய தெனக் கண்டு இந் நூல் வடித்து எடுத்ததில் வெளிவருகின்றது.

இந்நூற் பதிப்பில் தவறுகள் இருக்கலாம். சீர்மேவு தம்பிலுவில் சித்தி விநாயகரையும், ஸ்ரீ கண்ணகி அம்மனையும், மற்றும் திருக்கோவில் சித்திரவேலாயுதரையும், குல தெய்மாக வழிபடும் தம்பிலுவில் எனும் பழம் பதி நான் பிறந்த கிராமம். இக்கிராமத்தில் நிறைந்திருந்த தமிழ், சைவம், கலை, கலாசாரம், மனித நேயம் போன்ற பண்டைய பழங்கால மக்களின் பழக்க வழக்கங்களை நினைக்கும் போது எனது உளம் பூரிப்படைகிறது. இதே வேளை சிறப்புமிக்க பெருமை வாய்ந்த பல பழக்க வழக்கங்கள், வழிபாட்டு

மரபுகள் பெரும்பாலானவை காலச்சூழலில் சிக்குண்டு மறைந்து போயுள்ளதைக்கண்டு எனது உள்ளம் வேதனையடைகின்றது. பண்டைக் காலத்திலே வரலாற்றுச்சிறப்புமிக்க செழுமை மிக்கதுமாய் வழங்கியிருந்த இத் தமிழ்க் கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டே அக்காலத்தில் திருக்கோவில், தம்பிலுவில் பகுதியில் தமிழ்க்கலைகள், இலக்கியங்கள் செழித்திருந்தன. இவற்றையெல்லாம் இன்றைய இளம் தலைமுறையினரும் எதிர்காலச் சந்ததியினரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதைக் கருத்திற் கொண்டே இந்நூல் உருவாக்கம் பெற்றுள்ளது.

எனது எண்ணம் ஈடேறியதே எனக்குப் பெரும் பேறாக அமையும், இது எனது கடமைகளில் ஒன்றெண்பதே நிறைவான பொருளாகும். பல நூல்கள் கற்றுணர்ந்ததாலும், பல பெரியோரிடம் கேட்டறிந்தவற்றையும் ஆதரமாகக் கொண்டு, எனது அறிவுக்கும், ஆற்றலுக்கும், எட்டிய வகையில் ஒப்புநோக்கி, இந்நூலை உருவாக்கியுள்ளேன். இந்நூல் எனது நான்காம் பதிப்பு. இது ஒரு வரலாறு சார்ந்தது என்ற வகையில் சில தவறுகள் இருப்பினும், நமது பாரம்பரிய பெருமைகள் பதிவு செய்யப்பட்டு, பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஆர்வத்துடன் தமிழ் அறிஞர்கள், பெரியோர்கள், புலவர்கள், கல்விமான்கள் பிழைபொறுக்க வேண்டியது தலையாய கடைமையாகும்.

நன்றி

சிவதொண்டன்
ச. திருஞானமூர்த்தி

## நன்றிக்கு உரித்தானவர்கள்

மாண்புபுகழ் தம்பதி நல்லாள் தம்பிலுவில் ஊரின் மகிமையும், பல்வகை அறிஞர்கள் பலர் வாழ்ந்த இப்பிரதேசத்தின் சிறப்பையும் இறையருளால் தமியேன் ஆகிய சிறியேன் அச்சுவாகனம் ஏற்ற பல வழிகளில் உதவியும் ஒத்தாசையும் வழங்கிய மற்றும், இந்நூலுக்கு முகவுரை, வாழ்த்துரை, அணிந்துரை, என்னைப் பற்றி சில வார்த்தைகள் கூறி இந்நூல் உருவாக்கத்திற்கு உதவி புரிந்தவர்களுக்கு நன்றி கூறக்கடமைப் பட்டுள்ளேன்.

அந்த வகையில்

01. இந்நூலுக்கு முகவுரை வழங்கிய கௌரவ செல்வம் அடைக்கலநாதன் பாரளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், பாரளுமன்ற உறுப்பினருமான அந்நாருக்கு, முகவுரை வழங்கியதற்காக நான் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

02. அத்தோடு இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய திரு.வ.ஜெயந்தன் B.Sc (அ.இ.சமாதானநீதவான்) அதிபர் தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலயம், திருக்கோவில் ஆலய வண்ணக்கர் அவர்கட்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

03. இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய கலாநிதி அனுசியா சேனாதிராஜா சிரேஷ்ட விரிவுரையாளர். தென்கிழக்கு பல்கலைக்கழகம் அவர்களுக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

04. திரு.அ.உமாமகேஸ்வரன் பணிப்பாளர் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் ஐயா அவர்களுக்கும். வாழ்த்து செய்தி மனமுவந்து நான் கேட்டுக் கொண்டதற்கமைய இணையத்தளத்தின் மூலம் அனுப்பிவைத்தமைக்காக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

05. மேலும் இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய கலாபூஷணம் த.மகேந்திரா சமாதான நீதவான் முன்னாள் திருக்கோவில் ஆலய வண்ணக்கர் அவர்களுக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

06. மேலும் இந்நூலில் என்னைப்பற்றி பின் அட்டைப்படத்தில் ஒரு சில வார்த்தைகள் கூறி தெளிவுபடுத்திய மதிப்புக்குரிய திரு.திருமதி.புஸ்பவதி கோபாலராஜா ஒய்வுநிலை உதவிக் கல்விப்

பணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) திருக்கோவில் வலயக்கல்வி அலுவலகம், தம்பிலுவில் அவர்கட்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

07 இதே போன்று இந்நூலுக்கு சிறப்புரை வழங்கிய இராசையாவின்சன் கமலராஜன் தவிசாளர், திருக்கோவில் பிரதேசசபை தம்பிலுவில் அவர்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

08. அத்துடன் இந்நூலுக்கு முன்முகப்பு அட்டைப்படம் வரைந்து தந்த எனது அன்புக்குரிய மாமனார் ஓவியர், இ.விநாயகமூர்த்தி அவர்களுக்கும் நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன.

09. அத்துடன் மிகமுக்கியமான தகவல்கள் ஆதாரங்கள் என்பன இந்நூலில் கூறப்படுகின்றன. ஒரு சில பெரியார்களின் தகவல்களைத் தந்தவர்களுக்கும் மேலும் என்னுடன் நான் அழைத்த போது எல்லாம் மறுப்பு தெரிவிக்காமல் காலம், நேரம் பாராமல் ஒத்துழைப்பு வழங்கிய பெரியார் சமூக சேவையாளர் திரு. ஆர். தேவராஜா அவர்கட்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

10. மேலும் இந்நூலை ஆழமாகவும் நேர்த்தியாகவும் கணணிமயப்படுத்திய நெட்சிட்டி உரிமையாளருக்கும் மேலும் அச்சு வாகனம் ஏற்றிய அச்சுப்பதிப்பகத்தின் உரிமையாளருக்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன்.

11. மேலும் இந்நூலை கணணிமயப்படுத்திய போது, அச்சுப் பிழைத்திருத் தம் செய்த அன்புக்குரிய அண்ணன் திரு.சி.மகேஸ்வரன் ஓய்வுநிலை பிரிவு உதவியாளர் (நீர்ப்பாசனத் திணைக்களம்) அவர்களுக்கும் நன்றிகளைக் கூறிக் கொள்கின்றேன்.

12. மேலும் எனது ஊக்கத்திற்கும் ஆர்வத்திற்கும் புத்துணர்வு ஊட்டியும் எனக்கு பல வழிகளிலும் ஆலோசனை வழங்கிய அன்பான மனைவி ஆசிரியை திரு. திருமதி. தி. புனிதவதி அவர்கட்கும். அத்துடன் என்னுடன் கூட இருந்து அறிவுரையும் ஆர்வமும் காட்டி எழுத்தில் பிழைத்திருத்தம் செய்து தந்த என் அருமை மகள் தி.சங்கவி (கிழக்கு பல்கலைக்கழகம் கலைப்பீடம் 2ம் வருடம்) அவர்களுக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

பொருள் அடக்கம் பக்க எண்

1. ஊர்ச் சிறப்பு : 01
2. வரலாற்றுப் பின்னணி : 02
3. திருக்கோவில் பூர்வீக வரலாறு : 03
4. திருக்கோவில் உருவாக்கம் : 04
5. திருக்கோவில் பற்றி இன்னும் ஓர் வரலாறு கூறுகின்றது. : 04
 I. வேல் திரும்பிய கதை (கர்ண பரம்பரைக் கதை)
 II. பாட்டி பாலகியாகிய கதை
6. திருக்கோவில் பண்டைய காலத்துப் பெயர் : 08
7. தம்பிலுவில் எனப் பெயர் வரக் காரணம் : 11
8. திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தின் பூர்விக பெயர்கள் : 11
 I. நாகர் முனை (நாகர் மேடு)
 II. உன்னரசு கிரி
9. திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் ஏழுமன்னர்களின் ஆட்சி : 13
10. தம்பிலுவில் கண்ணகியம்மன் கோயில் வரலாறு : 14
 I. தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய திருக்குளிர்த்தி உற்சவ வரலாற்றுப் பார்வை
11. மக்கள் குடியேற்றமும் வாழ்வும் : 22
12. திருக்கோவில் தம்பிலுவில் இலக்கிய வரலாறு : 26
13. தம்பிலுவில் தம்பதி நல்லாள் ஊர்ச் சிறப்பு : 29
14. இப் பகுதி மக்களின் கொம்பு விளையாட்டுச் சிறப்பு : 31
 I. கொம்பு விளையாட்டு
 II. போர்த்தேங்காய் அடித்தல்
 II. கொம்பு வகைகள்
15. தம்பிலுவில் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வரலாறு : 34
16. ஸ்ரீ களுதாவளைப் பிள்ளையார் (ஆலய வரலாறு) : 35
17. தம்பிலுவில் திருக்கோவில் பிரதேசமக்கள் வசந்தன் பாடல் : 36
 I. வேளாண்மை வெட்டு வசந்தன்
 II. உப்பட்டி கட்டு வசந்தன்
 II. சூடு வசந்தன்
 IV. சூடு போடு வசந்தன்
 V. போடியார் வீட்டுக்கு புதிர் காவுதல் (பொலி காவுதல்)
18. திருக்கோவில், தம்பிலுவில் பூர்விக பழக்க வழக்கங்கள் : 39
 I. விருந்தோம்பல்
 II. குரவை இடல்

| பொருள் அடக்கம் | பக்க எண் |
|---|---|

19. தம்பிலுவில் செந்தமிழ்ச் சொற்கள் : 43

I. போடியார்

II. முல்லைக்காரன்

III. குருவிக்காவல் காரன்

IV. வட்ட விதானை

V. வயல் நிலம்

VI. வக்கடை, வரம்பு

VII. நிலையெடுப்பு

VIII. இரட்டிப்பு

IX. விதை நெல்

X. அறுவடை - குடுதி முடிதல்

XI. புதிர் எடுத்தல்

XII. ஒட்டுத்தாழ்

XIII. சூடு போடுதல்

XIV. பொலி

XV. அவரி

XVI. மரக்கால்

XVII. கைப்பெட்டி

XVIII. களவட்டிப் பொங்கல்

20. பேச்சு வழக்குத் தமிழ்ச் சொல் : 47

21. திருக்கோவில் தம்பிலுவில் பூர்வீக துறைமுகச் சிறப்பு : 55

I. இப் பிரதேசத்தில் ஏற்பட்ட பேரழிவுகள்

22. தம்பிலுவிலில் வாழ்ந்த பெரியார்கள் : 58

I. வித்தகனார் வில்லியத்தார் (மூத்தம்பி)

II. குஞ்சித் தம்பி பண்டிதர்

III. தனவந்தர் அரனம் பொலியானை

IV. ஆர்.டபிள்யூ.வி.அரியநாயகம்

V. சங்கீத பூஷணம் சி.கணபதிப்பிள்ளை

VI. சமூகஜோதி நடராஜா தர்மலிங்கம்

VII. பாலபண்டிதர் ஓய்வுபெற்ற அதிபர்
திரு.ச.வன்னியசிங்கம்

VIII. திருநாவுக்கரசு நாயனார் குரகுலத்தின் ஸ்தாபகர்.
அமரர். தம்பையா அடிகளார்

23. திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் காணப்பட்ட மூலிகை வகைகள் (ஆயுர்வேத வைத்தியம்) : 72

| பொருள் அடக்கம் | பக்க எண் |
|---|---|
| 24. இப்பிரதேசத்தில் வாழ்ந்த ஆயுர்வேத வைத்தியர்கள் | : 72 |
| I. முருகப்பன் தாமோதரம் | |
| II. கதிரமலை சரவணமுத்து வைத்தியர் (தம்பிலுவில்) | : 73 |
| III. கோணாமலை வைத்தியர் (தம்பிலுவில்) | |
| IV. நாச்சி கௌண்டர் வைத்தியர் (தம்பிலுவில்) | |
| V. வைத்திய திலகம் முருகப்பன் தாமோதரம் வைத்தியர் (தம்பிலுவில்) | |
| VI. நாகன் பரிகாரி (தம்பிலுவில்) | |
| VII. கந்தையா பரிகாரி (திருக்கோவில்) | |
| VIII. இளையதம்பி பரிகாரி (திருக்கோவில்) | |
| 25. இப் பிரதேச நில அமைப்பு விஸ்தீரணம் | |
| 26. பயிர் வகைகள். | |
| 27. அக்கால மக்களின் குடியுருப்புக்கள் | : 80 |
| I.நெற்பயிர் செய்கை 8994 ஏக்கரிலும் | : 82 |
| II. தென்னை 2195 ஏக்கரிலும் | : 83 |
| 28. பெரிய களப்பு முகத்துவாரச் சிறப்பு | |
| 29. நால்வகை திரவியங்கள் | |
| I. காடு தரும் செல்வங்கள் | : 85 |
| II. நிலம் தரும் திரவியங்கள் | : 86 |
| III. நீரில் இருந்து பெறும் செல்வங்கள் | |
| 30. போக்குவரத்துச் சாதனங்கள் | : 88 |
| 31. தம்பிலுவில் பிரதேச மக்களின் கலை கலாசார பண்பாட்டு மரபு வாழ்க்கைப் பாரம்பரியங்கள் | : 91 |
| 32. அரும்பணிக்கான அமைப்புக்கள் | : 93 |
| 33. தம்பிலுவில் ஊரின் முதல் பாடசாலை ஆரம்பம் | : 95 |
| 34. திருக்கோவில், தம்பிலுவில் பிரதேசத்தில் வாழ்ந்த குறவர் குலம் | : 98 |
| 36. திருக்கோயில் (தூண் கல்வெட்டு) (விஜயபாகு என்ற மகோன் பொறித்தது) | : 102 |
| I. திருக்கோவில் துண்டுக்கல்வெட்டு (விஜயபாகு என்ற மகோன் பொறித்தது) | |
| 37. மாகோன் வகுத்த வன்னிமை (மட்டக்களப்பு மான்மியம்) முற்குகர் வன்னிமை | : 105 |
| 38. முடிவுரை | : 108 |
| 39. பழமையான சுவடுகள் | : 112 |

## 01. ஊர்ச்சிறப்பு

திருவளரிலங்கை தன்னில் திகழ் மட்டக்களப்பின்
தெற்கே திருக்கோவில் சிறந்த பிரதேசம்
அதிலூர் தம்பிலுவில் தம்பதி நல்லாள் ஊர்சிறப்பும்
குருபரன் தனைப்போற்றி கூறும்மிச் சரித்திரத்தை

வரு பொருளாக வாழ்த்தி மானிலத்தெவரு மோத
மருமலர்கரத்தான் யானை மாமுகன் காப்பதமே
பல்வளம் செறிந்த பழம் தமிழ் மக்களும்
நல் வயல் சூழ்ந்த நலம் தரும் தெங்கோடு கமுகும்

செந்நெல்லும் தேன் சொரியும் தம்பிலுவில் ஊர்
திருக்கோவில் பிரதேசம் ஊர் தம்பிலுவில் : அதில்
நில வளம் நீர் வளம் விளை நிலம் தென்னை
முண்டகம் செவ்வந்தி திருவாட்சி மல்லிகை

மாட்சிமை தங்கிய சிறந்த பதி தம்பிலுவிலூர்
வீசி வீதியிலே மணல் திட்டுப்பகுதியிலே
சண்முகனார் தன் மகன், தங்கைப்பிள்ளை ஈன்ற மகன்
செப்பினான் சிவதொண்டன் சிறந்த தம்பிலுவிலூர்
சிறப்பு

# 02. வரலாற்றுப் பின்னணி

இலங்கையின் வரலாற்றில் திருக்கோவில் பிரதேசமென்று குறிப்பிடும்பொது கிழக்கிலங்கை மட்டக்களப்பு பிரதேசமாகவே பரந்து காணப்பட்டது. வெருகல் தொடக்கம் கூமுனை வரை மட்டக்களப்பை இது குறிப்பதாகும். பண்டைய காலம் தொடக்கம் தமிழும் சமயமும் சிறப்புடன் விளங்கி வரும் இப் பிரதேசத்தை வித்துவான் வி.சி. கந்தையா அவர்கள் மட்டக்களப்புத் தமிழகம் என்று குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பின் தெற்கே அம்பாறை மாவட்டம் அமைந்துள்ளது. தற்போது திருக்கோவில் பிரதேசம் பற்றி ஆராயுமிடத்தில் பண்டைய மட்டக்களப்பின் அரசியலைப் பொறுத்தமட்டில் யாழ்ப்பாண தமிழரசில் காணப்படுவது போன்று திட்ட வட்டமான அரசியல் ஆதிக்கம் இங்குள்ளோருக்கு இருந்ததாக கூற முடியாது. எனினும் பழந்தமிழ் குடியினராய் இங்கு வாழ்ந்த மக்கள் மற்றும் தமிழ்சிற்றரசர்களும் தமிழ் கலை தொடர்பு பண்பாடு முதலானவை நம் நாட்டை விட்டு நீங்காதவாறு பாதுகாத்து வந்திருக்கின்றனர். சமயம், சிற்பம், இசை, நடனம் போன்ற கலைகளில் நல்ல ஆர்வம் கொண்டிருந்தனர். அதற்கேற்ற மன்னர்களும் தேவை ஏற்பட்ட போது, இந்தியா முதலான நாடுகளில் இருந்து, வல்லோரை வரவழைத்து இக் கலைகளை வளர்த்துள்ளனர். இதற்கு ஆதாரமாக மட்டக்களப்பு தமிழர்களின் ஆர்வத்துக்கு (சிற்பக்கலை) திருக்கோவில் அமைந்துள்ள மிகப்பழங்காலத்து இந்திய சிற்ப வேலைப்பாடுகள் ஒரு எடுத்துக்காட்டாக இருந்திருக்கின்றன.

சோழர்களால் ஆதியில் இரு முறையும் பின்னர் பாண்டியனால் ஒருமுறையும் அக்கோயில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. கி.பி. (*1315* இற்குப் பிறகு) பாண்டிய நாட்டினருக்கும் (மட்டக்களப்பு) திருக்கோவில் பிரதேசத்தில் இங்கு வாழ்ந்த மக்களுக்கும் கலை உறவுகள் ஏற்பட்டமைக்கு சான்றுகள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக திருக்கோவிலை அண்டிய பழம்பெரும் பதி

தம்பிலுவில் ஊரில் உள்ள கண்ணகி அம்மன் கோவிலுடன் அத் தொடர்பினை கொண்டிருந்தமை சாத்தியமாகும். இவ் விரு ஆலயங்களின் அமைப்பில் வரலாற்று ஓவியங்களை மட்டக்களப்பு மான்மியம் எனும் நூலில் காணக் கூடியதாகவுள்ளது.

## 03. திருக்கோவில் பூர்விக வரலாறு

மட்டக்களப்பிலுள்ள முருகன் ஆலயங்களைப்பற்றி செய்திக் குறிப்பொன்றை முதலில் அறிவதில் பயன்தருவது சுப்ரமணியருடைய ஆணைப்படி சூரனைக் கொன்று, வெற்றியுடன் மீண்ட வேலானது, உக்கிரத்தோடு வரும் வழியில் எதிர்பட்ட வாகூரமலையை இரு கூறாகப் பிரித்தெறிந்து, கடலில் மூழ்கிய பின் மூன்று கதிர்களைச் சிந்திச் சென்றது என்றும், வேலுருக் கொண்ட அக் கதிர்கள் மூன்றும், முறையே ஒன்று உகந்தை மலையிலுள்ள உச்சியிலும் மற்றதொன்று திருக்கோவிலில் ஓர் வெள்ளை நாவல் மரத்திலும் மண்டூரில் ஓர் தில்லை மரத்தின் மீது இருந்தன என்றும், அறிய முடிவதோடு அவ்வவ் இடங்களில் வாழ்ந்த மக்கள் யாவரும் ஆதிதிராவிடராகிய வேடகுல மக்களேயாவர் எனவும் அறிய முடிகின்றது.

இம் மக்கள் இதை வியப்புடன் நோக்கி கொத்துப்பந்தல்களால் ஆலயம் அமைந்து வழிபட்டனர் என்று கூறப்படுகிறது. (மட்டக்களப்பு மான்மியம்) உகந்தை மலையிலுள்ள வேலும், கற்சுனையும், அவ்விடத்தில் உள்ள தீர்த்தங்களும் பக்திக்குரிய பழம் பெரும் சின்னங்களாக இன்றும், இப்பகுதி மக்களால் போற்றப்பட்டு வருகின்றன. மண்டூர் முருகன் ஆலயமும் அத்தகையதே ஆகும். இவ்விரண்டு கோயில்களையும் பார்க்க வரலாற்றோடு தொடர்புடைய அதிக செய்திகளை கொண்டிருப்பது திருக்கோவிலே ஆகும்.

## 04. திருக்கோவில் உருவாக்கம்

(திருக்கோவில்) வேடர்களால், இலை குழைகளைக் கொண்டு முருகனுக்கு அமைக்கப்பட்டிருந்த கோவிலை, தமிழர்களின் இரண்டாம் படை எழுச்சியின் போது வந்த சோழநாட்டு மன்னர் ஏழுபேர்களால் கட்டி முடிக்கப்பட்டது என்றும், வேடரது பந்தலுக்குள் வடமுகமாக வீற்றிருந்த வேலானது புதிய கற்கோவிலுக்குள் கிழக்குமுகமாக திரும்பிய காரணத்தினால் இக் கோயில் திரும்பியகோவில் திருக்கோயில் என பெயரிட்டார்கள் என்றும், திருக்கோயில் பற்றிய பதிகம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளதாக மட்டக்களப்புத்தமிழகம் (பக்கம் 407) கூறுகிறது. இத் தமிழரின் படை எழுச்சி இரண்டாம் படை எழுச்சி ஆகும். இது வலகம்பாகு காலத்திலே தமிழர்கள் ஏழுபேரால் இலங்கைக்கு படையெடுத்து வந்த செய்தியை குறிப்பிடுகிறது. (கி.மு 103)

## 05. திருக்கோவிலைப் பற்றி இன்னும் ஓர் வரலாறு கூறுகின்றது

பண்டைய மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் திசையில் அறுபத்து நான்கு மைல் தொலைவில் திருக்கோவில் அமைந்துள்ளது. இப்பகுதி பல ஆண்டுகளுக்கு முன்னர் வெள்ளை நாவல் தருக்களும் சுவை தரும் நீர்ச் சுனைகளும் அமைத்து இயற்கை வளத்தோடு இலங்கியதால் வெண்நாவல் பதியென்றும் மக்களால் கூறப்பட்டது.

முன்னொரு காலத்தில் வீரமகேந்திராபுரியை ஆட்சி புரிந்த சூரபத்மனுடைய கொடுமைகளுக்கு அஞ்சியதேவர்கள், பரம்பொருளாகிய சிவபெருமானிடம் முறையிட இதற்கிணங்கிய சிவபெருமான் கந்தப்பெருமானை சூரபத்மனிடம் அமர்புரிய ஆணையிட்டார். முருகனின் அருட்சக்தி நிறைந்த அநேக பாணங்கள் அவுண சேனைகளையும், தலைவர்களையும் வதம் செய்தன. இதிலோர் சித்திர வேலாயுதம் அசுரன் நெஞ்சைத்

துளைத்து வாகூர மலையை இரு கூறாக்கி மூன்று குளங்களை அகழ்ந்து பின்பு வேகம் தணித்து மேற்குறித்த வெள்ளை நாவல் மரத்தில் வந்து தங்கியது.

அக்காலத்தில் காடாக இருந்த இப்பகுதி வெண்நாவல் தரு என்று அழைக்கப்பட்டது இக் காடுகளில் வன வேடர்கள் காடு சுற்றி வந்த வேளையில் இவர்கள் செய்த தவப்பயனால் ஓர் வெண்நாவல் மரத்தில் ஒளி வீசும் தங்கவேல் ஒன்று பிரகாசிப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்து அவ்விடத்தில் கொத்துப்பந்தல் ஒன்று இட்டு வழிபட்டு வந்தனர். அதனை சில காலம் கடந்த பின்னர் குளக்கோட்டன். பரராஜசிங்கன் என்னும் அரசர்களுக்கு அறிவிக்க அரசர்கள் அங்கு விரைந்து வந்து சித்திர வேலாயுதர் எனப் போற்றிப் பணிந்தனர். பின்பு தென் இந்திய சிற்பாசத்திர முறைப்படி ஆலயமொன்று அமைத்து ஆலய பணிக் கென்று மக்களையும் குடியேற்றி மானியமும் வழங்கினர். இது வேல் வந்து தங்கிய கதை. (மட்டக்களப்பு சைவக் கோயில் பக்கம் 57 குறிப்பு)

''ஆதி நாளிற் கதிர்காமத் தலத்தினில் ஜயன்சிலை குனித்தெய்தோர் அத்திரச் சோதி பறந்து கஜமுகன் நெஞ்சை துளைத்து உதிரம் குடித்து ஆதி பட்டதோர் வாகூரக் கல்லைப் பிளந்து இருபதி செய்து முக்குளம் கவ்வி ஓதும் கடல் ஒலி தீர்த்து வெண்நாவலில் உற்றபதி என்றுள் கறியதோ"

என்னும் பழம்பாடல் உணர்த்தி நிற்கின்றது. வேல்வந்து தங்கிய காரணத்தால் வேலூர் என்றும் குறிப்பிடுவர்.

"தெங்கு திரள் சோலை செந்தமிழின் சாலைகளும் எங்கும் மலர்
ஓடைகளும் இசைந்த தென்றல் மேடைகளும் கங்குல் பகல்
எல்லையெல்லாம் கந்த நம என்னும் ஒலி பொங்கி வரும்
கந்த நகர் என்றறிவாய் பைங்கிளியே"

இப்பாடல் இசைமனி சி.க.கணபதிப்பிள்ளை என்பவரின் பாடலுக்கமைய கந்தபாணத்துறைதான் திருக்கோவில் என்று கூறலாயிற்று.

## I. வேல் திரும்பிய கதை (கர்ண பரம்பரைக் கதை)

இவ்வாலயத்திற்கு பூசை செய்யும் பூசகர் ஒரு நாள் வழமையாக அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சி பூசையை முடித்து விட்டு எதிரேயுள்ள கடற்கரைக்குச் செல்லலானார் சூரியன் உதயமாகும் அவ்வேளையில் கதிரவன் செங்கிரகணக்கனகம் எனக் கனந்தொலிரும் காட்சி கொண்டு கந்தன் பொற்கோயில் வாயிலுக்கு மீண்டும் வந்தார்.

முருகனிடம் என் குமரா கதிரவன் உதயம் கண்டு உந்தன் திருவடி நிறைவு கொண்டேன். வடக்கு முகமாக அமைந்திருக்கும் நின் ஆலயம் கிழக்கு வாயிலாக அமைந்திருந்தால் தினமும் தினகரன் தன்செங்கதிர்க் கரங்களால் நின் சேவடி பற்றி அடிவருடி வணங்குவேனே இவ்வெளிக் காட்சி காண அடியேனுக்கு கருணை புரியமாட்டாயா? என்று இரந்து நின்று வேண்டினார்.

அன்று முழுவதும் இறைநாமத்தை உச்சரித்தபடியே இருந்தார். பொழுது விடிந்து தன்காலக் கடமைகளை முடித்துப் பூசைக்குச் சென்றார். கதவைத் திறந்தார் வழமையாக அங்கு பூசை செய்யும் சித்திர வேலைக் காணவில்லை. பதை பதைத்தார் விழுந்தார் எழுந்து உற்றுப்பார்த்தார் அங்கு வேல் இல்லாமல் இல்லை கிழக்குத் திசையில் திரும்பியிருந்தது. உதய சூரியன் ஒளியும் உள்ளே நுழைவதையும் கண்டார். அர்ச்சகர் ஆனந்தம் கொண்டார். தனது வாழ் நாள் எல்லாம் பெருமான் திருப்பணிக்கே அர்ப்பணித்தார். திசை திரும்பிய அச்சித்திரவேலுக்கு திரிம்பிய காரணத்தால். அன்று தொட்டு திருக்கோயில் சித்திரவேலாயுதர் கோயில் என்னும் பெயர் வழங்கப்பட்டது. என்று கர்ணப்பரம்பரைக் கதை கூறுகின்றது. பக்கம் 58 (சைவக் கோயில்)

## II. பாட்டி பாலகியாகிய கதை

மேலும் கோயில் திருப்பணிக்காக சோழநாட்டிலிருந்து குடிகள் வரவழைக்கப்பட்டனர். அவரவர்களுக்குரிய கடமைகளை தவறாது செய்து வந்தனர். அதில் குறித்தததோர் குடிசையில் வாழ்ந்தவளான குழந்தை தங்கம்மா இவளுக்கு சிறுவயதிலிருந்தே சுவாமிக்கு ஆராத்தி எடுக்கும் பணி கொடுக்கப் பெற்றது. கள்ளமில்லாப் பிள்ளையுள்ளம் கொண்ட இச்சிறுமி தன் பணியை பக்தியுடன் செய்து வந்தாள். அவள் வளர்ந்த பின்பும் உலகப் போக்கினை உணர்ந்தாளில்லை. பருவமும் அடைந்தாள் தனது திருப்பணியைக் கைவிடவில்லை. சிலகாலம் தளர்ச்சியுற்ற உடலைச் சுமந்து, முன்னம் போல் உற்சாகமாக தனது பணியை நேரத்திற்குச் செய்ய முடியாமல் இருப்பதை உணர்ந்தாள். அதனால் ஒரு நாள் சாமபூசையின் போது குறித்த பணியைச் செய்யத் தவறினாள். இதனால் கோபமடைந்த ஆலய வண்ணக்கர் அவளுக்கு அப்பணியைக் கொடுக்க மறுத்தார்.

வேறு பெண்கள் ஆராத்திக்கு ஆயத்தமாக நிற்பதைப் பார்த்த தங்கம்மா பாட்டி முருகா, முருகா என ஓலமிட்டாள், ஓடினாள், ஆடினாள், கோயில் முன் விழுந்தாள். தனது மூச்சை விட்டாள் ஆனால் நடந்தது என்ன?

முருகா என உனை ஓதும் தவத்தினர் முதுகில். வியாதி அடைந்து நையார் என்பதினை எல்லோரும் அறியும் வண்ணம் எண்பது வயது தங்கம்மா பாட்டி ஏழுவயதுச் சிறுமியாக மறுநாள் சாம பூசையில் ஆறுமுகனுக்கு ஆராத்தி எடுக்க ஆயத்தமாக நின்றாள். இதைப் பார்த்த பக்தர்கள் எல்லாம் பரவசப்பட்டு மெய் மயிர் சிலிர்ந்தனர்" உருகினர். உள்ளம் உருகினர். கந்தன் கருணையை எண்ணி எண்ணிக் கண்ணீர் உகுத்தனர். தங்கம்மாப் பாட்டி இளையவளாக உருவெடுக்க அருளிய திருக்கோவில் சித்திர வேலாயுதர் திருக்கருணை நாடெங்கும் பரவியது.

“கேளடி பெண்ணே கிழவி இருமலும் கிண்கின் என எண்பதும் ஆனவள் ஆதிநாள் வேலவர் கோயில் அன்றவள் ஆலார்த்தி பிந்தவே சூளும் தவத்தோர் முனிந்திடக் கண்டவள் சொன்ன பலி பீடம் முன்னே” ஏழு வயது இளம் பிள்ளையாய் வர ஈன்ற திருக்கோவில் என்றறியாயோ” என்னும் பாடல் திருக்கோவில் திருவருள் திறத்தையும் விளக்கின்றது.

## 06. திருக்கோவிலின் பண்டைய காலத்துப்பெயர்

திருக்கோவிலின் பழைய பெயர் நாகர்முனை என்றும், கோவில் அமைக்கப் பட்ட பின்னர் அக்கோவிலின் சிறப்பால் இடப் பெயரும் திருக்கோவில் ஆயிற்று, என அறிகின்றோம். பண்டைய மட்டக்களப்பினை பிரசன்னசிந்து என்னும் அரசன் ஆண்ட காலத்தில் திருக்கோவில் உட்பட கிழக்கு மாகாணம் வரை கலிங்க குமாரன் புவனேக கஜபாகு தன்மனைவியுடன் மக்கட்பேறு இல்லாத கவலையால் மனம் வாடி தலயாத்திரை மேற்கொண்டு இராமேஸ்வரம், திருக்கோணேஸ்வரம், திருகோணமலை. என்னும் புண்ணிய பெரும்பதிகளை தரிசித்துக்கொண்டு, நாகர்முனை என்று அழைக்கப்படும். திருக்கோவில் முருகப்பெருமான் சிறப்பைக்கேள்வி யுற்று, மட்டக்களப்புக் தெற்கே உள்ள திருக்கோவிலுக்கு வந்தான். அவனது மனைவியாகிய தம்பதி நல்லாள் ஓர் திருச்சோழ அரசனின் மகளாவாள்.

இவர்களின் வருகையால், நாகர் முனை சுப்ரமணியர் ஆலயத்தை நல்ல முறையில் அமைப்பதற்கு ஓர் சந்தர்ப்பம் உருவாகிற்று. இவர்களது வரவைப் பெற்ற மட்டகளப்பு மன்னரும் புவனேக கஜபாகுவிற்குத் தன் கருத்தை தெரிவித்து அவன் துணையை வேண்டி நின்றான். அதற்கு இணங்கிய தம்பதி நல்லாள் தன் தந்தையாகிய திருசோழனுக்கு, புவனேக கஜபாகுவிடம், நல்ல சிற்பக்கலை கலைஞர்களையும், உதவியாளர்களையும், அனுப்பி

வைக்குமாறு தூது அனுப்பினாள். அவள் விட்ட ஓலையின் படி கைதேர்ந்த சிற்ப வல்லுனர்கள் பலர் நாகர்முனைத் துறைமுகத்தில் வந்து இறங்கினர். இவர்களின் சிறப்பை எடுத்து விளங்குவதானால் திருக்கோவில் திருப்பணியும் நன்முறையில் விரைவிலே நிறைவேறிற்று.

மட்டக்களப்பு பூர்வீக வரலாற்றில் முதன் முதலில் கட்டி முடிக்கப்பட்டது திருக்கோவில் என்பதனால் திருக்கோவில் என அம் மன்னனால் பெயரும் இடப்பட்டது என்றும் ஓர் வரலாறு உண்டு. மட்டக்களப்பு மான்மியத்தின் கூற்றுப்படி கிற்ஸ்து பிறந்த காலத்திலே திருக்கோவில் நல்ல முறையில் அமைக்கப்பட்டது. இது கோயிற்பதிகத்தில் கண்டதாக முற்கூறிய செய்தியின் படி கி.மு முதல் நூற்றாண்டளவில் கோயில் எழுந்திருக்க வேண்டும். இரண்டுக்குமிடையிலுள்ள காலவேறுபாடு ஏறக்குறைய நூறு ஆண்டுகளாக இருக்கும். இருகூற்றுக்களின் படியும் இந்திய சிற்பியினரால் அமைக்கப்பட்டு திருக்கோவில் இரண்டாயிரம் ஆண்டு பழமையை உறுதிப்படுத்துகிறது.

புவனேகபாகுவிற்கு திருக்கோவில் சித்திர வேலாயுதர் அருளால் ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இக் குழந்தை பிறந்த அன்று விடாத தொடர் மழை பெய்த காரணத்தினால் அக் குழந்தைக்கு மேக வர்ணன் என நாமம் சூட்டினான். மேக வர்ணன்னான மநுனேயபாகு என்னும் மன்னன் தந்தைக்கு பின் கலி 3150 (கி.பி 48) உன்னரசுகிரி இராட்சியத்தின் பட்டத்துக்கு வந்தான். தந்தை செய்த திருப்பணியை மேலும் சிறப்பித்து செப்பம் செய்ய எண்ணம் கொண்டான். செப்பனிட சோழ நாட்டு சிற்பிகளை அழைத்து ஏழுதட்டு தூபியும் மதில் மண்டபங்கள், மாதர் சாலை, வாகனவீடு கோபுர தூபியின் மேலே ஏழு தங்கக்குடம் நிறைந்து ஆறு வீதியும் அலங்கரித்து அந்தணர்களால் அபிஷேகம் செய்வித்து வங்கம், கலிங்கம், சிங்கம், சோழ, பாண்டிய மன்னர்களுக்கெல்லாந் தான் செய்த திருப்பணிச் சிறப்பினை அறிவித்தான்.

அவர்களும் மகிழ்ந்து விலையுயர்ந்த பல பொருட்களை ஏழு இராசாக்களிடம் (இது ஏழு பிரதானிகளாக இருக்கலாம்) கொடுத்து நாற்பது சிறைக்குடிகளை உடன் அனுப்பினர் யாவரும் இந்தியாவில் இருந்து கப்பலேறி திருக்கோவிலுக்கு அருகேயுள்ள களப்பில் இறங்கினர். (இக் களப்பு இன்றும் உள்ளது) இக் கோவில் விழாவினை சிறப்பாக நடாத்தி வருதல் வேண்டுமென தம்மை எதிர் கொண்டு வாழ்த்திய அந்தணர்களை 'தம்பட்டர்' என ஏழு அரசர்களும் போற்றினர். 'தம்பட்டர்' என்பது அக் காலத்தில் சோழ மன்னர்களால் கொடுக்கப்படும் உயர்ந்த பட்டமாக இருக்கலாம். இவ்விடம் இன்று தம்பட்டை ஊர் என அழைக்கப்படுகிறது. திருக்கோவில் மநுனேயபாகு காலத்தில் இருந்த மட்டகளப்பு மன்னன் நாம் முன்பு கூறிய பிரசன்னசிந்துவின் மகனான தாஸகன் ஆவான்.

மட்டக்களப்பு மன்னனுடைய ஆட்சிக்கு உட்பட்ட பகுதியிலே திருக்கோவில் இருந்த படியால் அத்தாஸகனுடைய அனுமதியும் ஒத்துழைப்பும் கொண்டே மநுனேயபாகு திருக்கோவிலை புதுபித்திருக்கின்றான். மநுனேயபாகு இந்தியாவில் இருந்து வந்தவர்களை ஆசிர்வதித்து அறுசுவையுடன் அமுதளித்து அபிஷேகமும் செய்து ஆறுகால பூசை நடக்கும் படி ஏழு இராசாக்களையும் படையாட்சி குலத்தில் மூன்று வன்னியர் களையும் வகுத்து இருபாகை முதல்மையாக கலிங்ககுலத்து பிரசன்னசிந்துவினுடைய சந்ததிகளே வர வேண்டும் என்று ஐந்து பண்டாரங்களும், அந்தணர், முதன்மை இராசர் இவர்களது ஊழியர் என்றும் மநுனேயபாகுவும் தாஸனும் கற்பித்தார். என்று வகுத்தமைக்கப்பட்டவற்றையும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. மேலும் கோவிலின் திருப்பணி வளர்ச்சிக்காக பல ஏக்கர் வயல்களைக் கொடுத்ததோடு நீர்பாய்ச்சுவதற்காக ஒரு பெரியகுளத்தையும் சங்கமான் கண்டி மலைக் குன்றின் கீழ் அமைத்துக் கொடுத்தான்.

## 07. தம்பிலுவில் எனும் பெயர் வரக்காரணம்

மநுனேயகஜபாகு திருக்கோவிலுக்குப் பக்கத்தில் மேலும் ஒரு வாவியினை தன் தயாகிய 'தம்பதிவில் நல்லாள்' நினைவால் அமைத்து அதற்கு 'தம்பதிவில்' என்று பெயரிட்டான். 'வில்' என்ற சொல் மட்டக்களப்பிலே குளத்தை குறிக்கும் பழங்காலத்து சொல்லாகும் இக் குளத்தைச் சார்ந்த பகுதியில் அமைந்த ஊரும் அக்காலத்தில் "தம்பதிவில்" என்று இருந்ததாகவும் இன்று தம்பிலுவில் என்று மருவி பெரும் சிறப்புடன் விளங்குவதை நாம் கண்ணுடாக காணமுடிகிறது.

தம்பிலுவில் என்று இங்கு குறிக்கப்படுவது திருச்சோழனின் மகளாகிய தம்பதி நல்லாள் என்னும் இராசகுமாரியின் பூர்விக வரலாறு என்று உணர முடிகிறது. எனவே தம்பதி நல்லாள் வரவாலே தம்பிலுவில் ஊர் என்னும் பெயர் வரக்காரணமாகி காரணப் பெயர் மருவி வந்து தம்பிலுவில் ஆயிற்று (மட்டக்களப்பு தமிழகம், பக்கம் 410 இல் குறிப்பிடப்பட்டுள்ளது)

இராச குமாரி தங்கியிருந்த பதி (இடம்) என்பதால் இப் பெயர் பூர்விகமாக வழங்கி வரலாயிற்று என உணர முடிகிறது.

## 08. திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தின் பூர்விகப் பெயர்கள்

இப் பிரதேசங்களின் வரலாற்று ஆய்வுகள், இலக்கிய குறிப்புக்கள், கலாசார பாரம்பரியங்கள், வெளிநாட்டர் குறிப்பு, கல் வெட்டுக்கள், செப்பேடுகள், கட்டிட இடிபாடுகள், ஓலைச்சுவடுகள், நாணயங்கள், பண்டைய ஊர்பெயர்கள், மேலாய்வுச் சான்றுகள், அகழாய்வுச் சான்றுகள், கிழக்கிலங்கை திருக்கோவில் பிரதேச மரபுக்கதை, புராணக்கதைகள் இவைகளையெல்லாம் நிராகரிக்க வேண்டும். என்பதும் இதன் கருத்துமல்ல நிச்சயமாக அவற்றின் வரலாற்று அடிக்குறிப்புக்கள் இருக்கலாம். ஆனால் அவற்றை நன்கு அலசி ஆராய்ந்து வரலாற்று மூலகங்களுடன் உரசிப்பார்த்த பின்னரே அவற்றை வரலாறாகக் கொள்ள வேண்டும்.

திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் பல்வேறு மரப்புக்கதைகள், கர்ண பரம்பரைக் கதைகள் புராணக்கதைகள் முதலியவற்றை உரசிப்பார்க்க கூடிய வரலாற்றுச் சான்றுகளும் உள்ளன. அவற்றின் துணை கொண்டு இப்பிரதேசத்தின் வரலாற்றை ஓரளவுக்கு ஆதாரபூர்வமாக அறிய முடிகின்றது. திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தின் பூர்விகப் பெயர்கள். நாகர்முனை, என்றும் நாகர் மேடு என்றும் கந்தபாணத்துறை, என்றும் திருவெண்நாவல் பதி, உன்னரசுகிரி, முதலிய பண்டைய பெயர்கள் உள்ளன. அவற்றின் சுருக்க குறிப்புக்கள் பின்வருமாறு

கந்தபாணத்துறை (கண்டபாணத்துறை) சுப்ரமணியரின் ஆணைப்படி சூரனைக் கொன்று வெற்றியுடன் மீண்ட வேலானது உக்கிரத்தோடு வரும் வழியில் மூன்று கூறுகளாகப் பிளந்து தெறித்து கடலில் மூழ்கிய பின் மூன்றும் முறையே சென்றன. அதில் ஒன்று திருக்கோவிலில் ஒரு வெள்ளை நாவல் மரத்தின் மீது தங்கியது என்பது ஓர் மரப்புக்கதை ஆனாலும், இக் கதை வேல் வந்து உறைந்த இடம் என்பதும் வேடர்கள் கண்டபடியால் கண்ட பாணத்துறை என்றும், பெயர் வரலாயிற்று இது திருவெண்நாவல்பதி என்றும் கூறப்படுகின்றது.

## I. நாகர்முனை (நாகர் மேடு)

திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசம் ஆதியில் நாகர்கள் வாழ்ந்த காரணத்தால் இப் பெயர்கள் வந்ததாகவும் இயக்கர்கள் நாகர் என்போர் ஆதிதிராவிட மக்கள் என்பது வரலாற்று ஆசிரியர்கள் ஏற்றுக்கொண்ட உண்மை இயக்கர், நாகர் என்போர் இலங்கையில் வாழ்ந்ததாக மகாவம்சம், தீபவம்சம் கூறுகின்றன. எனவே திருக்கோவில் பிரதேசத்தில் பூர்விக வரலாற்றுச்சான்றாக இப் பெயர்கள் அமைகின்றது.

## II. உன்னரசுகிரி

உன்னரசுகிரியை தலைநகரமாக கொண்டு ஆடகசவுந்திரி திருக்கோவில் பிரதேசத்தை ஆட்சி செய்ததாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. ஆனால் இதற்கு வரலாற்றுச் சான்றுகள் எதுவும் கிடைக்கப்பெற்றதாக இல்லை. இது மிகவும் பிற்பட்ட காலத்தில் இப்பிரதேசங்களுக்கு வழங்கப்பட்ட பெயர் 13ம் நூற்றாண்டில் மாகோன் காலத்தில் வழங்கப்பட்டது.

# 09. திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தின் ஏழு மன்னர்களின் ஆட்சி

இப் பிரதேசத்தைப் பற்றி ஆராயும் போது ஏழு சோழ நாட்டு மன்னர்கள் திருக்கோவில் உட்பட வேறு சில பணிகளும் செய்து முடித்ததாகவும் பிற்காலத்தில் கலிங்க குமரனாகிய புவனேககஜபாகு என்பவன் இப் பிரதேசம் உட்பட (திருக்கோவில்) திருப்பணிகள் செய்தான். அதன் பின்பு அவனுடைய மகன் மநுனேயகஜபாகு (மேகவர்ணன்) காலத்தில் இந்தியாவில் இருந்து ஏழு இளவரசர்கள் வந்து இப் பிரதேசத்தை பரிபாலித்ததாகவும் கூறப்பட்டுள்ளது. இது கதை போல் தோன்றினாலும், இதன் பின்னணியில் வரலாற்று தகவல் உள்ளது. வருமாறு இந்தியாவில் இருந்து தமிழர்களின் 2 ஆம் படையெடுப்பு வட்டகாமினி காலத்தில் கி.மு103 ஏற்பட்டதாக சொல்லப்படுகிறது. 3ம் படையெடுப்பு எவ்வெவரால் மேற்கொள்ளப்பட்டது என ஆராயும் இடத்தில் மூன்றாவது படையெடுப்பு ஐந்து பாண்டிய இளவரசர்களால் மேற்கொள்ளப்பட்டது. இவர்கள் ஐவர்கள் ஐவர் அல்ல பஞ்ச திராவிடர்கள் எனக்குறிப்பிடப்படுகிறது.

*01.* புலவறத்த (Pulahatha)
*02.* பாவறியன் (Bahian)
*03.* பணயமாறன் (Panaya maran)
*04.* பிலமாற (Pilamaran)
*05.* தாதிகன் (Dadhikan)

இவர்கள் எழுவர் அல்ல ஐவரே என்பது 'இலங்கை வரலாறு' நூலில் அரச பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் அவர்கள் எழுவரே என்று மகாவம்சம் கூறுகின்றது. எனவே ஏழு மன்னர்கள் என்ற கூற்று சரியாக இருக்கலாம். இவர்களில் இருவர் சோமாதேவியையும் பிட்சா பாத்திரத்தையும் எடுத்துக் கொண்டு நாட்டுக்கு திரும்பியதாக மகாவம்சம் கூறுகிறது.
*(கிழக்கிழங்கை பூர்விக வரலாறு, க.தங்கேஸ்வரி, பக்கம் 146)*

## 10. தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகியம்மன் கோவில் பற்றிய வரலாறு

தமிழகத்தில் சோழ நாட்டில் கண்ணகி தனது கற்பின் திண்மையினாலும் தெய்வத்தன்மையினாலும் பாண்டியனால் கொலை செய்யப்பட்ட தனது கணவனாகிய கோவலனை உயிர் மீட்டுக் கொண்டதுடன் வையகமும் விண்ணகமும் போற்ற வானகம் புகுந்த கண்ணகி உயர்ந்ததோர் பத்தினி தெய்வமானாள். சிலப்பதிகாரத்திலே மானிடப் பெண்ணாக வந்த கண்ணகை போற்றுவதற்குரிய தெய்வ பெண்ணாக ஆகிவிட்ட தன்மை எடுத்துக்காட்டப்படுகிறது.

கண்ணகி பத்தினியாகிய செய்தியை வேடர்களால் கூறக்கேட்ட சேரன் செங்குட்டுவன் இமயமலையில் இருந்து கல் எடுத்து வந்து கண்ணகிக்கு சிலை செய்து பெருவிழா நடத்தி பிரதீஷ்சை செய்து கண்ணகி விழாவை ஆரம்பித்து வைத்தான் என்பது வரலாறு இவ்விழாவிலே இலங்கை திருநாட்டை ஆட்சி செய்த கஜபாகு வேந்தனும் கலந்து கொண்டான். இவனது ஆட்சிக்காலம் கி.பி 171 - 191 வரையாகும்.

அங்கு நடைபெற்ற கண்ணகி விழாவில் கலந்து கொண்டு கஜபாகு மன்னன் கண்ணகியின் அற்புதங்களைக் கண்டு வியந்தான். மூன்று முறை வலம் வந்து வரமும் கேட்டான். உடனே ஓர் அசரீரி கேட்டது. எல்லோரும் வியப்படைந்து மகிழ்ச்சி அடைந்தனர்

கஜபாகு மன்னனுக்கு கண்ணகி உருவச்சிலையும் காற்சிலம்பையும் இலக்கைக்கு கொண்டு வருவதற்காக செங்குட்டுவனான அரசன் சந்தன மரத்தால் ஒர் பேழை அமைத்து சிலம்பையும் சிலையையும் அதனுள் வைத்து கையளித்தார்.

சோழ நாட்டிலிருந்து இலங்கைக்கு கடல் மார்க்கமாக வரும்போது பன்னிரண்டாயிரம் குடிமக்களையும் வேறு பத்தினி சிலையையும் கொண்டு வந்ததாக 'இராஜவலிய' எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதல் முதலில் இலங்கை வேந்தனான கஜபாகு கண்ணகியின் சிலையையும் காற்சிலம்பையும் கொண்டு தனது பரிவாரங்களுடன் யாழ்ப்பாணத்திலுள்ள "சம்புகோள்" என்னும் திருவடி ஊரில் வந்து இறங்கினான். இலங்கையில் முதன் முதலில் இம் மன்னனால் அமைக்கப்பட்ட ஆலயம் 'அங்கண கடவையிலும் பின்னர் அனுராதபுரத்திலுள்ள சில ஊர்களிலும் அமையப் பெற்றன.

அதன் பின்னர் வற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயம், அனுராத புரத்தில் இசுறுமுனிய எனும் விகாரைக்குப்பக்கத்தில் நீர் தடாகத்துக்கு அண்மையில் அமைக்கப்பட்டுள்ள ஆலயம். இதற்கு இவர்கள் வருடம் தோறும் ஆடிமாதப் பூரணையில் கண்ணகிக்கு திருவிழா எடுத்து வந்தனர். இவ் விழாவை சிங்கள மக்கள் 'எசல ஆடிப்பெரகரா' என்று அழைத்தனர். இவ்வாறு அறிமுகம் செய்யப்பட்ட கண்ணகி வழிபாடு இம்மன்னரின் ஆட்சிக்காலத்தில் கி.பி *171-193* ஆகிய காலத்தில் பண்டைய மட்டக்களப்பு பிரதேசத்தில் அறிமுகம் ஆகியது என்று சிலர் குறிப்பிடுகின்றனர். இதன் அடிப்படையை வைத்து அம்பாறை மாவட்டம் உள்ளடக்கிய கிழக்கு மாகாணத்துக்கு வற்றாப்பளை முல்லைத்தீவு கடல் மார்க்கமாக கண்ணகி வழிபாடு வந்திருக்கக்கூடும் என்பது சிலரது கருத்தாகும்.

மட்டக்களப்பு கண்ணகி வழிபாடு பற்றி விளக்கும் போது கி.பி 16ம் நூற்றாண்டில் மட்டக்களப்பு தமிழகத்தில் அறிமுகமானதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது.

செனரத் என்ற மன்னன் கி.பி 1605 - 1635 வரை கண்டியை ஆட்சி செய்த காலத்தில் மட்டக்களப்பை தமிழ் சிற்றரசர்கள் ஆட்சி புரிந்தனர். இக்காலத்தில் யாழ்ப்பாணப் பகுதியை 64 ஆகப் பிரித்து கிற்ஸ்தவ ஆலயங்கள் அமைக்கப்பட்டு சைவாலயங்கள் உடைக்கப்பட்டன. அதே நேரத்தில் மட்டக்களப்பில் கிறிஸ்தவ சமயத்தைப்பரப்பினர். இதை மட்டக்களப்பிலுள்ள வன்னி சிற்றரசர்கள் கண்டி மன்னனுக்கு அறிவித்தனர். இதை அறிந்த மன்னன் செனரத் மலாய வீரர்கள் துணை கொண்டு போர்த்துக்கீசரை மட்டக்களப்பில் இருந்து அகற்றி மலாய வீரர்களை காவல் வைத்தான். இக் காலத்தில் நாட்டார் குடியேற்றம் நடந்தது அவர்கள் யாழ்குடாநாட்டில் இருந்து கந்தர்ப்பர் என்பவர் தலமையில் புலம் பெயர்ந்து வந்த வேளையில் ஏழு கண்ணகியம்மன் விக்கிரகளையும் தங்களோடு எடுத்து வந்தனர். இவை ஏழு கிராமங்களில் வைக்கப்பட்டதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. இதே காலத்தில் மட்டக்களப்பின் இனிய தென்பகுதி பாணமை, மகிழூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டு அவை பிரசித்தி அடைந்தது என்று அறிய முடிகிறது.

கி.பி 2 ஆம் நூற்றாண்டில் தம்பிலுவில் ஊரக்கை எனும் ஊரில் ஆலயம் அமைக்கப்பட்டிருந்தது. திருக்கோவில் பிரதேசம் தம்பிலுவிலில் பரவியிருந்த சமூக அரசியல் கலாசார நிலமையில் இங்கு பாண்டிய நாட்டில் இருந்து நேரடியாக கண்ணகி வழிபாடு வந்து சேர்வதற்கு காரணியாக அமைந்தது எனலாம். இதைப்பற்றி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் பின்வருமாறு கூறுகிறார். மட்டக்களப்பு வெருகல் ஆற்றுக்கு அருகேயுள்ள கிழக்கே அமைந்த துறை முகத்தின் ஊடாக மதுரை நகரில் இருந்து செண்பகச் செல்வியம்மன், பத்திகாளியம்மன், கண்ணகையம்மன், ஆகிய மூன்று சிலைகள் கொண்டு வரப்பட்டதாகவும் இதில் இரண்டு சிலைகளில் ஒன்று சம்பூரில்லுள்ள கடற்கரையிலும், மற்றையது ஈச்சலம்பற்றிலும் மற்றைய கண்ணகி சிலையானது தம்பிலுவில் (தம்பதி நல்லாள்) அறிமுக மானதும் என தெளிவுப்படுத்துகிறது எனலாம்.

கி.பி 2ம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டில் இருந்து கொண்டு வரப்பட்ட விக்கிரகம் தான் .'செண்பகச்செல்வி' என்ற கண்ணகி விக்கிரகம் ஆகும். இது தம்பிலுவிலைச் சேர்ந்த 'ஊர்க்கை' எனும் இடத்தில் ஆலயம் ஒன்று அமைத்து பிரதீஷ்சை செய்யப்பட்டது. இக் காலத்தில் தம்பிலுவில் பிரதேசத்தில் வாழ்ந்து வந்த தமிழர்களிடையே பௌத்த மதமும் பரவியிருந்தது. இக் கால கட்டத்தில் தமிழகத்தில் பாண்டிய நாட்டிலும் இந் நிலைதான் நிலைத்திருந்தது. இது வரலாற்று உண்மையாகும். இக் காலத்தில் திருக்கோவில் தம்பிலுவில் பகுதியில் கண்ணகி வழிபாடு அறிமுகமானது. அதிலிருந்து இன்று வரை பாணமைப்பகுதியில் கண்ணகி வழிபாடு பத்தினி தெய்வமாக மக்களால் வழிபடப்படு கிறது ஊரக்கை கண்ணகியம்மன் ஆலயம் இப்பகுதி மக்களால் போற்றப்பட்டு மிகவும் பிரசித்து பெற்று விளங்குகிறது.

குறிப்பு:இவ் வாலயம் முக்கிய குறிப்புக்கள் கலாபூசணம் நா.நவயகமூர்த்தி அவர்கள் தம்பிலுவில் கண்ணகி வழிபாடு எனும் நூலில் சிறப்பாக கூறியுள்ளார்.

## I. தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலய திருக்குளிர்த்தி உற்சவ வரலாற்றுப் பார்வையும்

மட்டக்களப்பு தெற்கே திருக்கோவில் பிரதேசத்தில் பொத்துவில் வீதியில் தம்பிலுவில் எனும் பெயரில் ஓர் அழகிய கிராமம் அமைந்துள்ளது. மட்டக்களப்பு தமிழகத்தில் சைவமம் தமிழும் செழிப்புடன் விளங்கியிருந்த ஊர்களில் தம்பிலுவிலும் ஒன்றாகும். கிழக்கே வங்காள விரிகுடாவும் தெற்கே திருக்கோவில் ஊரும் மேற்கே வற்றாத களப்பும் வடக்கே சிவலிங்கப் பிள்ளையாரும் எல்லையாக இவ் அழகிய கிராமம் அமைந்துள்ளது. அத்தோடு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் நிலங்கள் தருகின்ற குறைவற்ற செல்வமும் செழித்து குவியும் தனித்தமிழ் ஊர் தம்பிலுவில் இவ் அழகிய கிராமத்தின் மேற்கே வரலாற்று சிறப்பு வாய்ந்த கற்புக்கரசியாம் கண்ணகியம்மன் என்னும் நாமத்தோடு

கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளாள். இவ் ஆலயம் மிகவும் பழமைவாய்ந்தது ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டகாலத்தில் உருவாக்கப்பட்டதாக வரலாறுகள் உண்டு. இத்திருத்தலத்தின் கண்ணகி அம்மன் கதை ஏராளம் உள்ளன.

இதன் வரலாற்றைச் சுருக்கமாக ஆராய்ந்தால் இலங்கையின் கண்ணகியம்மன் வழிபாடு முதன் முதலில் இலங்கை வேந்தன் கஜபாகு மன்னன் சேர நாட்டின் வஞ்சியில் இருந்து கண்ணகி சிலையும் காற்சிலம்பையும் இலங்கையில் யாழ்ப்பாணத்திலுள்ள சம்புகோள என்னும் திருவடிவூரில் கடல் மார்க்கமாகக் கொண்டு வந்தான். (நா.நவநாயக மூர்த்தி, தம்பிலுவில் கண்ணகி வழிபாடு என்னும் நூலில் கூறியுள்ளார்) இலங்கையில் கஜபாகு மன்னாலேயே கண்ணகியம்மன் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது. முதன்முதலாக அங்கணாகடவை எனும் இடத்திலும், அநுராதபுரத்திலும், சில ஊர்களிலும் அதன் பின்புவற்றாப்பளை கண்ணகியம்மன் ஆலயமும் கஜபாகு மன்னனால் அமைக்கப் பட்டது. இம்மன்னர் வருடம் தோறும் ஆடிமாதப்பூரணையில் கண்ணகிக்கு விழா எடுத்தார். இவ்விழாவை சிங்களத்தில் எசல பெரகர எனவும் அழைத்தனர். இவ்வாறு கண்ணகியம்மன் வழிபாடு இம் மன்னனின் காலத்திலேயே அம்பாரை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களிற்கும் வற்றாப்பளை முல்லைத்தீவு கடல்மார்க்கமாக வந்திருக்கக்கூடும் என்பது சிலரது கருத்தாகும்.

மட்டக்களப்பு கண்ணகி வழிபாடு வரலாறு பற்றி விளக்கும் கி.பி 16ம் நூற்றண்டளவில் மட்டக்களப்பு தமிழகத்தில் அறிமுகமானதாக மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது. செனரதன் என்ற மன்னன் கி.பி 1605 - 1635 வரை கண்டி ஆட்சி புரிந்த காலத்தில் மட்டக்களப்பை ஆட்சி செய்த தமிழ் சிற்றார்கள் யாழ்குடாநாட்டில் இருந்து கந்தப்பர் என்பவர் தலைமையில் புலம் பெயர்ந்து வந்த வேளையில் ஏழு கண்ணகியம்மன் விக்கிரகங்களையும் தங்களுடன் எடுத்து வந்தனர். என்றும் இவை ஏழும் ஏழு கிராமங்களில் வைக்கப்பட்டதாகவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகின்றது.

மட்டக்களப்பின் பின் தென்பகுதியான பாணம், தம்பிலுவில், பட்டிநகர், காரைதீவு, வீரமுனை, களுவாஞ்சிக்குடி, சேனைக்குடியிருப்பு ஆகிய இடங்களில் ஆலயங்கள் அமைக்கப்பட்டு பிரசித்தி அடைந்தன. தம்பிலுவில் ஊர்ககைவெளி என்னும் ஊரிலும் அமைக்கப்பட்டது.

இக்காலத்தில் கி.பி.2ம் நூற்றாண்டில் திருக்கோவில் பிரதேசத்தில் பரவியிருந்த சமூக, அரசியல், கலாசார நிலைமைக் காரணமாக இங்கு பாண்டிய நாட்டிலிருந்து நேரடியாக கண்ணகி வழிபாடு வந்து சேர்வதற்கு காரணியாக அமைந்தது எனலாம்.

இதைப் பற்றி பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் பின்வருமாறு கூறுகின்றனர். மட்டக்களப்பின் வெருகல் ஆற்றுக்கு கிழக்கே உள்ள துறைமுகத்திற்கு மதுரை நகரில் இருந்து செம்பகநாச்சி அம்மன், பத்திரகாளியம்மன், கண்ணகியம்மன் ஆகிய மூன்று சிலைகள் கொண்டுவரப்பட்டதாகவும் அந்த மூன்று சிலைகளில் ஒன்று ஈச்சலம்பற்றிலும் மற்றையது சம்பூர் கடற்கரையிலும் கண்ணகி சிலையானது தம்பிலுவில் கிராமத்திலும் அறிமுகமாகியது என்பதனை தெளிவுப்படுத்துகின்றது எனலாம்.

கி.பி 2ம் நூற்றாண்டளவில் பாண்டிய நாட்டில் இருந்து கொண்டுவரப்பட்ட செண்பகச் செல்வி என்ற விக்கிரகம் கண்ணகி விக்கிரகம் ஆகும். இவ்விக்கிரகம் தம்பிலுவில் ஊரைச் சேர்ந்த ஊர்க்கை வெளியில் அமைத்து பிரதிஸ்டை செய்யப்பட்டது. இக்காலத்தில் தம்பிலுவில் பிரதேசத்தில் வாழ்ந்து வந்த தமிழர்களிடையே பௌத்தமும் நிலைத்திருந் தது. இக்காலக்கட்டத்தில் தமிழகத்தில் பாண்டிய நாட்டிலும் இந்நிலைதான் நிலவியது. இது வரலாற்று உண்மையாகும். இக்காலத்திலேயே திருக்கோவில், தம்பிலுவில் பிரதேசத்தில் கண்ணகியம்மன் அறிமுகமானது. அன்றிலிருந்து இன்றுவரை கண்ணகி வழிபாடு பத்தினி வழிபாடாகவும் விளங்கி வருகின்றது.

ஊர்க்கை வெளி ஆற்றுமுணைக்கு அண்மையில் உள்ள வீரசசோலை என்ற இடத்தில் ஆலயம் எழுப்பி வழிபாடுகள் நடைபெற்றதாகவும், காலப்போக்கில் சில காலம் இவ்வாலயம் பரிபாலனம் செய்யப்படாமல் இருந்ததாகவும் பின் புறாவின் மூலம் அம்மனின் விக்கிரகம் மக்களின் கண்களில் புலப்பட மீண்டும் ஆலயம் அமைத்து வழிபட்டனர். என்றும் சிலகாலங்களுக்குப் பின் அது தம்பிலுவில் ஊருக்கு இடமாற்றப்பட்டு ஆலயம் அமைக்கப்பட்டு வழிபாடு தொடந்ததாகவும் கர்ணபரம்பரை செய்திகளாக "பொற்புறா வந்து காவியம்", "மழைக்காவியம்" என்பவற்றினூடாக அறிய முடிகின்றது.

ஆலய உற்சவமானது வருடமொன்றுக்கு ஒரு முறை வைகாசிமாதம் வளர்பிறை திங்கள் குளிர்த்தி உற்சவம் நடைபெறுவதற்கு ஏற்றவாறு கதவு திறக்கப்படுகின்றது. "வைகாசித்திங்கள் வருவேன்" என்ற வாக்கிற்கு இணங்க மண்ணுலகில் இருந்து கண்ணகியம்மன் சில ஊர்களில் வைகாசி மாதத்து பூரணையிலும் தம்பிலுவிலில் வைகாசி மாதத்து வளர்பிறை திங்களிலும் குளிர்த்தி உற்சவம் நடைபெறுகின்றது.

இங்கு பூசைகள் யாவும் தொன்று தொட்டு (அம்மன் பத்ததி) முறையில் நடைபெற்று வருகின்றது. இங்கு நடைபெற்றுவரும் திருவிழாக்களில் தொன்று தொட்டுவரும் நிகழ்வுகள் முக்கியமானவை. இவற்றுள் 2ம் நாள் இடம் பெறும் "காவிய ஏடு திறத்தல்" வைபவம் நிகழ்வாக "பச்சைப் பானைக்கு மண்ணெடுத்தல்" இடம்பெறும். 6ம் நாள் "கல்யாணக்கால் நடுதல்" இடம் பெறும். 6ம் நாள் பூசை நடைபெற்று முடிய அம்மன் கிரமா பிரவேசம் இடம்பெறும் கடைசி நாளான 7ம் நாள் திட்கட்கிழமை பொங்கலிடுவர் பின் குளிர்த்தி பாடப்பட்டு அம்மன் குளிர்த்தி பாடிய அந்த புனித நீரானதீர்த்தம் ஆலய பூசகர், கப்புகனார் அவர்களின் கரங்களால் மக்கள் மீது தெளிக்கப்படும். பின் எல்லோருக்கும் பொங்கல் பிரசாதம் வழங்கப்பட்டு திருக்கதவு அடைக்கப்படும்.

## கண்ணகி வழிபாட்டின் சிறப்பம்சமாக...

கொம்பு விளையாட்டு என்ற ஓர் நிகழ்வு மிகவும் பிரசித்தி பெற்று காணப்பட்டதாகவும் 1976ம் ஆண்டு வரை கொம்பு விளையாட்டு இவ்வூரில் நிலவியிருந்ததாகவும் அதன் பிற்றபாடு சில காலம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடைநிறுத்தப்பட்டது. என்றும் மீண்டும் 2014ம் ஆண்டு இவ்வூர் மக்களின் அசையாத நம்பிக்கையாக அக்காலங் களில் ஏற்படும் அம்மை, சின்னம்மை, குக்கல், வயிற்றுக்கடுப்பு போன்ற நோய்கள் நீங்க அம்மனுக்கு நேர்த்தி வைத்து வழிபடுவர். அம்மனின் அருளால் நோய் நீங்கி குணமடையும் என்பது நம்பிக்கையாகும்.

இத்தகைய சிறப்புப் பெற்ற தம்பிலுவில் கண்ணகியின் மகிமை பற்றி 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த கட்டாடி கண்ணப்பர் என்பவர் பாடியுள்ள தம்பிலுவில் மழைக்காவிய பாடல் மூலம் அறியலாம். இம் மழைக்காவியம் பாடிமுடித்தவுடன் மழை பெய்த அற்புதமும் அக்காலத்தில் இடம் பெற்றதாக கூறப்படுகின்றது.
இவ்வாலய உற்சவம் வருடா வருடம் வைகாசி மாதம் செவ்வாய்க்கிழமை அதிகாலை கதவு திறப்புடன் ஆரம்பமாகி ஆலய கப்புகனார் அவர்களால் பூசைகள் இடம்பெற்று அம்மன் குளிர்த்தி ஆடியபின் திருக்கதவு அடைக்கப்படும்.

தினகரன் நாளேடு 16.05.2016 ஆக்கம் சிவதொண்டர்

# 11. மக்கள் குடியேற்றமும் வாழ்வும்

கிழக்கிலங்கை தென்பகுதியான பண்டைய மட்டக்களப்பு, திருக்கோவில் பிரதேசம் ஆகியன ஆங்கிலேயர் ஆட்சிக்காலம் வரையும் தனியான ஓர் அரசியல் பிரிவாக இருந்தன. இதனை வரலாறு உறுதி செய்கின்றது. மட்டக்களப்பு பிரதேசத்தை ஆட்சி செய்த மன்னர்கள், சிற்றரசர்கள் என்போர் சுதந்திரமுள்ள, அரசாகவே இருந்து வந்தனர். அந்நியரான போர்த்துகேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலங்களிலும் இந்நிலையே இருந்தது என்பது உண்மையாகும். பூர்வீககாலம் தொடக்கம் தமிழியல் இந்து சமய செல்வாக்கும் செழிந்திருந்த மட்டக்களப்பு தென்பகுதியான தம்பிலுவில் திருக்கோவில் பிரதேசத்தில் கந்தபுராண கலாசாரம் நிலவியிருந்தது. இதனை வரலாறுகள், தொல்லியல் சான்றுகள் என்பன தெளிவுறுத்துகின்றன.

திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசம் என்று குறிப்பிடப்படுவது இன்றைய திருக்கோவில் பிரதேச செயலகப்பிரிவே ஆகும். இப்பிரதேச எல்லைக்குட்பட்ட ஊர்களில் முக்கிய இடத்தைப் பிடிப்பது பூர்வீக வரலாற்று முக்கியத்துவம் பெற்ற ஊர் பண்டைய தம்பதிவில்லூர். இப் பெயர் வரக்காரணம் வரலாற்றுச்சிறப்பு மிக்க பாரத நாட்டில் இருந்து வந்த திருச்சோழன் மகளாகிய தம்பதி நல்லாள் வரவால் ஏற்பட்ட செயற்பாடு தான் காரணம் ஆகும். இப் பெயர் மருவி தற்போது தம்பிலுவில் என பெயர் பெற்று விளங்குகிறது. இப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள் சங்கமன் கண்டி, வில்காமம், கஞ்சிகுடியாறு, சாகாமம் ஆகிய இடங்களில் வாழ்ந்து. வரலாற்றில் முக்கிய இடத்தை பிடித்திருந்தனர். இவை இலங்கை வரலாற்றின் முக்கிய விடயங்களில் ஒன்றாகும். இலங்கையின் வரலாறு எனக் கூறும் இடத்தில் விஜயன் காலத்தில் இருந்து கி.மு 5ம் நூற்றாண்டு ஆரம்பமாகும். எனக் கொள்ளும் இடத்தில் இதற்கு முந்திய

காலத்திலும் விஜயன் காலத்திலும் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்திலும் வாழ்ந்தவர்களை நாகர் என்ற ஆதி திராவிடர் ஆவர் என்று முன்பு கூறியிருந்தோம். இதை தொல்லியல் சான்றுகள் கூறுகின்றன.

இலங்கை வரலாற்றில் பெருங்கல் கலாசாரம் நிலவியிருந்த காலத்தில் கி.மு 5ம் நூற்றாண்டுக்கு முன்னர் நாகர்குடியினர் நாகரிகச் சிறப்புடன் வாழ்ந்து வந்தனர். இதனை சங்கமன் கண்டி, சாகாமம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட திராவிடர் இயல் சார்ந்த (சார்பாக) பெருங்கற் சான்றுகள் சான்று பகர்கின்றன. இலங்கையில் நாகர் குடியேற்றத்தைத் தோன்றுவித்தவர்கள் ஆதிதிராவிடர் ஆன நாகர், இயக்கர் குடியினராவர். இலங்கையில் பெருங்கற்காலம் எனும் இடத்தில் கி.மு. ஆயிரமாண்டளவில் தோற்றம் பெற்றதை அறியமுடிகிறது. கி.மு 600 -1000 க்கு இடைப்பட்ட காலத்தில் திருக்கோவில் தம்பிலுவில் பகுதி நாகர்முனை என்ற பெயருடன் முன்பு கூறக் கண்டுள்ளோம். இவர்களுக்கிடையே இராசதானி சங்கமன் கண்டி என விளங்கியிருந்தது. கி.மு 7ம் 6ம் நூற்றாண்டில் நாகர் முனையான திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் வேல் வழிபாட்டை சிறப்புடன் ஆரம்பித்தனர். இதற்கு ஆதாரமாக அக்காலத்தில் காடாக இருந்த சித்திர வேலாயுதர் ஆலயத்தைச் சூழவுள்ள இடங்களில் வாழ்ந்து வந்தவர்கள் நாகர் இனத்தைச் சேர்ந்த வேடர்களாவர்.

காடு கெடுத்து நாடாக்கி வயல் வளம் படுத்திய அம்மக்கள் செய்தொழில் உழவே என்றும் நாட்டு நிர்வாகத்திலும் கோயில் நிர்வாகத்திலும், திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தை பொறுத்தமட்டில் பண்டைய மட்டக்களப்பு நாட்டுப் பெருவழக்கமாக விளங்கிய சமயம் சைவம் என்று முன்பு கண்டோம். இம் மக்கள் முருக வழிபாட்டையும் கண்ணகியம்மன் வழிபாட்டையும்

கொண்டவர்களாக உளர். முருகன் கோயிலை திருப்படைக் கோயில் என்று கூறுவர் பண்டைய அரசின் மதிப்பும் மானியமும் சீர் வரிசைகளும் பெற்ற கோயில்களே திருப்படைக்கோயில் ஆகும்.

திருப்படைக்கோயிலின் நிர்வாகம் பராமரிப்பு தொண்டுகள் என்பவற்றை செய்யும் சாதியினரை வகுத்து நியமித்து அக்கோயிலில் நடக்கவேண்டிய விழாக்கள் முதலியவற்றையும் ஒழுங்குற அமைத்து மட்டக்களப்பு சிற்றரசனும் கண்டி சிங்கள மன்னனும் அவற்றுக்கான மானியங்களையும் அவ்வப் போது வழங்கியுள்ளனர். இந் நிர்வாக தலைமைக்கு வகுக்கப் பட்டுள்ளவரே 'கலிங்க வேளாளர்' ஆவார். அதனால் இவர்கள் பூபாலகோத்திரம் என்றும் இவர்களை முறையே நாயக்கர் குலம் என்றும் பிள்ளைக்குலம் என்றும் காராளர் குலம் என்றும் விருது கொடுத்து வந்தனர் என்று 'திருப்படைக் களஞ்சியம்' என்னும் திருக்கோவில் பட்டயம் எனும் கல்வெட்டில் சிலவற்றை கூறக்காணலாம்.

இவர்களைத் திருக்கோவில் பணிக்கென்றே கொண்டுவரப்பட்டு அப் பகுதியில் குடியேற்றப்பட்டனர். இவர்கள் குடியேற்றப்பட்ட இடம் கோரைக்களப்பு என்று கூறுவர். இலங்கைக்கு மாகோன் வந்த போது இவர்களது பணி முறையையும் மற்றைய ஒழுங்கு முறையையும் சீர்கெட்டு மாறி இருந்ததை கண்டான். கோவேசியர் என்று அழைக்கப்பட்ட இவர்களை (பூபாலக்கோத்திரர்) ஏழு குடிகளாக மீண்டும் அம் மன்னன் வகுத்து நிறுத்தி அவரவர் பணிகளை திட்டம் இட்டான். என்று 'குளிக்கல் வெட்டு முறை' பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கண்டனொடு சருகு பில்லி கட்டப்பத்தன்
கருதரியகவுத் தனுமத்தியான்
மண்டலத்தில் பொன்னாச்சி வயித்தி யென்று
கோவசியர் மக்களிலே வருணமாக்கிப்
பண்டுமுறை தவறாமல் ஏழு குடியாய்ப்
பகுத்தீசர் பணிபுரிய பரவணியாய்
ஆண்டவர் தமைசாட்சி வைத்துத் தத்தம் வாங்கி
அரவணைத்து ஊழியராய் அமைத்துச் சொல்வார்.
(மட்டக்களப்பு மான்மியம், பக்கம் 78)

என்ற அப்பாடல் பகுதியில் கண்டங்குடி, சருகு பில்லிக் குடி, கடப்பந்தன் குடி, கௌத்தன் குடி, அத்தியாயன் குடி, பொன்னாச்சிக்குடி, வயித்திக் குடி, வச்சித குடி என்ற வழக்கம்பெற இக் குடியில் ஒவ்வொன்றிலும் உள்ள உட்பிரிவுகளே (வகுத்துவா) குறிப்பிட்ட வயிற்றில் பிறந்த வழி மரபினர் வகுத்துவர் என அழைக்கப்பட்டனர். இந்த ஏழு குடியில் முதல் மூவரும் திருக்கோவில் சித்திரவேலாயுதர் கோவிலிலும் தம்பிலுவில் கண்ணகி அம்மன் கோயில் என்பவற்றின் இடையே ஆங்காங்கே தங்கி விட்டனர். என முதலியார் என்று சொல்லப்படும் எஸ்.ஓ.கனகரெத்தினம் அவர்கள் மட்டக்களப்புச் சரித்திரத்தைக் கூறும் தமது ஆங்கில நூலில் குறிப்பிட்டுள்ளார். இது முதலியார் அவர்களின் குறிப்பாகும். வேளாளர் என்ற வகுப்பினர் குடிப்பிரிவுகளை பெரிய கௌத்தான் குடி, சின்னகௌத்தான் குடி, அத்தியாயன் குடி, சங்கரப்பத்தன் குடி, கோப்பன் குடி என ஏழு குடிகளாக குறிப்பிட்டுள்ளார்கள். பெரிய பௌத்தான் குடி சின்னக் கௌத்தான் குடி இரண்டும் ஒரு குடிகளாகவே விளங்குகின்றது.

செட்டி குடியோடு இன்னொரு குடி சேர்க்கப்பட்டு குருக்கள் குடியெனவும் குறிப்பிடப்படுகிறது. இவையனைத்தும் முக்குவர் வன்னிமை சாதி, தெய்வக்கல்வெட்டு திருப்படைக்களஞ்சியக் கல்வெட்டு என்ற பட்டயங்களில் காணுகின்றபடி கலிங்க மன்னனால் அவர்களுக்கு வகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் தெளிவாகியுள்ளது.

வேளாளர்களும் அவர்களுடைய சிறைக்குடிகள் 17, பேரும் மட்டக்களப்பு வடபகுதியில் இடையில் குடியேற்றம் பெற்ற தென அறிகின்றோம்.

## 12. திருக்கோவில் தம்பிலுவில் பிரதேச இலக்கிய வரலாறு

உலகுக்கு உறுதிபயக்கும் விழுமியப் பொருளை இனிய சொற்களாய் ஓசை பொருத்த அமைத்துத்தருபவனே கவி ஆவான். நல்லிசைப் புலவர்களின் கவித்துவம் வாய்ந்த செய்யுட்கள் தமிழ் நாட்டிலும் பண்டுதொட்டு நின்று நிலவி. கற்ற பெரிய வல்லோரால் போற்றிக் கொண்டாடப்படுவதைக் காண்கின்றோம். செய்யுள் இலக்கணம் முற்றமைந்த கவிதைகள் ஒரு சாரானவர்களாக இலக்கணகுறைபாடு உடையனவோரும் நாட்டிலுள்ள பல தொழில் மாந்தர்களும் நம் உளக்கிளர்ச்சியை வெளிப்படுத்தி பாடி மகிழ்வதற்கான பாடல்களும் எத்தனையோ இத்தம்பிலுவில் மக்களால் உருவாக்கி பாடப்பட்டு வழங்கியிருந்தது உண்மையாகும். அவையெல்லாம் ஆலயங்களைப் பற்றியும், தொழில் செய்யும்போதும், ஓய்ந்திருக்கும்போதும், வேலைசெய்து களைப்பு நீங்கி. மகிழ்ச்சி பெறும் வாயிலாக உற்சாகத்துடன் பாடப்பட்ட பலதரப்பட்ட கவிகளாகும்.

நாட்டுப் பாடல் என்பது சாதாரண மக்களின் பாடல் படிப்பறிவில்லாத கிராம வாசிகள் வயலில் உழுபவர்கள், நாற்று நடுபவர்கள், அருவி வெட்டுபவர்க்ள், மீன் பிடிப்பவர்கள், வண்டி ஓட்டுபவர்கள். முதலிய பாமரமக்களால் பாடப்படுபவை ஆகும்.

படிப்பறிவில்லாத அத்தைகைய தொழில் மாந்தர்கள் இதயத்தில் உணர்ச்சி பொங்கி அதுவே ஒரு சமயம் பாட்டாகப்பாடப்படுகிறது. இத்தகைய பாடல்களில் உணர்ச்சியிருக்கும், ஓசையிருக்கும். தாளக்கட்டிருக்கும். சொல்லழகு இருக்கும். இவை இலக்கண வரம்புக்கு உட்பட்டவையாக காணப்படும். இப்பாடல்கள் எழுத்து வடிவில் இருக்கமாட்டது. மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு எனும் நூலில் தொகுக்கப்பட்ட பாடலில் அம்மக்கள் வசந்தனை வயந்தன் என குறிப்பிட்டு உள்ளனர். இவ் வசந்தன் பாடலை ஆறுபேர், எட்டு பேர், பன்னிரண்டு பேர் சேர்ந்து ஆடுவது வழக்கம். ஒவ்வொருவர் கைகளிலும் சிறு கோல்கள் இருக்கும். கோல்களைப்பிடித்து அவற்றைத் தட்டி ஆடுவர் இவ்வாட்டத்தை வசந்தன்கவி வசந்தன் பள்ளு என்றும் சொல்வர்.

இவை மிகவும் பழங்காலத்தில் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் ஆடப்பட்டன. நரேந்திரன் பள்ளு, இராசசிங்கன் பள்ளு இற்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டது. என்பது வெளிப்படையாகும். ஏனையவை காலத்துக்கு காலம் பலராலும் ஆக்கப்பட்டது என்றும் பண்டைய மட்டக்களப்பு திருக்கோவில் பிரதேசம் வரை வழங்கியிருந்த இப்பாடல்கள் கால வேறுபாடுகாரணமாக கைவிடப்பட்டு, ஒளிந்து, மறைந்து போகா வண்ணம் யாழ்ப்பாண தி.சதாசிவம் ஐயர் அவர்கள் 1940 ஆம் ஆண்டளவில் எழுதி வைத்த நூலில் இருந்து சிலவற்றை எமது பழம் பெரும் பிரதேச மக்களான தம்பிலுவில் மக்களால் பாடப்பட்ட ஒரு சில வரிகள் எமது சந்ததியினருக்காக குறிப்பிடப்படுகிறது.

கந்த நறுஞ் சண்பகப் பூ மாலைமார்பன் தென்னிலங்கை
காவலன் நீள் மாவலிகங்கைக்குடையோன்
சந்தனப்பூ யாசலனைச் செந்தமிழினால் வாழ்த்தத்
தம்பிலுவிற் கண்ணகைத்தாய் தஞ்சம் நமக்கே

என்று தம்பிலுவில் பற்றி நரேந்திரன் காலத்தில் பாடப்பட்டது.

குறிப்பு : அக்கவி பாடப்பட்டமைக்கான ஒரு வரலாற்றுக் கதையுண்டு திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் வசித்த ஒரு பிராமணன் கண்டி அரசனாகிய நரேந்திர சிங்கனிடம் பரிசுபெற விரும்பி அங்கு சென்று இராச சபையை அடைந்தான். மந்திரிகள் போற்ற பிரதானிகள் சூழ்ந்திருக்க அரசன் கொலுவீற்றுக்கும் போது போய் அரசனை ஆசிர்வதித்தான். அவனுடைய வரலாற்றை விசாரித்த மந்திரிமார்கள் அரசன் மீது கவிபாட முடியுமா? என வினவினார்கள் அவர்கள் ஆடுவதற்கு சம்பதித்தால்தான் அதற்கேற்ப கவி பாட நான் சம்மதிப்பேன் என்று சொன்னான். கவி பாடும் பழக்கமில்லாத பிராமணன் செய்வதறியாது மனங்கலங்கி பின்தேறி தான் வழிபடும் இறைவனான சித்திரவேலாயுதரைத் தியானித்து அவனருளால் உடனே நரேந்திரன் கவி எனும் கவியைப்பாடி பரிசு பெற்றான். என்று கர்ணபரம்பரைக் கதையில் வழங்கி வருகிறது. என்று வசந்தன் கவித்திரட்டு எனும் நூலில் பக்கம் 44 கூறப்படுகிறது.

## 13. தம்பிலுவில் தம்பதி நல்லாள் ஊர்ச்சிறப்பு

இப் பிரதேச ஊர்ச்சிறப்பு என்ற வகையில் இரண்டு வகையாகக் கூறலாம். ஒன்று முன்பு கண்ட சித்திர வேலாயுதர் கோவிற்சிறப்பும் அடுத்து தம்பிலுவில் கண்ணகி வரவு உருவாக்கம் பற்றியும் கூறக்கண்டோம். இவ்வூரில் உருவான கண்ணகி வழிபாட்டின் அடிப்படையைக் கொண்டு இங்கு சான்று கூறுகின்றன. தம்பிலுவில் கண்ணகியம்மன் மழைக்காவியம் கி.பி 17ஆம் நூற்றாண்டளவில் இவ்வூரைச் சேர்ந்த கண்ணப்பன் என்பவரால் உருவாக்கப்பட்ட காவியமாகும். அதில் ஒரு பாடல் பின் வருமாறு.

" சோதிமதி பானுகழல் பொய்த்திடினு மேலோர்
சொன்ன மொழி தவறாத குறிதவறினாலும்
காதலுற வேதவிதி பொய்த் திடினு முனது
கற்பு நெறி பொய்த்ததொரு காலமதி லுண்டோ
காதலடி யார்கள் பணி விடைகார னுன்னுடைய
கட்டாடி கண்ணப்ப னுக்காயினு மிரங்கி
மோது குளிர் தா்ரைமழை நீயருள வேணும்
மேக நகர் தம்பிலுவில் வாழுமா தாவே"
(மட்டக்களப்பு தமிழகம், பக்கம் 189)

இச்செய்யுளிலே கூறப்பட்டபடி மழைக்காவியப்புலவர் தம்பிலுவிலைச் சேர்ந்த "கண்ணப்பரே" என்பதைக் எடுத்துக்காட்டுகிறது. பக்தியில் சிறந்த கண்ணப்பர் காட்டாடி அக் காலத்தில் அலய பூசகரும் ஆவார் மழையின்றி மண்ணுயிர்கள் படும் துன்பங்கண்டு மனமிக நொந்து அம்மனை வேண்டி இம் மழைக்காவியம் பாடி பெருமழை பெற்றுத் தந்தார். என்று ஏற்றுக் கொள்ளுதல் பொருத்தமாகும். இது தம்பிலுவில் சிறப்புக்களின் இன்னும் ஒன்று ஆகும்.

மேலும் இதே ஊரில் கண்ணகி வழிபாடு இலக்கியங்களில் "கண்ணகியம்மன் பள்ளு" எனக் குறிப்பிடப்படும். கண்ணகி வழிபாட்டின் அம்சமாக கொம்பு விளையாடல் அக்காலத்தில் சிறப்பித்திருந்தது. இதுவும் ஓர் ஊர்ச்சிறப்பாக கொள்ளப்படுகிறது. இவ்வூரோடு நெருங்கிய உறவைக்கொண்டு இருந்த கண்டி மன்னானனா ஸ்ரீ நரேந்திர ராச சிங்கனையும் கி.பி 1706 - 1736 காலம் வரையில் புகழ்ந்துரைக்காதவர் இல்லை இப் பகுதி குலதெய்வமாகிய சித்திர வேலாயுதரையும் போற்றிப் பாடியிருக்கிறார்கள்.

" காப்பழகுந் தாதகியின் பூப்பழகு மாலை மார்பன்
கண்டி வாழ் நரேந்திர சிங்க காவலன் மீது
நாப்பழகுங் செந்தமிழ்ச் சொல்வாய்ப்பிழைவாரமலென்றும்
தந்து திருக்கோவில் வாழுங் கந்தர் துணையே"

நரேந்திர சிங்கன் பள்ளு புகழ்ந்து பாடியவர் மட்டக்களப்பு புலவர் ஆவார். கட்டுரை - வீரகேசரி வரமலல் வெளியீடு

இப்பழம் பதியான கோயில் சிறப்புக்களை மட்டக்களப்பு பகுதியிலுள்ள அம்மன் கோயில்களில் அம்மன் சடங்கென்று கண்ணகி விழா என்றும் கதவு திறத்தல் என்றும் கூறுவது சிறப்பாகும் ஆண்டு தோறும் வைகாசி மாதம் வளர்மதி நாட்களில் கண்ணகியம்மன் கோவிலில் சிறப்பு நடைபெறும் போது இந்த ஊர் மக்கள் எங்குதான் வாழ்ந்தாலும் வைகாசி மாதம் கதவு திறக்கப்படும் வேளைகளில் வந்து ஒன்று கூடி வழிபடுவது வழக்கம் அத்தோடு தம்பிலுவில் பிரதேசம் அவ் வேளைகளில் பக்திபரவசம் ஊட்டும் வகையில் ஊரே விழாக்கோலமாக காணப்படும் தம்பிலுவில் மக்களால் வருடா வருடம் கொண்டாப்படும் ஒரு விழாவாகும்.

# 14. இப்பகுதி மக்களின் கொம்பு விளையாட்டுச் சிறப்பு

நெடுங்காலம் தொட்டு கண்ணகியை குல தெய்வமாக வழிபட்டு வரும் தம்பிலுவில், திருக்கோவில் பிரதேச மக்களின் கொம்பு விளையாட்டு என்பது ஓர் சிறப்பம்சமாகும். இவ்வூர் மக்கள் பெரும்பாலானோர் பக்தி உணர்வாகவும் ஊரில் ஓர் விழாவாகவும் ஊர் மக்கள் ஒன்று கூடி கண்ணகியம்மன் கோயில் வீதிக்கு முன்னால் கொம்புச்சந்தி எனும் இடத்தில் கூடுவர். இதை ஊர்க்கூட்டம் என இவ்வூர் மக்கள் அழைப்பர் இக் கூட்டத்துக்கான அழைப்பை ஊர் காரிய தரிசி என சொல்லப்படுகின்ற ஊர்த்தலைவர் முல்லைக்காரன் என்று கூறப்படுபவரிடம் கூட்டத்தை கூடுமாறு அழைப்பு விடுவார்.

இக் கூட்டத்தின் அழைப்பையேற்று மக்கள் ஒன்று கூடி வடசேரி, தென் சேரி என இரண்டாக பிரிக்கப்படுவர். வடசேரி ஆனவர்கள் கோவலன் கட்சியைச் சேர்ந்தவர்கள் எனவும் தென் சேரி ஆனவர்கள் கண்ணகி பக்கம் எனவும் இரு பிரிவாக கருதப்படுவர். இவ்வுரிமை தாய் வழி இல்லாதோர் தகப்பன் வழியாகத் தொடரும் தம்பிலுவில் பகுதியில் வகுத்துவார் எனப்படும் தாய் வழியுரிமை பேணப்படுவது மரமாகும்.

## I. கொம்பு விளையாட்டு :

கொம்பு என்று சொல்லப்படுவது மிருகங்களின் கொம்புகள் அல்ல. மரபுக் கொம்புகள் ஆகும். இவை ஒரு சில மரத்தில் இருந்து எடுக்கப்படும் மரபுக் கொம்பாகும். மிகவும் வலுவான கொம்புகளில் இருந்து எடுக்கப்படும் நன்கு உறுதிவாய்ந்த கரையாக்கன் மரத்தின் வேர்பகுதியில் இருந்து எடுக்கப்படும். இதை “கரு வீரம்” என அழைப்பர். முன்பு கண்ட இரு சேரியார்களும் ஓர் அளவுத்திட்டத்தில் அமைத்து இருக்கும் கொம்புகள் “பில்லி” எனப்படும். குறும் தடியுடன் இணைத்து புரிகளால் வரிந்து கட்டுவர்.

(காட்டுக் கொடி) இப்படி வரிந்து கட்டப்படும் கொம்புகள் ஆதி காலத்தில் பனிச்சங்காய் பசை பூசியும் இணைத்துக் கட்டப்பட்டு காயவிட்டு பிற்பாடு இரு பில்லிகள் இணைத்துக் கட்டப்பட்டு கொம்புகள் விளையாட்டுக்கு தயார் நிலையில் வைத்துக் கொள்வர்.

## II. போர்த்தேங்காய் அடித்தல்:

கொம்பு விளையாட்டில் முதல் கட்டமாக தேங்காய் அடித்தல் விளையாட்டு நடைபெறும் ஒரு பகுதியினர் தேங்காயை எறிய மற்றைய பகுதியினர் தமது கையில் ஓர் கூர்மையான தேங்காயால் எறியப்படும் தேங்காயை தடுத்து உடைப்பர். கூடுதலான தேங்காயை உடைப்பவர் வெற்றி பெறுவார். வெற்றி பெறுபவர் முதலில் கொம்பை முறித்து கொம்பு விளையாட்டை ஆரம்பிப்பர்.

## III. 3 கொம்பு வகைகள்:

தட்டுக் கொம்பு : மூன்று நாள்
கூடாரக் கொம்பு : ஐந்து நாள்
ஏடகக் கொம்பு : ஏழு நாள்

இவ்வாறு பல நாட்களைக் கொண்டு பல வகைக் கொம்பு விளையாட்டுக் கள் விளையாடப்படும். மேற்கண்டவாறு கொம்பு விளையாட்டுக்கு கொம்புச் சந்தியில் நாட்டப்பட்டிருக்கும் மரத்தடியில் வந்து கொம்பை மக்கள் பார்வையிடுவர் வைக்கப்பட்டுள்ள கொம்புகள் நன்கு ஆராயப்பட்டு தெரிவு செய்த பிற்பாடு இரு கொம்புகளின் அரிப்பு கயிறு என அழைக்கப் படுகின்ற இரு கயிறுகளையும் இணைத்து கொம்புகளை முறைப்படி கொழுவிய பின்னர் அவ்விடத்தில் இருக்கும் பெரிய செவ்வாய்க் குற்றியில் சுற்றிக் கட்டப்பட்ட மர வளையத்துக்குள் தென்செரி கொம்பின் கயிறு நுழைக்கப்படும். அதில் வடம் தாங்கி மாட்டப்பட்டு பின் இரு தரத்தினரும் செவ்வாய்குத்தியில் மாட்டப்பட்டிருக்கும் வடக்கயிற்றினை (வடக் கொடி) பிடித்து இழுப்பர். இதில் இரண்டில் ஒன்று முறிவடையும் சில

வேளைகளில் முறிவடையாமல் வரக்கூடும். இரண்டும் முறிவடையாது இருக்கும் பட்சத்தில் கொம்பினை "தங்கு கொம்பு" என அழைப்பர்.

இரண்டில் ஒன்று முறிவடைந்தால் முறிவடையாத கொம்புக்காரர் வெற்றி தன்பக்கம் என்றுவெற்றிக் ·கொம்புக்கு மாலை இட்டு மஞ்சள் நீராட்டி சந்தோஷமாக ஊர்வலமாக எடுத்து வருவாரகள். வரும் வழியில் வீதிகளில் மருங்குகளிலுள்ள மக்கள் வீதியை அலங்கரித்து நிறைகுடம் வைத்து எடுத்து வரப்படும் வெற்றிக் கொம்புக்கு மஞ்சள் நீராட்டி கொம்பு முறிப்பாடல் என்று சொல்லப்படும் பாடல் பாடி ஆடிவருபவர்களுக்கு உற்சாகத்தை ஊட்டுவர். இதுவோர் முக்கிய ஊர் சிறப்பாகும். கொம்பு பாடல்களில் ஒரு சில வரிகள் வருமாறு.

வடசேரியான் கொம்பு எங்கே எங்கே?
மனமுள்ள தாழைக்கு மேலே மேலே
தென்சேரியான் கொம்பு எங்கே எங்கே?
செம்பரத்தம் பற்றைக்கு கீழே கீழே

இப் பகுதிக்கு மக்களின் இன்னுமோர் நம்பிக்கை தென்சேரி கொம்பு வென்றால் கொடிய நோய்கள் பரவாது என்றும் வட சேரி கொம்புவென்றால் வேளாண்மை விளைச்சல் அதிகமாக அதிகரிக்கும் என்றும் நம்பிக்கை நிலவியிருந்தது. இதுகாலும் கூறியவற்றை நோக்குமிடத்தில் இக் கொம்பு முறிப்பில்லுள்ள தத்துவத்தை ஓரளவு உணர்த்திருக்கலாம். கண்ணகி காலத்தில் இடையர் குலச்சிறுவர்கள் விளையாடிய விளையாட்டுக்களை நினைவு கூர்ந்து கண்ணகியம்மனின் பெருமையை உலகறிய வைப்பதுடன் அம்மனையும் குளிர்விப்பதுடன் இரு கட்சிகளின் சேரிவாரம் வசைபாடல் கோபதாபங்களை மறந்து இப்பகுதி மக்கள் கண்ணகையம்மன் குளிர்த்தியில் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதும் இவ்விழாவில், ஊர்ச்சிறப்பாக அமைந்திருக்கின்றது என உணரமுடிகிறது.

## 15. தம்பிலுவில் ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில்

ஸ்ரீ சித்தி விநாயகர் கோயில் உருவாக்கம் பற்றி வரலாற்று நூல்களிலோ அதன் தற்போதைய பரிபாலனசபையினரிடமோ கோவில் தோற்றம் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு இல்லையென்றே கூறவேண்டும். இக் கோயில் இப் பிரதேச மக்களால் கண்ணகியம்மனையும் சித்தி விநாயகரையும் போற்றி வழிபடாதவர்கள் இல்லையென்றுதான் கூறவேண்டும். மேற்கூறிய கொம்பு விளையாட்டுக் காலங்களில் இருபிரிவுகளாகப்பிரிக்கப்பட்ட மக்கள் வடசேரி பகுதியினர் இக் கோயிலை ஆதிகாலத்தில் பாதுகாத்து வந்தனர்.

என அறிய முடிகிறது. அதே போன்று கொம்பு விளையாட்டு காலங்களில் இக் கோவிலை "கோவலன்" கோவிலாகவும் கண்ணகையம்மன் ஆலயத்தை "கண்ணகி" கோவிலாகவும் நம் முன்னோர்கள் கூறக்கேட்ட கதைகளும் பல உள்ளன. இவ் ஆலயத்தில் மிகவும் பழைமை வாய்ந்த பிள்ளையார் சிலை இருந்ததாக இப்பிரதேசத்தில் இருந்ந பெரியார்கள் கூறினார்கள்.

பக்கத்தில் ஓர் பெரிய ஆலமரம் இருந்ததாகவும் இவ் ஆலயத்தின் முகப்பு வடதிசையில் இருந்ததாகவும் இது வட முகத்தில் இருந்ததால் "வடசேரி கோயில்" என அழைக்கப்பட்டதாக உணர முடிகிறது. இவ் ஆலயத்தில் கிழக்கு முகமாக ஓர் வாசல் இருந்ததாகவும் இவ் வாசல் முகப்பில் நடராஜர் சிலை இருந்ததாகவும், திரு வெம்பாவை கால உற்சவங்களில் திருப்பள்ளி எழுச்சிப்பாடல் போன்ற நிகழ்வுகள் நடந்தது என அறிய முடிகிறது. 1976ம் ஆண்டு கொம்புவிளையாட்டுக்கு இப் பகுதியில் ஏற்பட்ட அசாதாரணங்களால் இடைநடுவே விடப்பட்டு மருவி போயின. அதன் பிற்பாடு தம்பிலுவில் ஸ்ரீ சித்தி விநாயகர் என பெயர் பெற்ற ஆலயமாக மாற்றியமைக்கப்பட்டு கற்கோவில் தூபியுடன் உருவாக்கப்பட்டு இப்பகுதி மக்களின் ஒத்தாசையுடன் கும்பாவிஷேகம் செய்விக்கப்பட்டு சிறப்புற்று சித்தி விநாயகர் கோவில் எனப் பெயர் பெற்று விளங்குவது சிறப்பம்சமாகும்.

# 16. சிவலிங்கப்பிள்ளையார் ஆலய வரலாறு

இற்றைக்கு பல வருடங்களுக்கு முன்பு 1931ம் ஆண்டு முன்பு தாம்போதிகள் அமைப்பதற்காக ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு இந்தியாவில் இருந்தும் பலர்வந்தனர். இவ்வாலயம் அமைந்திருக்கும் இடத்தில் இருந்து ஏறக்குறைய முப்பது மைல் (30) தொலைவில் உள்ள களுதாவளை என்னும் ஊர் உள்ளது. அங்கு பிரசித்தி பெற்ற பிள்ளையார் ஆலயம் ஒன்றுள்ளது. கிழக்கிலங்கையின் பல பாகங்களில் இருந்தும் மற்றும் பிற இடங்களில் இருந்தும் பக்தர்கள் நேர்த்திவைத்தும் காவடி ஆட்டம், கரகாட்டம் ஆடியும் வழிபடுவர். அவ்வாறே தாம்போதி வேலைக்காக வந்த இந்தியர் ஒருவர் இப்பெருமான் மீது நம்பிக்கையாக நேர்த்திவைத்தார். அதாவது, தனது வாய்பேசாதபிள்ளை பேசினால் பால்பொங்கல் பொங்குவதாகவும் இன்னும் பல பிரசாதங்களையும் செய்து படைப்பதாகவும் மனமுருகி வேண்டினார். இதன் பலனாக வாய் பேசாதபிள்ளை பேசத்தொடங்கியது. இதைக் கண்டு மனம் மகிழ்ந்த பெற்றோர் களுதாவளை ஊருக்கு சென்று நேர்த்திக்கடனை நிறைவேற்ற வரும் வழியில் மழை வெள்ளம் தடுத்ததனால் அவ்வேளை மனம் பதை பதைத்து செய்வதறியாது நின்ற வேளை களுதாவளைப் பிள்ளையார் தன்னை நினைத்து இந்த இடத்தில் கல்லொன்றை வைத்து வழிபடும் படி கனவில் கட்டளையிட்டார். இதன் காரணமாகவே தம்பிலுவில் ஊரில் உள்ள இந்தப் பிள்ளையாருக்கும் களுதவளைப் பிள்ளையார் என்ற நாமம் அன்றிலிருந்து இன்று வரை வழங்கி வரலாயிற்று இது நடந்தது 1931 ஆண்டு என அறிய முடிகின்றது.

26.06.1971ல் (கோயிலை கட்டி) கும்பாபிஷேகம் செய்த செயம்புநாராயணன் என்பவரும் ஒரு இந்தியர் ஆவார்.

இவரது முகவரி

மொது மொத்தன் மொழி நாரயணன்
சொயம்பு நாரயணன்
நாலுகால் தாலுக்கா
தெரு நெல்வேலி ஜில்லா
தென் இந்தியா

தகவல் வழங்கியவர்
இவ்வாலய பூசகர்
கலாபூஷணம் சோ. கணேசமூர்த்தி ஐயர்

## 17. தம்பிலுவில் திருக்கோவில் பிரதேச வசந்தன் பாடல்கள்

வசந்தன் பாடல் பற்றிய சிறப்பினை முன்பு இப் பிரதேச மக்களால் கூறக்கண்டோம். அதே போன்று வேளாண்மை வெட்டு வசந்தன், உப்பட்டி கட்டு வசந்தன், சூடு போடு வசந்தன், பொலிகாவு வசந்தன் போன்ற பாடல்கள் முற்காலத்தில் இப் பகுதியில் வயல்வேலை செய்த காலங்களில் பாடப்பட்டது வழக்கம். இதை இப் பகுதி மக்களால் கூறப்பட்ட சொல்வளங்கள் என்றால் மிகையாகாது.

### I. வேளாண்மை வெட்டு வசந்தன் பாடல்

" வேலையாளர் மேலுமொரு நாள் முகூர்த்தத்தில் தங்கள்
வேளாண்மையை யறுக்க வே தொடங்கினர்
காலமே யெழுந்துகதி ரானவை கொய் வாரிந்தக்
கத்தி வெட்டு தில்லை யென்று காட்டிப் பறைவார்.

வெட்டு தில்லை இந்தக்கத்தி மொட்டை தானென் பாரந்த
வேலையெறி யாதகொல்லன் தன்னிடம் போவோம்
எட்டுச்சல்லிகத்திக்கிர யம்வாங்கிடும் கொல்லன் அவன்
எங்கொளித்து போனான்னெற்று தேடுவம் வாரீர்..."

## II. உப்பட்டி கட்டு வசந்தன்

தரு

தந்தனாதன தந்தன தந்தன தந்தான
தந்தனாதன தந்தனத் தானா...

"கொண்ட லாலே மழையுரு மிருளுது
கூடுங்கோ மள்ள ருப்பட்டி கட்ட
தென்றல் வந்திடுந் தெற்குத் திசையினில்
சென்று காரிருள் மண்டி முழங்குது

கோடையாலே மழையுமிருளுது
கூட்டுங்கோ கதி ரானவை யெல்லாம்
வாடையாலே மழையு மிருளுது
வாருங்கோமள்ளர் உட்பட்டி கட்ட..."

## III. சூட்டு வசந்தன் (சூடு வைத்தல் வசந்தன்)

தரு

தந்தன தந்தன தந்தன தந்தன
தந்தனத் தானானா தெய் தானா...
தந்தன தந்தன தந்தன தந்தன
தந்தனத் தானானா தெய்தானா.

"சிந்தையுடன் மள்ளார் செந்நெல்போ ரேற்றிய
செந்தமிழ் பாட வென் றே முண்ந்தேன்
கந்தனில் முன் வருங் கற்பக மே யெனைக்
காத்து ரெட்சித்தருள் வாயெப்போதும்

சுந்தரமாகிய மங்கையெ வாணியே
தூய தமிழுத வாயென்னாவில்
தந்தி யுரிமை யணித்தவன் மைந்தனே
சண்முகனேயருள் தா வெப்போதும்.

## IV. சூடு போடல் வசந்தன்

தரு

தான தானின தான தானினே
தான தானின தானினா

சூட்டைத் தள்ளட மாட்டை யேத்தடா
சோம்பல் தனத்தை துடையடா
பாட்டைப் பாடடா மாட்டைச் சாயடா
பள்ள ரானவ ரனைவரும்

போரைக் கல்லடா பொலியைக் கீறடா
பொழுது விடியு முன்னமே
பாரைப் பழித்து வளர்ந்த தனத்துப்
பள்ளிகள் யாரையு மழை யெடா...

## V. பொலி காவுகிற வசந்தன் (போடியார் வீட்டுக்கு புதிர் காவுதல்)

தரு

தனன தானன தானதந்தனத் தனன
தனன தனன தானதந்தனத் தனன
" சூடஞ்சு காடாவேழு சூடு போட்டுக் கட்டலாச்சுப்
போடியார் வீட்டுக்குப் புதிர் காவி யே போறோம்

போடியார் முன்னே போக முல்லைக்காரன் பின்னே வர
காணியில் விளைந்த நெல்லைக் காவிக் கொண்டு போறோம்.

நெல்லு மொருகடகம் வைக்கோல் மறுபக்கம்
இருபக்க மும்பாரச் சுமை யேத்தினாரே

முத்தட்டுக் கூலிக்காரன் மூன்று வாழைக் குலையும்
முல்லை வயற் கூலிக்காரன் மூன்று தயிர்பானை

ஆக ஏழு காக்கொண்டு இறங்கினோ மண்ணே
அவரெங்க ளுக்குச் செய்த பிறசண்டைக் கேளும்

போடியார் ஒரு சோறு முல்லைக்கார னிருசோறு
போதுமள வந்தந்து போகவே சொன்னார்

கல்லிருக்குக் கட்டையில்லைச் சந்தணம் பூசக்
காசுதாறேன் கட்டை வாங்கி வாருங்கோ வென்றார்

இப்படிக் கொத்தபோடி யாருக்கு நாங்கள்
என்ன பிற சண்டு செய்யப் போகின்றோ மண்ணே!

## 18. திருக்கோவில் தம்பிலுவில் பிரதேச பழக்க வழக்கங்கள்

மிகவும் பழமை வாய்ந்த பிரதான ஆலயங்களின் திருவிழா உற்சவ காலங்களில் விருது அல்லது திருக்காளாஞ்சி கொடுத்தல் இப்பிரதேச ஆலயங்களில் ஓர் சிறப்பம்சமாகும். சில ஆலயங்களில் இன்றும் அவதானி க்க கூடியதாகவுள்ளது. ஆண்டவனுக்கு அமுதுபடைத்த திருவமுதை, திருவமுது முட்டி என்றும், இதை முட்டி கூறுதல் என்றும், குடுக்கை கூறுதல் என்றும், மற்றும் பூவட்டா என்று செல்லப்படுகின்ற நிகழ்வுகள் நடைபெறுவதை அவதானிக்க முடியும். மேலே கூறப்பட்ட விடயம் குடுக்கை கூறுதல் என கலிங்க மன்னனால் பொறிக்கப்பட்ட பழைய கல் வெட்டிலும் குறிப்பிடப்படுள்ளது.

இப்பிரதேசத்தில் குல விருது என்று சொல்லப்படும் இன்னுமொரு வகையான பழக்க வழக்கத்தை காணலாம். இதை கூரை முடிவைக்கும் வழக்கம் என்றும் இன்றும் பழமை குன்றாத கிராமங்களிலும் தம்பிலுவில், திருக்கோவில் பிரதேசத்திலும் கண்ணூடாக காண முடிகின்றது. குறித்த சடங்கு நடைபெறும் வீட்டில் முன்வாசல் படிக்கு மேல் தத்தம் குடிகுல விருதுப்படி மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது நிறைகுடங்கள் வைத்து கதவின் இரு புறமாகவும் நெடிய சீலைகளை கொய்து விட்டு அவற்றுக்கு நேரே இரு புறமும் நிறைகுடம் மங்கல விளக்கு என்பன வைப்பது வழக்கம்.

தம்பிலுவில், திருக்கோவில் பிரதேசத்தில் முல்லை, மருதம், நெய்தல் சார்ந்த பிரதேசத்தில் மந்தை செல்வம் முன்பிருந்து இன்று வரை பெரிதும் போற்றிவரப்படுகின்றது. அதாவது பசு, எருமை மாடுகள் என்பன உழவர் செல்வங்கள் ஆதலால் அவற்றைப் போற்றி பாதுகாத்து வளர்க்க வேண்டிய கடமை அவரவருக்கு உள்ளது. ஆனாலும், குலவிருதுகள் பெறும் மக்கள் குடிமரவினர் ஒவ்வொருவரும் தமக்கென வழங்கப் பெற்ற குல விருதுகளை தம் மாடுகளுக்கும் குறியாக சுட்டு கொள்வர் ஆயினர். குறித்த மாட்டின் இடதுபுற உடற்பகுதியிலே மேற்படையில் மாட்டில் பதியுமாறு பழுக்க் சுட்ட இரும்புக்கோலால் தமக்குரிய அடையாளங்களை எழுதுவது குறி சுடல் ஆயிற்று.

இக் குறியிட்ட மாடு யாருக்கு உடையது என அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும் வகையில் குறிசுடல் இப்பகுதி மக்களின் பழக்கமாகும்.

## I. விருந்தோம்பல் :

வந்தாரை வாழவைக்கும் சிங்காரத் தம்பிலுவில் என்பது தம்பிலுவில் மக்களின் முதுமொழி ஆகும். இவ்வூரில் இம் மொழி இன்றும் வழங்கி வருகிறது. பழங்காலம் தொடக்கம் தமிழ்ப்பண்பாட்டினுடைய இடமாக விளங்கி வரும் தம்பிலுவில்

கிராமத்தில் இன்னும் சில கிராமங்களிலும் உள்ள மக்களிடையே நடந்து வரும் விருந்து வைபவம், திருமணம்,பிள்ளைப்பேறு, பூப்பெய்தல், மரணச்சடங்கு முதலானவற்றின் போது மற்றையோருக்கு புதிதாகக் தோன்றினாலும் சில பழைய பழக்க வழக்கங் களை நாம் இங்கு கண்ணூடாக காணக்கூடியதாக இருக்கிறது.

விருந்தாக வந்தவர்களுக்கு குலம் கோத்திரம். வயது, செல்வாக்கு, முதலானவற்றுக்கு ஏற்றபடி சிறு துணியால், மூடி, மூடாமல், வரிசைப்படி முதல் தண்ணீர் கொடுத்து சாப்பிடுவதற்கு எழுமாறு அழைத்தல். முக்கியமான நிகழ்வாகும். முற்காலத்தில் திருமணத்திற்கு மற்றையோரை அழைப்பதனை வெற்றிலை, பாக்கு வைத்தல் என்று குறிப்பிடுவர். திருமண செய்தியை அறிவிக்க செல்வோர் வெண்கல வட்டா ஒன்றில் வெற்றிலை, பாக்கு இரண்டையும் வைத்து செய்தியை தம் உறவினர் வீட்டுக்குச் சென்று சொல்லுவர். இதனை மங்களமாக திருமணச் செய்தியை ஏற்றுக் கொள்ள சொல்வது என்பது பொருத்தமாகும்.

## II. குரவையிடல்

(பெண்கள் சிலர் சேர்ந்து) சங்கம் வளர்த்த தமிழ் நாட்டில் இலக்கியமும் பின்னிக்கிடந்த திரு நாட்டிலே மக்கள் ஆடி வந்த பல வகைக் கூத்துக் களில் குரவையும் ஒன்றாக இருந்தது. பண்டைய மட்டக்களப்பு, திருக்கோவில், தம்பிலுவில் போன்ற கிராமங்களில் கூறிய குரவையிடல் நிகழ்ச்சி கோவில் திருவிழாக்களிலும் தெய்வத் தன்மை பரவும் மற்றைய சடங்குகளிலும் பெண்கள் குரவை இடுவது வழக்கம். அக்காலங்களில் ஏழுவர் அல்லது ஒன்பதுபேர் சேர்ந்து குரவை போடுவார்கள். வாய்யிதழில் நாவை ஒடுக்கிச் சுருட்டி வாயின் மேலுதட்டில் உட்புறமாக நாநுனியில் தடவும் போது எழுப்பும் ஒலியே குரவையாகும்.

குரவை இடும் பொழுது வலது கையை மேல் உதட்டில் வைத்துக் கொண்டும் மடித்து மேல் நோக்கி நிற்கும் அவ் வலக்கையினை முழங்கைப் புறமாக இடக்கையால் தொட்டுக் கொள்வது பொது வழக்கமாகும்.

கன்னியர் மங்கைப்பருவம் அடைந்த குறித்த விழாக்களிலே குறிப்பிட்ட படியான ஒன்றுபட்ட எண் கொண்ட மகளிர் வட்டமாக சூழ்ந்து நின்று மேற்காட்டிய குரவை இடுதல் தம்பிலுவில் பிரதேசத்திலே இன்றும் வழக்கமாகவுள்ளது. கண்ணகி வழிபாடு மிகுந்த இப்பிரதேசத்தில் கோவில்களில் சடங்கு நடைபெறும் நாட்களையுடைய காலங்களில் பூசை வேளைகளில் குரவை இடுதல் இன்றியமையாத வழிபாட்டு முறையாக காணப்படுகிறது. அத்தோடு அங்குள்ள திருக்கோவில் முருகன் கோவில்களில் பூசை வேளைகளில் மக்கள் ஒன்று கூடும் போது குரவை இடுதல், சூரன்போர் நடத்தப்பட்டு வரும் காலங்களிலும் திருமணபடனக்காலத்திலும் குரவை வழிபாடு இன்றியமையாதது.

குரவை பற்றிப் பேசும் தமிழ் நூல்கள் முதன்மை படைத்த இலக்கியமாக சிலப்பதிகாரத்தினுள் இரண்டு பெரிய தமிழ் குரவையை நாம் காண்கின் றோம். ஒன்று ஆச்சிரியர் குரவையும் மற்றையது குன்றங்குரவையும் ஆகும். அவ்விரண்டும் முறையே திருமாலையும் அழைத்தனர். என்று தெரிகின்றது. மேல் நாட்டு நாகரீகம் மற்றும் புதிய நாகரீகப்பழக்க வழக்கங்களும் படிப்புக்களும் வளர வளர அத்தகைய பண்டைக்கலை வளம் மக்களிடையே இருந்து விடைபெற்றுச் செல்வதை காணக்கூடிய தாக இருக்கின்றன.

# 19. தம்பிலுவில் செந்தமிழ்ச் சொற்கள்

ஆதிகாலத்தில் உழவர் வயல் நிலங்களில் தம்பிலுவில் பிரதேச மக்களால் சில செந்தமிழ்சொற்கள் தனித்தன்மைமிக்கன வையாகவும். அத்தோடு சொற்கள் வளம் நிறைந்ததாயும் காணப்பட்டன. அவையாவன போடியார், முல்லைக்காரன், குருவிக்காரன், வட்டவிதானை, வக்கடை, வரம்பு, நிலை எடுப்பு, விதை நெல், சூடுவைத்தல், உட்பட்டி சூடு போடுதல், அவுரி களவெட்டிப் பொங்கல் எனப் பல. அவை சிறந்த சொல் வளக்கங்களைக் கொண்டு விளங்கிருந்தன.

## I. போடியார்

போடியார் என்பதை வசந்தன் பாடலில் முன்பு கூறக் கண்டோம். இவர் பல ஏக்கர் நெற்காணிகளுக்குச் சொந்தக்காரராக இருப்பார். போடியார் என்பதனை உழவர் தலைவர் என்றும் அழைப்பர். இவர் பழங்காலத்திலே பெரும் மதிப்பைப் பெற்றவராக விளங்கினார். ஆனால் காலப் போக்கில் போடியார் அந்தஸ்த்து பலராலும் அடைய முடிந்தது.

## II. முல்லைக்காரன்

முல்லை என்னும் சொல் ஓர் நிலத்தைக்குறிப்பதனால் முல்லைக்காரன் என்று ஏற்பட்டிருக்கலாம். முல்லை நிலத்தின் போடியாரின் ஆடு, மாடுகளைப் பராமரிப்பவனாகவும் அத்தோடு வயல் வேலைக்காரனாகவும் போடியாரின் வயலிலே நடக்கும் சகல வேலைகளும் பொறுப்பாளியா கவும், முல்லைக்காரனே பொறுப்பாய் இருப்பார்.

## III. குருவிக்காரன் (குருவி காவல்)

முல்லைக்காரன் செய்யமுடியாத வேலைகளை வயலில் வேளான்மை கதிர் பறிந்த பிற்பாடு குருவி பார்த்தல் காவலுக்காக முல்லைக்காரனால் நியமிக்கப்படுபவரே குருவிக்காரன் ஆவார். இவர் முல்லைக்காரனுக்கு உதவியாளனாகவும் உணவு மற்றும் ஏனைய வேலைகளை செய்பவரா கவும் இருப்பார்.

## IV. வட்டவிதானை

குறிப்பிட்ட வயல்காணி ஒன்று இருப்பின் அது பல ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டதாக இருக்கும். இவ் வயல் காணி அனைத்தும் இவருவருடைய கட்டுப்பாட்டுக்குள்ளே வைத்திருப்பார். வேலி போடல், நீர் பாய்ச்சுதல், பசளை வழங்குதல் போன்ற மற்றும் அரசாங்கம் தொடர்பான வேலை அனைத்தையும் கவனித்துக் கொண்டு கூலியாக விவசாயிகளிடமிருந்து வரி அறவீடு செய்வது இவர்களுடைய கடமையாகும்.

## V. வயல் நிலம்

வரம்புயர நிர் உயரும், நீர் உயர நெல் உயரும், செல் உயர குடியுயரும், குடி உயர கோனுயர்வான். வரம்புகள் கொண்ட நிலம் முழுதும் சேர்ந்து வயல் நிலம் எனப்படும். பலபேரின் வயல்கள் சேர்ந்து வட்டை என்றும் அழைக்கப்படும். அதாவது ஒரு வட்டடையில் பல போடிமார்களினது வயல் நிலம் அடங்கியிருக்கும்.

## VI. வக்கடை வரம்பு

ஒரு வயல் பரப்பை சிறு சிறு சதுரத்துண்டுகளாக பகுதி பகுதியாக்கபட்டு மணற் குவியலால் கட்டப்பட்ட மண்ற்கட்டே வரம்பு எனப்படும். அக்குறிப்பிட்ட சதுரத்துண்டுகளை வரவை என்றும் கூறுவர். இவ் வரவையில் இடையிடையே சிறு இடைவெளிகள் வைத்துக் கொள்வர். இதை வக்கடை என்று சொல்வர். இது நீர்ப்பாய்ச்சுவதற்காக பயன்படுத் தப்படும். பாய்ச்சலுக்கானவக்கடை பாய்ச்சல் வக்கடை எனவும் வடிச்சலுக் கான வக்கடை வடிச்சல் வக்கடை என்றும் அழைக்கப்படும்.

## VII. நிலையெடுப்பு

வயல் உழவ ஆரம்பிப்பதற்கு பஞ்சாங்கத்தில் குறிப்பிடப்பட்டதின் பிரகாரம் (ஏர் நாள்) நல்ல தினம் பார்த்து வயலில் முதல் நாள் உழுவது நிலையெடுப்பு எனப்படும்.

## VIII. இரட்டிப்பு

இதை 2ம் அடி என்றும் இரட்டிப்பு என்றும் சொல்வர். உழச்சார் தப்பாமல் உழுதல் இரண்டாம் அடி

## IX. விதை நெல்

இது விதைப்பதற்கென்று விவசாயியினால் தெரிவு செய்து பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள நெல்லாகும். இதை விதை நெல் என்று கூறுவர்.

## X. அறுவடை குடுதி முடிதல்

வயல் அறுவடைக்காலங்களில் பகுதி பகுதியாக ஓர் அளவுப் பங்கு பிரிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் அறுவடைக்காக கொடுக்கப்படும். இடைவெளியில் சில வேளாண்மையில் ஒரு பிடி எடுத்து குடுதி முடிவதையே குடுதி என்பர். இது அறுவடைக்காலங்களில் வயலில் வழங்கப்படும் ஓர் சொல் வளம்.

## XI. புதிர் எடுத்தல்

வயலில் நெல் அறுவடைப்பருவம் வந்ததும் கதிர்களை வீட்டுக்கு கொண்டு வருதல் புதிர் எடுத்தல் எனப்படும். இப் புதிர் எடுத்தல் என்பது நிலத்தில் பொங்கல் பூசை வைத்து சூரியனுக்கும் நாகதம்பிரானுக்கும் பால் பழம் கரைத்து அபிஷேகம் செய்து வழிபடலே புதிர் எடுத்தல் ஆகும்.

## XII. ஒட்டுத்தாள்

வயல் அறுவடை செய்தவுடன் கதிரறுக்கப்பட்ட பிற்பாடு நெற்பயிரின் அடிப்பாகம் சுமார் அரை அடி அளவில் நிலத்தில் காணப்படும் இவையே ஒட்டுத்தாள் எனப்படும்.

## XIII. சூடு வைத்தல்

நெல் அறுவடையின் போது நெற்கதிர்களை சிறு சிறு குவியலாக உப்பட்டியாக்கி அவற்றைப் பல பேர் சேர்ந்து கட்டுக்கட்டாக கட்டிய பிற்பாடு ஓரிடத்தில் தலை மேல் சுமந்து கொண்டு வயலில் களவெட்டி என்று சொல்ப்படும் இடத்தில் குவிவாவகக் குவித்து வைத்ததே சூடு வைத்தல் எனப்படும்.

## XIV. பொலி

இது இருவகைப்படும். சூடு போட்டு குவித்த நெல்லை தூத்தா பொலி எனவும். தூத்திய நெல்ல தூத்திய பொலி எனவும் கூறுவது வழக்கம்.

## XV. அவுரி

மூன்று கம்புகளை கயிறுகளாகத் திரிக்கப்பட்டு வைக்கோலால் சேர்த்து கட்டி எடுத்த முக்காலியே அவுரி எனப்படும் இதன் மேல் ஏறி நின்றே அக்காலத்தில் நெல் தூற்றுவர்.

## XVI. மரைக்கால்

நெல்லை அளப்பதற்காக பிரம்பால் அல்லது மரத்தால் செய்யப்பட்ட ஓர் அளவு கோலே மரைக்கால் எனப்படும்.

## XVII. கைப்பெட்டி

வயலிலே பொலி தூற்றுவதற்காக பனை மரத்தின் ஓலையினால் அல்லது சீவி எடுக்கப்பட்ட பிரம்பால் பின்னப்பட்ட பெட்டியே கைப்பெட்டி எனப்படும். இதுவும் ஒரு மரைக்கால் போன்றே இருக்கும்.

## XVIII. களவட்டிப் பொங்கல்

வயல் வேலை அனைத்தம் முடித்துக் கொண்டு நெல்லை வீட்டுக்கு கொண்டு சென்ற பிற்பாடு சூடு வைக்கப்பட்ட இடத்தில் அதாவது களவெட்டியில் பூமி மாதாவாகிய பூமாதேவிக்கு பொங்கல் பூசை செய்து நன்றி செலுத்துவதே களவட்டி பொங்கல் என்று மரபு ஆகும்.

## XIX. களவட்டி

வயலில் வரவை என்று சொல்லும் இடங்களில் மழை பெய்தால் நீர் தேங்கி நிற்காத ஒரு வரவையை தெரிந்து எடுத்து ஒட்டுத்தாட்களை நன்றாகச் செதுக்கித் துப்புரவு செய்து சூடு குவித்து வைக்கப்பட்டுள்ள இடமே களவட்டி என அழைக்கப்படும்.

# 20. பேச்சு வழக்குச் செந்தமிழ் சொல்

இப் பிரதேசத்திலே ஆதிகாலத்தில் இருந்து சொல் வளங்கள் மக்களிடை யேயுள்ள மொழிநடை வழக்கத்தை அழகு செய்தன இதை இன்றும் கூட இலங்கையில் வேறுபாகங்களில் மட்டகளப்பு பேச்சு வழக்கம் என்று காணலாம். கற்றோர் கண்டு இப் பேச்சு வழக்கத்தை இன்புறத்தக்க செந்தமிழ் சொல் என வழங்கியிருந்தது. இவற்றின் முடிந்தமட்டில் இங்கு அகர வரிசைப்படுத்திக் காட்டுகின்றேன்.

செந்தமிழ் சொல் வளம்

| | | |
|---|---|---|
| (அ) | அம்மான் | : மாமா |
| | அம்புலி | : சந்திரன் |
| | அசமதாகம் | : ஓமம் |
| | அசுப்பு | : நடமாட்டம் பரிமாறல் |

அடுக்குப்படுத்துதல் : ஒரு வேலை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தல்

அடுக்குப்பார்த்தல் : ஒத்திகைப்பார்த்தல்

அட்டுவம் : மரம் அல்லது விறகுகளை அடுக்கி வைத்தல்

அத்திமில : அரிசை அரிக்கும் சட்டி

அரிச்சானம் : தொந்தரவு கொடுத்தல்

அறுத்தாப்புக்கிழங்கு : உருளை கிழங்கு

ஆண்டார் : சந்திரன் (இரவை ஆள்பவன்)

(ஆ) ஆல்வாடுதல் : இளம் வெயில் காய்தல், இலேசாக வாட்டுதல்

ஆணம் : சொதி, தேங்காய் பாலால் செய்யப்பட்ட கறி

ஆக்கினை : தொல்லை, தண்டனை

ஆத்தாது : இயலாது

(இ) இறுக்கு : கெட்டியாக

இடறுதல் : இடறி விழல்

(ஈ) ஈர்ப்புவைத்தல்: புண்ணில் இறுபுழு உண்டாதல்

ஈர் : பேன் முட்டை

ஈவு விடல் : இடை வெளி உண்டாதல்

ஈறல் : மாறாத மனக்கவலை, பெருங்காடு

(உ) உலுவா அரிசி: வெந்தயம்

உள்ள நாளும்: ஒவ்வொரு நாளும்

உரஞ்சுதல் : தனகுதல்

உளலை : வேலிக்கட்டையில் போடப்படும் தடிகள் (இதனால் வழி அடைக்கப்படும்)

| | | |
|---|---|---|
| (ஊ) | ஊருற | : ஊர்ந்து செல்லல் |
| | ஊத்து | : ஊற்று |
| | ஊறல் | : கருக்கல்,மருந்து வகை கொதிக்கப்பட்ட அமிலத் தன்மை |
| (எ) | எங்கட | : எங்களுடையது |
| | எங்கிட்டு | : எந்தப்பக்கம் |
| | எண்படுதல் | : அகப்படுதல் |
| | எத்துதல் | : ஏமாற்றுதல் |
| (ஏ) | ஏமலாந்தி | : ஏமாளி |
| | ஏனம் | : ஒரு பாத்திரம் |
| | உவனியம் | : இன்று சோற்றுக்கு உவனேயம் ஒன்று இல்லை (கறி) |
| (ஒ) | ஒத்தாப்பு | : வீட்டுப்பக்கம், தாழ்வாரம், வீடு |
| | ஒத்தி | : மற்றவரை சேர்ந்து வாழல் |
| | ஒய்யாரம் | : எழில் அழகு |
| | ஒல்லி | : தேரை, பிச்சி, தேரை மெய்ந்த தேங்காய் |
| (ஓ) | ஓறுவாய் | : வாய் உடைந்த பாத்திரம் |
| | ஓசி | : இலவசம் |
| | கக்கிசம் | : கவலை கக்கிசம், பொருட்கவலை |
| | கசிதல் | : ஊறுதல் சிறிய துவாரம் |
| | கச்சை | : கோவணம் |
| | கஞ்சல் | : ஒழுக்கம் கெட்டவன், அழுக்கு |
| | கடவல் | : கடப்பு, தெருவாசல் |
| | கடைக்குட்டி | : கடைசிப்பிள்ளை |
| | கட்டாடியர் | : பூசகர் |
| | கண்ணயர்தல் | : சிறு உறக்கம் |
| | கத்தறை | : சந்ததி வகுத்துவார் |
| | கந்தப்பார்த்தல் | : முடிவாக்கல் |
| | கப்பு | : கவர் உள்ள கம்பு |

கம்மாளன் : தட்டான்
கரட்டி : காய்ந்த சுண்ணாம்பு
கரப்பு : மீன் பிடிக்கும் பொறி
கருக்கு : பனம் மட்டையில் காணப்படும் ஓர் வாள் போன்ற புரியாகும்
காலமே : காலை நேரம்
காலை : பயிர்த்தோட்டம்
காளாஞ்சி : பூக்கிண்ணம்
காத்தனவு : பிள்ளைகளுக்கு பேய் பிசாசு பிடித்தல்
கிரி கோலம் : அவட்சனமான காட்சி
கிறுக்கி : கதவின் உட்பக்கத்தில் தாழ் இடுமோர் சிறிய மரத்துண்டு
குச்சிக்குடில் : சிறிய வீடு
குஞ்சப்பு : சிறிய தந்தை
குஞ்சாத்தை : சிறிய அன்னை
குடுகு : குடுக்கை, உருக்குலைந்த பாத்திரம்
குண்டாளம் : உள் தாண்ட பாத்திரம்
குளறுதல் : அழுதல்
கூதல் : குளிரால் வரும் நடுக்கம்
கொஞ்சுதல் : முத்தமிடல்
கொடுக்கல் : ஆயத்தமாதல்
கொட்டகை : சுவரில்லாத நெடிய கூடம்
கொம்புதல் : ஏசுதல்
கோப்புசம் : வீட்டுக்கூரையின் மேற்பகுதி
சக்கட்டு : ஓர் சொல் சாமான்
சக்கு : பூஞ்சாணம், பழுதடைதல்
சங்கை : மானம்
சச்சடி : ஆரவாரமுள்ள சனசெருக்கடி
சாங்கம் : சாயல், பொருத்தம்
சாட்டு : காரணம்
சாதிமான் : உயர்குடியில் பிறந்தோன்

சித்திராம் பூச்சி: சித்தெறும்பு, நுள்ளான்
சிம்புலி : அதிகமாக கண்சிமிட்டுபவர்
சுள்ழி : காய்ந்த சிறிய குச்சி
சுறுக்காய் : விரைவாக
சூத்திரம் : சைக்கிள் வண்டி
சூம்புதல் : மெலிதல்
செகிடன் : செவிடன்
செக்கல் : மாலை நேரம்
செடிநாற்றம் : கெட்ட நாற்றம்
சொட்டு : தேங்காய் சொட்டு, பால்
சேட்டை : ஆசை, விருப்பம்
சோங்கல் : சோம்பல்
தண்ணிச் சோறு: பழஞ்சோறு
தண்டயன் : மீனவத்தலைவன்
தண்டக்காரன் : வண்ணான் தலைவன்
தத்தி : ஒரு பரம்பரையினர்
தத்துவம் : குணம், இயல்பு, தத்துவம்
தப்பிலி : தப்புள்ளவன்
தாயதி : பரம்பரை வந்த சொத்து
திடல் : மேட்டு நிலம்
திண்னை : விறாந்தை
திலாவுதல் : நெற்காயவைத்தல் (போல் ஓர் சொல்)
திறாவுதல் : தடவுதல்
துலாவுதல் : காச்சுதல்
துக்குறி : கெட்ட நிகழ்வு நடைபெறுவதற்கான அறிகுறி
துடியன் : சற்று பெரியது
துமிர்தல் : மழை தூறுதல்
துரவு : நீர் கேணி
துவழுதல் : வளைதல்
துறட்டி : நுணியில் கொழு வைத்து கட்டப்பட்ட கம்பு
தெண்டித்தல் : கட்டாயப்படுத்தல்

தேவல்ல : வேண்டாம்
தொப்பட்டம் : மழையில் நனைதல்
தொம்பல் : சேறு
தோம்புதோர் : விவாகப்பதிவு, பிறப்பு, இறப்பு என்பன தயாரிப்பவர்
நட்டுவக்காலி : தேள்
நறுவிசை : வரையறை, கண்டிப்பு
நண்ணித்தீன் : சிற்றுண்டி
நாசமறுப்பு : தொல்லை
நாசிவன் : அம்பட்டன், பரிகாரி
நாம்பன் : இளைய எருது
நாளப்புறத்தை: நாளைக்கு அடுத்தநாள், நாளை மறுநாள்
நிறை மதியம் : நண்பகல்
நூர்தல் : விளக்கணைத்தல்
நெத்திமுட்டு : வீட்டின் சரிவு
நேரத்தோட : நேரத்தின் முதலில், வேளைக்கு முன்
பட்டோலை : மருந்து சரக்கு
பம்பல் : அதிகம்
பரவணி : பரம்பரை பழக்கம்
பரிகாரி : வைத்தியர்
பரு : சிறு கட்டு
பவுசு : நடப்பு, எடுப்பு
பன்னரை : அரிதட்டு
பாறை : நிலத்தின் கீழ் பரந்து பட அறுக்கப்பட்டது முதலை முதலியன வாழும் இடம்
பாளி : முதலை வசிக்கும் இடம்
பிசினி : ஈயாதவன்
பிள்ளைத்தாச்சி: கற்பவதி
பிணைதல் : குறைத்தல்
பிணைத்தல் : ஒன்று சேர்தல்
புடை : பானையின் வளைந்த உட்பக்கம்

புடைத்தல் : அரிசி போன்ற பொருட்களை சுளகினால் புடைத்தல்
புழுங்குதல் : அவித்தல், கடும் வெப்பத்தால் வியர்த்தல்
புறுபுறுப்பு : ஏசுதல், முணுமுணுத்தல்
பூஞ்ஞானம் : சக்குப்பிடித்தல்
பூணாரம் : நகைகளுக்கான பொதுப்பெயர்
பூந்த பொழுது: சூரியன் படும் நேரம்
பூருதல் : நுழைதல்
பூவல் : குடிநீருடைய சிறிய மடு
பெட்டை : பெண்
பொடியன் : சிறுவயதுடைய ஆண்
மதினி : மச்சாள், இளையமச்சாள்
மதவுதல் : அதிகம் குடித்தல்
மதித்தல் : அடையாளம் காணல்
மாராப்பு : மூட்டை
மாரி : ஆண்மாரி
மால் : பெரிய ஓலைக்கூடம்
முடா மிடா (கிடாரம்): பெரிய பானை
முடுகுதல் : கிட்ட போகுதல்
முண்டாசி : தலைப்பாகை
முந்தநாத்து : நேற்றைக்கு முந்திய நாள்
முந்தானை : சீலையின் முன்பகுதி
முழுவியளம் : சந்திக்கும் சகுனம்
மூள : பிறகு, மீள, மீண்டும், திரும்பவும்
மொல்லாப்பு : மீன் கூட்டம்
மோக்கன் : பெரிய தவளை
மொத்தி : வாழைப்பூ
ராங்கி : பலம்
ரேகித்தல் : பழக்கமாய் அமைந்து விட்டது
லந்து : பெரும் காடு
லாசுவாரிக்கதை: பொருத்தமற்ற பேச்சு

| | |
|---|---|
| வகில் (பவுல்) | : உலோபித்தல் |
| வங்கு | : பெரிய புதைகுழி |
| வம்பரை | : பெரும் தேன்கூடு |
| வயற்கேடு | : மெலிவு, தன்வசம் கெடல் |
| வந்தி | : நட்ட ஈடு |
| வல்லுகம் | : வெற்றிலை, பாக்கு வைக்கும் பை |
| வளிசல் | : வீடு, வாசல் அற்றவன் |
| வரகத்து | : பெரிய வறுமை |
| வாருதல் | : அள்ளுதல், கூட்டிச் சேர்த்தல் |
| வாருகல் | : கூட்டித்தடி |
| வாலாயம் | : வைகுந்த நிலை |
| விசர் | : பைத்தியம் |
| விஷலம், வியளம் | : செய்தி |
| விட்டவிடிய | : அதிகாலை |
| விறுக்கர் | : முரடர் |
| வீராப்பு | : செருக்கு |
| வெக்கடை | : நாணம் |
| வெட்டகிறங்கு | : புறப்படு, வெளிக்கிளம்பு |
| வெம்பு | : சுடுமணல் |
| வெறுமனே | : ஒன்றுமில்லாமல் |
| வெறுவாக்கிலங்கேடு | : பெரும் வறுமை |
| வேகரம் | : காரமான மணம் |
| வேலிக்கால் | : வேலியின் அருகாமை |
| வைத்து | : இதுவோர் இடைச்சொல், தனதாக்குதல் |
| வேலிக்கட்டை | : வேலியில் நடும் கட்டை |

மட்டக்களப்பு பேச்சு வழக்கில் நிலவளமும் கலை வளமும் பெருக்குவதில் தம்பிலுவில், திருக்கோவில் மக்கள் மிகவும் ஓர் முக்கிய இடத்தைப் பிடித்திருந்தனர். அவர்களிடத்தில் செந்தமிழ் சொல்வளம் மிகவும் சிறப்புடையதாக இருந்ததை உணரமுடிகின்றது. ஆனால் நாகரீகம் வளர வளர மேல்நாட்டு மொழிகளைக் கற்று எங்களது செந்தமிழ் சொல்வளம் மருவிச் செல்வதை காணக்கூடியதாகவுள்ளது.

# 21. திருக்கோவில், தம்பிலுவில் பிரதேச பூர்வீக துறைமுகச் சிறப்பு

பூர்வீக காலத்தில் கிழக்கு உலகில் இங்கிலாந்து என்று மேலைத்தேய நாடுகளில் புகழ்பெற்ற இலங்கை நீர்வளம், நிலவளம் என்பவற்றை கொண்டிருந்ததால் ஈழத்திற்கு வந்து செல்லும் வெளிநாட்டவர் இந்நாட்டின் இயற்கை அழகினையும் மக்களின் பண்பாடுகளையும் புகழ்ந்தனர் எனலாம். மேற்குலக வெளிநாட்டவர் இலங்கையின் அழகினைக் கேட்டு அறியத் தொடங்கிய போது இதன் விளைபொருளுக்கு இருந்த புகழ் அந்நாரைப் பெரிதும் ஈர்த்தது. இல ங்கைத் தீவில் இருந்து பெறப்படும் மிளகு, கறுவா என்பன உலகிலே மிகச் சிறந்தது என அவர்கள் கருதத் தொடங்கிய போதுதான் வர்த்தகம் செய்யலாம் என நினைக்கத் தொடங்கினர். இந்தியா, இத்தாலி, கிரேக்கம், பாரசீகம் போன்ற நாடுகளுக்கு இலங்கையில் இருந்து அரிசி, மிளகு, யானைத்தந்தம், முத்து என்பன ஏற்றுமதியாக்கப்பட்டதற்கான வரலாறுகள் உண்டு.

இந்த ஏற்றுமதி தொடர்பினை மேலும் வளர்த்து நின்ற ஈழத்து கடல்வாய், மாதோட்டம் என்பன நன்கு அறியப்பெற்றதொன்றாகும். போர்த்துக்கேயர் இலங்கையை அடைந்தபோது திருக்கோவில், அறுகம்பை, கற்குடா, மட்டக்களப்பு உட்பட *31* கடற்துறைகள் தன்னிலையில் இருந்ததென அவர்கள் எழுதி வைத்த துறைமுகக் குறிப்புக்கள் மூலம் அறிய முடிகின்றது. ஆங்கிலேயர் இலங்கையை ஆட்சி செய்த காலத்திலேயே கிழக்கிலங்கையில் தென்னைப்பயிர் செய்கை நன்கு செய்கைபண்ணப் பட்டது. இங்கு தரிசி நிலமாக இருந்த நிலங்களும் அவர்களால் வளஞ்செழிக்கலாயிற்று அதனால் பெற்ற பயன்களை வெளிநாடுகளுக்கு ஏற்றி வைப்பதற்கு ஏற்ற சிறந்த துறைமுகமாக மட்டக்களப்புக்கு தெற்கே எமது திருக்கோவில் பிரதேசத்தை

ஆங்கிலேயர் அமைத்தனர். 1913ம் ஆண்டளவில் தென்மேல் பருவப்பெயர்ச்சிக் காற்றுக்காலத்திலும் இத்துறை முகம் பயன்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

அடுத்து இன்னுமோர் வரலாறு கூறும் திருக்கோவில் துறைமுகம் என்று குறிப்பிடும் போது அங்குள்ள பழமையான கோவிலை நாம் நினைவு கூறுகிறோம். அக்கோவிலின் கற்ப கிரகங்கங்கள் மேல் அமைந்துள்ள சிற்ப வேலையானது மிகப்பழங்காலத்தைச் சேர்ந்தது என்று முன்பு கூறக் கண்டோம். அக்கோவிலை புனருத்தாரணம் செய்ய வந்த சிற்பியர்கள் எல்லோரும் இந்தியாவில் இருந்து திருக்கோவில் துறைமுகத்தில் வந்திறங்கியதாக ஓர் வரலாறு உண்டு.

இத்துறைமுகத்தக்கு இன்னுமோர் வரலாறும் உண்டு "அசவோடோ" என்ற போர்த்துகேய தளபதி இத்துறைவழியே இறங்கி இங்குள்ள கோவிலை அழித்து கணேச விக்கிரகங்களையும் உடைத்து கொள்ளை கொண்டு மீண்ட வரலாறும் உண்டு. அத்தோடு இத்துறைமுகத்தின் பழமையான வெளிச்ச வீட்டுத்தொடர்பு பற்றிக்கதைகளும் பல வழங்கப் படுகின்றன. பெரிய தென்னந்தோட்டங்கள் திருக்கோவில் பிரதேசத்திலே பிரபல்யம் அடைந்த பிற்காலத்திலே கொப்பரா ஏற்றுமதிக்கு பெயர் போன பெரிய துறைமுகமாக இது விளங்கியிருந்தாயிற்று. இத் துறைமுகத்தை வளம் செய்த பெருமை அக்காலத்தில் ஆட்சி செய்த ஆங்கிலேயரைச் சார்ந்ததாகும்.

இந்நாட்டில் ஏற்பட்ட பேரழிவுகள் இப்பிதேசத்தையும் விட்டு வைக்கவில்லை எனலாம்.

## I. இப் பிரதேசத்தில் ஏற்பட்ட பேரழிவுகள்

பண்டைய மட்டக்களப்பு பிரதேசம் என்னும் இடத்தில் திருக்கோவில் பிரதேசத்தை உள்ளடக்கியதாக கொள்ள வேண்டும். இருந்தும் இப்பிர தேசத்தில் ஆதிகாலம் தொட்டு பெரும் இயற்கை அழிவுகளாலும் மற்றும் பெரும் புயல் வெள்ளம் ஆழிப்பேரலை போன்ற அழிவுகளாலும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டும், அழிந்தும் போயுள்ளார்கள் என்பதனை அறிய முடிகிறது. அரசாங்கத்தால் அக்காலத்தில் வெளிப்படுத்திய அறிக்கையின் படி *1845,1878,1907,19013* ஆகிய ஆண்டுகளிலே பெரிய புயலும் வெள்ளமும் ஏற்பட்டுள்ளன. இவை ஒன்றைவிட ஒன்று அகோரமான வடிவில் ஏற்பட்டு இப்பிரதேசத்தையும் பலி கொண்டு இருக்கின்றது என்று தெரிய வருகின்றது. 1913ம் ஆண்டு நேரிட்ட வெள்ளம் புயல் என்பவற்றை கூறும் அரசாங்க அறிக்கைப்படி மட்டக்களப்பு கற்குடா திருக்கோவில் துறைமுகங்களுக்கு வந்த அனேகமான கப்பல்களும் வள்ளங்களும் பெரும் புயல் காரணமாக மூழ்கினவென்றும் அக்கால மட்டக்களப்பு திருக்கோவில் பகுதி தென்னந் தோட்டங்கள் பலவும் பெற்ற பேரழிவு எடுத்துக்கூற முடியாத பேரழிவு என்பதையும் அறிய முடிகிறது. இதைவிடவும் கூடிய பயங்கரமானதாக 1957ம் ஆண்டு வந்த பெரிய வெள்ளம் இதன் அழிவை இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் நேரில் கண்டதாகவும் அனுபவித்தவர்களாகவும் இன்றும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இதுபோக 1976 ஆம் ஆண்டு மார்கழி மாதம் வீசிய சூறாவளியினால் திருக்கோவில் தாம்பிலுவில் பிரதேசம் உட்பட மட்டக்களப்பு பிரதேசம் ஈறாக முற்றாக சேதமுற்றன எனலாம். இவ் அழிவில் மிஞ்சிய தென்னந் தோட்டங்களையும் மக்கள் குடியேற்றங்களை யும் அதன் பிற்பாடு அண்மையில் ஏற்பட்ட கொடூர சுனாமி என்று சொல்லப்படும் ஆழிப் பேரலையானது இப் பிரதேசத்திலும் இலங்கையின் வேறு பாகங்களிலும் 2004ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஆயிரக்கணக்கான மக்களின் உயிர்களை கொள்ளை கொண்டது என்பதை நாம் நேரில் காணமுடிந்தது.

இவ்வாறு கடும் மழை, கடும் வெயில், சுனாமி போன்ற கொடிய அகோர அழிவுகள் இப்பிரதேசத்தை தாக்கினாலும் பெரிய தென்னந்தோட்டங்கள் கண்ணுக்கு எட்டிய தூரத்தில் இருக்கின்றது. மேட்டு நிலங்கள் தாழ் நிலமான பசுமை பொருந்திய நெல் வயல் பரப்பு, காய்கறித்தோட்டம் என்பன நிறைந்து காணப்படுகின்றன. அழகும், திருவும் பூத்துக் குலுங்கும் பருத்தன் பனைநாடாகவே விளங்கி வந்தோருக்கெல்லாம் வாரி வழங்கி, விருந்தோம்பி, வாழ்வளிக்கும் செழு நிலமாக விளங்குகின்றது. இப்பகுதி தம்பிலுவில் திருக்கோவில் பிரதேசம்.

## 22. தம்பிலுவில் திருக்கோவில் பிரதேசத்தில் வாழ்ந்த பெரியார்கள்

திருக்கோவில் பிரதேசம் என்னும் இடத்தில் ஆதிகாலத்தில் தமிழர்களின் தென் கோடியை அணிசெய்து நிற்கும் வளம் செறிந்த பழம்பதிகளில் ஒன்று தம்பிலுவில் ஆகும். இப் பழம்பதி ஊரில் உறவு, சமயம், கலை என்பவற்றால் பிரிக்கமுடியாதுள்ள நாட்டுக்கூத்து. வசந்தன் ஆடல், ஈகைக்குணம் மற்றும் கொம்பு விளையாடல் என்னும் கலைகளுக்கு பெயர் பெற்றவை. பல நாடோடிக்கதைகளின் தந்தையார்கள் இவ்வூரில் தோன்றியுள்ளனர். நல்ல தமிழ் வாழ்ந்த இக் கிராமங்களில். தம்பிலுவில் திருக்கோவில். பிரதேசங்களில் நல்ல சிறந்த தமிழ் புலவர்கள் வாழ்ந்திருக் கின்றார்கள் என்று தெரிகின்றது.

பல தரப்பட்ட நாட்டுக்கூத்து பல தனிப்பாடல்கள் ஆக்கியளித்த கலைஞர் கள், கவிஞர்கள் பிறந்த இடமாக இப் பிரதேசம் மதிக்கப்பட்டு வருகிறது. இத்தகைய கிராமத்தில் பிறந்த ஒருவர் அக்காலத்தில் மதுரைத்தமிழ்ச்சங்க கலாசாலையில் பயின்று தமது கல்வித்திறமையினால். மதிப்புப்பெற்று அக்காலாசாலையிலும் இந்தியாவில் பல இடங்களிலும். சில காலம் தமிழ் ஆசிரியராக

இருந்தாரென்றால் அதில் வியப்படைவதற்கு ஒன்றுமில்லை. அவ்வாறான புலவர் வி.குஞ்சித்தம்பி பண்டிதர் ஆவார். இவர் தம்பிலுவில் சைவசமய பண்பாடும், ஒழுக்கமுடைய தமிழ் குடும்பம் ஒன்றில் பிறந்தார்.

## I. வித்தகனார் வில்லியத்தார் (மூத்தம்பி)

இதே ஊரில் *1891*ம் ஆண்டு சைவமும் தமிழும் வளர்த்த பெருங்குடியில் மூத்தம்பி என்னும் வில்லியத்தார் பிறந்தார். இவர் இளமையில் தமிழ் கவிபாடும் ஆற்றல் பெற்றிருந்தார். மூத்தம்பி ஆங்கிலமும் நன்கு தெரிவதற்குரிய சூழ்நிலை ஒன்றை இயல்பாகவே பெற்றார். திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தை. தென்னந்தோட்டத்துக்கு உகந்த இடமாக தெரிவு செய்த ஆங்கிலப்பெருமகனான கிறிஸ்துரை என்பவரின் தென்னந்தோட்டத்துக்கு மேற்பார்வையாளராக சேர்ந்தார். இவருக்கு தாய் தந்தை இட்ட பெயர் மூத்தம்பி. வெள்ளைகாரத்துரையால் இவருக்கு "உவில்லியம்" என்னும் பெயர் இடப்பட்டது. ஆங்கில பெருமக்களோடு பழகும் நல்ல சந்தர்ப்பத்தை அளித்த காரணத்தால் காலம் தவறாமை பெற்ற முக்கிய கட்டுப்பாடுகளும் இவரிடம் வரலாயிற்று அச்சிறப்புக்கு பின்னர் 15ஆண்டுகள் தொடர்ந்து தம்பிலுவில் கிராம தலைமை அதிகாரியாக இருக்கும் வசதி கிடைத்தது. இவர் நாட்டுக் கூத்து, வசந்தன் கூத்து முதலான கூத்துக்கலைகளை மக்கள் மத்தியில் பரப்புவதற்கான திறமை பெற்ற ஒரு சிறந்த கலைஞராகவும் இருந்தார். இதனால் வில்லியம் பிள்ளை அவர்களை நாடகப் புலவராகவும், கூத்தாடப் பழக்க வல்ல அண்ணாவியாராகவும் அக்காலத்தில் உள்ள மக்கள் இனங்கண்டு அவரிடமிருந்து அக்கலைகளைப் பயின்று கொண்டனர்.

கிராம அதிகாரியாக இருந்த காலத்தில் இவ் ஊரில் ஆடப் பெற்று வந்த நாடகங்கள் பலவற்றுக்கு தனித் தனி விருத்தங்களை ஆக்கிக் கொடுக்கத் தொடங்கியதோடு நாடகப்புலமை வளரத்

தொடங்கலாயிற்று. 1912ம் ஆண்டளவில் எழுதிய கண்டி ராசன் வடமோடி நாடகமே இவர் எழுதிய முதல் முதல் நாட்டுக்கூத்து ஆகும்.

இவர் இத்துடன் நில்லாமல் தொடர்ந்து தென் மோடியில் பவளேந்திரன் நாடகமும். புவனேந்திரன் விலாசம். வட மொடியில் நச்சுபொய்கைச் சருக்கம் என்னும் நாடகங்களை எழுதிப்பாடினார். இந்நாடகத்திலே தம்பியார் நால்வரும் நச்சுப் பொய்கையில் நீரைக் குடித்து மரணமான போது தர்மராசன் அதைக் கண்டு திடுக்குற்று பெரிது மனக்கவலையோடு கண்ணபிரானைக் துதிக்கும் பகுதியும் தர்மனது பக்தியில் கட்டுண்ட மாயன் விரைந்தோடி வருதல் பற்றிய விருத்தங்களை இவர் சாதாரண வேளைகளிலும் பக்திப் பரவசமிட்டு பாடி நிற்பார். என்று இப் பகுதி மக்களால் எடுத்துக் கூறக் கூடியதாக இருந்ததாம் இவர் பாடிய விருத்தம் வருமாறு,

தருமபதி மனதில் நினைவுற்ற காலை
தரணியைத்திருவடி கொண்டளந்த மாயன்
பெருமையுடன் கொண்ட ஓட்ட வடிவம் நீக்கி
பேசறிய களத்துவா பரணம் பூண்டு
திருமேனி தனித்தூதுவள மாலை மின்னத்
இரு செவியில் குண்டலங்கள் தாள மிட அங்கே
கரிய எழில் காயம்பூ வண்ணன் கானில்
கடிதாகவே ஓடி வருகின்றானே!

மட்டக்களப்பு பிரதேசத்தில் முதல் முதலில் நாடகம் எழுதியவரும் இவரே ஆவார். இவர் எழுதிய முதல் நாடகம் "மஞ்சள்பூதம். இழந்த செல்வம் இந்திராபுரி இரகசியம்" என்றும் இரண்டுமே முதல் நாடகமாகும்.

அத்தோடு திருக்கோவில் முருகன் ஊஞ்சல் பாட்டு காவியங்களும் பலவுள்ளன. இவர், ஆங்கிலேயத் தொடர்பாடலால் நாட்குறிப்பு சாத்திரத்திலும் பெயர் போனவராக இருந்தார்.

## II. குஞ்சித்தம்பி பண்டிதர்

குஞ்சித்தம்பி பண்டிதர் கால நோக்கில் மட்டக்களப்பு நகரிலேயுள்ள சென் மைக்கல் கல்லூரியில் எட்டாம் வகுப்பு வரை ஆங்கிலமும் கற்று அதன் பின் தான் கொண்ட தமிழ் தாகத்தினால் தென்நாடு சென்று மூன்றாண்டு காலம், மதுரைத்தமிழ் சங்கத்தின் மாணவனாக இருந்தார். செய்யுள் இயற்றுவதில் வல்லவராக இருந்த இவர்தொடக்கத்திலிருந்தே ஈழநாட்டின் பண்டைக்கலை பிரதிநிதியாக அங்கு மதிக்கப்பட்டு வந்தார். இவர் தம்பிலுவில் கண்ணகியம்மன் கோவில் பற்றிய "பஜனா அமிர்தம்" என்னும் நூல் இயற்றினார். இசைப்புலமை நிறைந்த தமிழ் வளத்தினாலே "பஜனா அமிர்தம்" ஓர் இசைப்பாடல் நூலாக மிளிர்கின்றது.

இறைவணக்கத்துக்குரிய மனம் இளைவிக்கும் இராகவரிகளுக்கு இனிமை அமையப் பெற்ற இந்நூலின் கவித்துறைகளிலும் இடம் பெறுகின்றன.

"சொல்லால் மனத்தால் தொடர்புறுகின்ற சடலமென்றும்
எல்லா விதத்தாலும் ஏத்தி யிறைஞ்சுதல் இப்புவியில்
வல்லாள் மகேஸ்வரி மாதானு பங்கி மரகதங்கி
வில்லாள் திருநூதல் மநாய்கன் பெற்றிடு மாமகளே..."

என்றே செய்யுளில் கண்ணகி தேவியின் மீது கொண்டிருந்த பேரன்பு வெளிப்படுகிறது.

## III. தனவந்தர் அரனம் பொலியானை

தனவந்தர் அரனம் பொலியானை என்பவர் தம்பிலுவில் திருக்கோவில் பிரதேசத்தில் கிராம பொலிஸ் கடமைக்காரராக கடமை செய்தார். இதே ஊரைச்சேர்ந்த சைவமும் தமிழும் வளர்த்த சைவக் குடும்பம் என்று சொல்லப்படும் கலிங்க மன்னன் ஆணைப்படி வகுத்த கண்டங்குடி வகுத்துவாரில் சைவப்

பெண்ணைத் திருமணம் செய்தார். இவர் கட்டப்பத்தான் குடியில் பிறந்தவர். இவர் தமது தாய்மாமனாரின் மகளை திருமணம் செய்த காரணத்தினால் திருமணத்தின் நிமித்தம் இவருக்கு பல நெல்வயற் காணிகளும், தென்னந் தோட்டங்களும் மற்றும் முந்திரியந் தோட்டங்களும் சீதனமாக கிடைக்கப் பெற்றது.

இவர்களுடைய வழித் தோன்றல்கள்தான் திருக்கோவில் முருகன் ஆலயத்தில் வண்ணக்கர் ஆகவும், தனாதிகாரியாகவும் தொடர்ந்து இன்று வரை கடமை செய்கின்றார்கள். இது கலிங்க மன்னனின் ஆணைப்படியே ஆகும். இவருடைய நற்பழக்க வழக்கங்கள் ஏழைகளுக்கு இரங்கி தான தர்மம் செய்தல். வறிய குடும்ப வனிதையர்களுக்கு. வாழ்வளிக்கும் வாலிபர்களுக்கு வளமும் காணியும். குடி இருப்பதற்கு இலவசமாகக் கொடுப்பார். விவசாயம் செய்பவர்க்கு வசதியில்லாதவர்களுக்கு வயலும், நெல்லும் இலவசமாகக் கொடுப்பதும் உண்டு.

அக்காலங்களில் நாட்டில் மழை பஞ்சம் பசி ஏற்பட்டால் காரத்திகை, மார்கழி மாதங்களில் ஏழை மக்கள், விதவைகள் போன்றவருக்கு குடும்பத் தொகைக்கு ஏற்ப உணவுக்காக நெல் மரைக்கால் கணக்கில் கொடுக்கும்படி தனது வயல்காரனிடம் பணிப்பார். வருடாவருடம் தானதர்மம் செய்வதற்கென ஓர் வயல் காணியை ஒதுக்கி வைப்பதும் வழக்கம். இப்பழக்க வழக்கம் கொண்ட "அருணாசலம் விதானையாரை" மக்கள் செல்லமாக அரணம் பொலியானை என அழைப்பர். இரங்கிய குடி வழங்கும் என்பதற்கு அமைவாக இதேவூரில் இவருடைய வகுத்துவார் என்று சொல்லப்படுகின்ற இவருடைய சந்ததியினர் இவ்வூரில் மிகவும் உயர்பதவிகளும் சீரும் சிறப்பும் பெற்று வாழ்வதை அவதானிக்க கூடியதாகவுள்ளது. அரனம் பொலியானை தம்பதிக்கு ஐந்து மக்கட் செல்வங்கள் பிறந்தனர்.

1. செம்பக்குட்டி
2. குஞ்சாச்சி (ஆறுமுகம் காடியரின் தாய்)
3. சோமசுந்தரம் விதானையாரின் மனைவி இளையது அம்மா குஞ்சம்மா
4. பாலாச்சி அன்னம்மா வயிரமுத்து சுப்ரமணியம், சங்கரப்பிள்ளை,கதிரர் ஆகியோரின் தாய்.
5. வேலுப்பிள்ளை தோம்புதோரின் மனைவி கனகம்மாவின் அப்பா

இவ்வாறு நான்கு பெண் மக்களும் ஓர் ஆண் மகனும் பிறந்தார்கள். இவர் இறக்கும்போது சுமார் நூறு வயது வரைவாழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத் தகவல் வழங்கியர்
R. இராதேவராசா
தம்பிலுவில் - 01

## IV. ஆர். டிபிள்யு. வி. அரியநாயகம்

திரு. றொபர்ட் வில்லியம் வேலுப்பிள்ளை அரிநாயகம் அவர்கள் கணபதிப்பிள்ளை வில்லியம் பிள்ளை விதானையார் அவர்களுக்கும் யோசுவாச் செட்டியார் மேரி பொன்னுக்கண்ணு அவர்களுக்கும் மூன்றாவது மகனான 1915 ஆம் ஆண்டு ஆனி மாதம் 10 ஆம் திகதி திருக்கோவிலில் பிறந்தார். இவர் திருக்கோவில் மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும், மட்டக்களப்பு அரசடி மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும் கல்வி கற்ற பின்னர் மலையகத்தின் ஹற்றன் பகுதியில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1940 இல் தம்பிலுவிலைச் சேர்ந்த வைரமுத்து நாகம்மா என்பவரை இல்லறத் துணைவியாகக் கரம் பிடித்தார். அம்பாறை மாவட்டத்தில் தமிழின விகிதாசார அதிகரிப்பின் முக்கியத்துவத்தை ஊக்குவித்து அதனை நடைமுறைப்படுத்தும் நோக்கத்தில் நான்கு பெண்களையும் ஆறு ஆண்களையும் நன்மக்களாகப் பெற்றெடுத்து அவரே ஒரு முன்மாதிரியைக் காட்டினார்.

இவர் இலங்கை அரசியல் சீர்த்திருத்தம் மற்றும் இந்திய விடுதலைப் போராட்டாங்களில் முழு ஈடுபாடு கொண்டவராகவும் கார்ல் மார்க்ஸ் லெனின் ஆகியோர் கொள்ளையில் ஆழ்ந்த ஞான முள்ளவராகவும் அரசியல் இலக்கியச் சித்தாந்தப் பேச்சுக்களில் அனுபவம் மிக்கவராகவும் தமிழ் இலக்கண இலக்கியத்தில் நிறைந்த அறிவுடன் எழுத்தாற்றல், நாவன்மை, கவிதை, நாடகம், நடிப்பு என எல்லாப் பரிமாணங்களிலும் பிரகாசிக்கும் ஒருவராக விளங்கினார். இயல்பாகவே கிராமியக் கலைகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவராக வாழ்ந்தார்.

திரு. அரியநாயகம் அவர்கள் தமிழ்க்கலைக்கு ஆற்றிய பங்களிப்பு அளப்பரியது. இவர் "வீரமுழக்கம்" நாடக ஆசிரியராகவும் இயக்குனராகவும் "மயில் வாகனன்" நாட்டுக்கூத்து ஆசிரியராகவும், தயாரிப்பாளராகவும், நடிகராகவும் விளங்கினார். *1963* இல் கலைவட்ட நாடகப் போட்டிக்காக அவரால் எழுதி இயக்கி அரங்கேற்றப்பட்ட "யார் இந்தக் கர்ணன்" என்ற நாடகம் பிரசித்தமானது. தமிழரசுக்கட்சி நிதிக்காகக் திரு.செ. இராசதுரை அவர்களுடன் அவர் நடித்த "சங்கிலியன்" என்ற நாடகம் புகழ் பெற்ற ஒன்று (மட்டக்களப்பு நகர மத்தியில் அமைந்திருக்கும் காந்தி சிலையானது இந்த நாடகத்திலிருந்து பெறப்பட்ட பணத்தின் ஒரு பகுதியிலிருந்து நிறுவப்பட்டதே) அத்துடன் முரசொலி கலாமன்ற நடிகர்களுக்கு நாடகப் பயிற்சி அளித்தும் மற்றும் இளைஞர்களை ஒன்று கூட்டி எண்ணெய்ச் சிந்து ஊஞ்சற் பாக்கள் பாடியும் கலைச் சேவை செய்துள்ளார். துறைநீலாவணை இலக்கியம் பேரவைப் போட்டியில் பரிசு பெற்ற அவரது ஆக்கங்கள் அவரது இலக்கியத் திறமைக்குச் சான்றாகும். இவரால் எழுதப்பட்ட அனேக கவிதைகளும், கட்டுரைகளும், விமர்சனங்களும் பல தமிழ்ப் பத்திரிகைகளிலும் விரும்பிப் பிரசுரிக்கப்பட்டன. இவர் கரப்பந்தாட்டத்திலும் ஆர்முள்ளவராய் இருந்து ''டென்சிங்'' எனும் கரப்பந்தாட்டக் குழுவைத்தோற்றுவித்தார். இவர் ஒரு கிறிஸ்தவராக இருந்தாலும்

சர்வமதப் பண்பாடுகளையும் மதிக்கத் தெரிந்தவராக இருந்தார். திருக்கோவில் ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தின் தோற்றம் பற்றி அவரது ஆக்கம் பலராலும் பாராட்டப்பட்ட ஒன்று மேலும் இவர் திருக்கோவில் கூட்டுறவு சங்க முகாமையாளராகவும், அக்கரைப்பற்று தெற்கு கிராம சங்கத் தலைவராகவும், தமிழரசுக்கட்சி செயற்குழு உறுப்பினராகவும், மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட பொதுச் செயலாளராகவும். பல பொறுப்புக்களை வகித்ததுடன் திருக்கோவில் மீன்பிடி சங்கத்தைத் தோற்றுவித்து. ஆழ்கடல் மீன்பிடித்தலுக்கும் கைத்தொழில் திணைக்களத்தினூடாகத். தும்புத்தொழிற்சாலை ஒன்றை நிறுவி அதற்கு வழிகாட்டியாகவும் இருந்து அர்ப்பணிப்புடன் பல சேவைகள் புரிந்தார்.

தலைவர் அரிநாயகம் அவர்கள் மகாத்மா காந்தியின் சக்தியாக்கிரக வழியில் ''அறப்போர் முன்னணியை'' ஆரம்பித்து பல போராட்டங்களை நடத்தியவர். 1956இல் சிங்கள அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட தனிச்சிங்கள மொழிச்சட்டத்துக்கெதிரான போராட்டம் 1956 ஆவணியில் நடந்த திருமலை நோக்கிய பாதயாத்திரை (1957 இல் நடந்த சிங்கள ஸ்ரீ எதிர்ப்பு சட்ட மறுப்புப் போராட்டம், 1961 மாசியில் நடந்த தமிழர்கள் மீதான இனத்துவேஷம், தமிழ் அரச ஊழியர்கள் மீதான சிங்களமொழித் திணிப்பு. என்பவற்றுக்கெதிரான கச்சேரி மறியல் போராட்டம் என்பன குறிப்பிடத் தகுந்தவை. பனாகொடை தடுப்பு முகாமில் ஆறு மாதம் தமிழீழ விடுதலைப் போராட்டக் கைதியாக சிறை இருந்தவர். தமிழரசுக் கட்சிகள் ஒன்றிணைய முன்வந்த போது அதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி எனப் பெயர் சூட்டியவரும் அவரே) ஈழமெங்கும் நடந்த தமிழ் மாகாநாடுகளிலும் பிரசாரக் கூட்டங்களிலும் தமிழ்த் தேசிய கீதமாக ஒலிக்கப்பட்ட "ஈழத்தமிழ் நாடு இசை வாழும் பொன்னாடு" எனும் பாடலும் ஐம்பெரும் காப்பியங்களைத் தமிழன்னைக்கு அணிகலன்களாகச் சூட்டிய "இடையில் மணிமேகலையும் சிலம்புக்காலும்" என்ற தமிழ்த்தாய் வணக்கப்பாடலும் அவராலே இயற்றி இசையமைக்கப்

பட்டதென்பது சிறப்புக்குரிய ஒன்று. உரிமை இழந்த தமிழ்மொழி தனக் குரிய இடத்தை பெறுமட்டும் முகச்சவரஞ் செய்வதில்லை எனச்சபதம் செய்து கொள்கை வீரனாக அமரரானவர். தனக்கு வழங்கப்பட்ட மூதவை செனட் உறுப்புரிமைப் பதவியைத் திரு.எம். மாணிக்கம் அவர்களுக்கு தாரை வார்த்து சாதாரண தொண்டனாக வாழ்ந்த தியாகி. தன்னலம் கருதாத சிறந்த தேச பக்தன். 1972 ஐப்பசியில் அமரரானாலும் இன்றும் நம் மனதில் நிறைவுடன் நிலைத்து நிற்பது ஒன்றே அவரது புகழுக்கும் அர்ப்பணிப்புக்கும் சான்றாகும்.

தகவல் வழங்கியவர்
அரி. பிரகஸ்பதி (கனடா)

## V. சங்கீத பூஷனம் சி. கணபதிப்பிள்ளை (திருக்கோவில்)

இப் பெரியார் தான் வாழ்ந்த காலத்தில் தமிழும் சைவமும் செழித்தோங்கும் திருக்கோவில் பிரதேசத்தில் இவர் ஆர்வம் காட்டி வந்த பன்முகப்படத்தப்பட்ட கலைத்தொண்டு அளப்பரியது எனப்படலாம். அவைகளும் இயல், இசை, நாடகம், நடனம், நாட்டுக்கூத்து (ன), றாமா என்பவற்றை சிறப்பாகக் குறிப்பிடலாம். இவர் 1919ம் ஆண்டு பிறந்தார். ஆரம்பக்கல்வி கற்பதற்காக திருக்கோவில் மெதடிஸ்தமிசன் பாடசாலையில் சேர்ந்து கல்வி கற்றார்.

தனது 14 வயதளவில் கலைத்துறையில் சேர்ந்து ஈடுபாடு கொண்டு கால் பதித்தார். அக்காலம் தொட்டு இறுதிக்காலம் வரையும் தமது வாழ்வில் பெரும் பகுதியை கலைத்துறைக்கே அர்ப்பணித்து வாழ்ந்து மறைந்த அற்புதக் கலைஞர் என்றே இவரைக் கூறலாம்.

இவர் பிரம்மச்சரியம் மேற்கொண்டிருந்ததோடு சைவ சமய வளர்ச்சிக்கு அருந்தொண்டுகள் ஆற்றினார். 1939 - 1945ம் ஆண்டுகளில் இந்தியா சென்று சிதம்பரத்திலுள்ள அண்ணாமலை பல்கழைக்கழகத்தில் இசைக் கல்லூரியில் கல்வி பயின்று

சங்கீதபூஷண பட்டம் பெற்றார். பாடல்கள், வயலின், வீணை ஆகியவற்றில் தேர்ச்சி பெற்று விளங்கினார். அதன் பின் இலங்கை வந்து *1959 - 1977* வரை தம்பிலுவில் மகாவித்தியாலயத் தில் முதல் சங்கீத ஆசிரியராகக் கடமை ஆற்றினார்.

இவரிடம் சங்கீத ஞானம் கற்ற மாணவர்களில் பெரும்பாலானோர் இசைத் துறையில் தேசிய மட்டத்தில் புகழ் பெற்று விளங்குகின்றனர். அன்னார் தனது ஆசிரியர் தொழிலிலிருந்து *1977*ம் ஆண்டு ஓய்வு பெற்றார். *1991* ஆண்டில் வானொலிக் கலைஞர் கோவிலூர் செல்வராஜன், பாடகர் இரா. தேவராஜா இருவரும் இணைந்து இவர் இயற்றிய பக்திப்பாடல்கள் அடங்கிய ஒலிப் பேழையொன்றை முருகன் பக்திப்பாடல்கள் என்ற பெயரில் வெளியிட்டனர்.

திரு. சி. கணபதிப்பிள்ளை சங்கீத பூஷணம் அவர்கள் இரு நூறுக்கு மேற்பட்ட இசைப்பாடல்கள் எழுதியுள்ளார். இவர் எழுதிய பாடல்களின் பிரதிகள் இன்றும் காணக்கிடைக்கின்றன. தனது வாழ்நாள் முழுவதும் இசையையும், கலையையும் போற்றி பாதுகாத்து வந்த பெரியார் சங்கீத பூஷண ஆசிரியர் அவர்கள் *1992*ம் ஆண்டு மார்கழி மாதம் *18*ம் திகதி இவ்வுலகை விட்டு மறைந்த போதும், இவரால் தோற்றுவிக்கப்பட்டு நிலைபெற்ற இசைப்பாரம்பரியம் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் என்றும் நிலைத்திருக்கும் என்பதில் சிறிதேனும் ஐயம் இல்லை.

## VI. சமூகஜோதி நடராசா தருமலிங்கம்

இப் பெரியார் *1933*ம் ஆண்டு ஆடி மாதம் *23*ம் திகதி பிறந்தார். திருகோணமலை இந்துக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தார். அங்கே ஆங்கிலக் கல்வியை ஆரம்பக் கல்வியாகக் கற்றார். பின்பு உயர் கல்விக்காக மட்.:சிவானந்தக் கல்லூரியில் சேர்ந்து கல்வி கற்றார். அதே கல்லூரியில் ஆங்கில ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

பின் அக்கரைப்பற்று இராமகிருஷ்ண மிஷன் மகாவித்தி யாலயத்தில் ஆங்கில ஆசிரியராகக் கடமை ஆற்றி பற் பல போட்டிப் பரீட்சைகளிலும் கலந்து கொண்டு வெற்றியும் பெற்றார். அதன் பின் சில காலம் கூட்டுறவுப் பரிசோதகராகக் கடமை ஆற்றினார். கூட்டுறவுத்துறையில் இருந்து ஓய்வு பெற்றபின் தனது பிறந்த ஊரான தம்பிலுவில் கிராமாட்சி மன்றத்தேர்தலில் வெற்றி பெற்று கிராமாட்சி மன்றத் தலைவராகி அவ்வூருக்கு அளப்பரிய சேவைகள் செய்தார். அத்தோடு ஓர் ஆங்கில ஊடகவியலா ளராகவும் இருந்தார்.

அவர் தனது சமூக சேவையாக இப் பிரதேசத்திற்கு பெரும்ணியை ஆற்றியுள்ளார். பாற்பண்ணை, கமநலச் சேவைநிலையம், நெசவுநிலையம், பொது நூலகம், கிராமாட்சி மன்றக்கட்டிடத்தில் நடமாடும் வைத்தியசாலை மத்திய சந்தை ஆகியவை இவரது காலகட்டத்தில் உருவாக்கப்பட்டவை.
மேலும் பொதுமக்களின் ஒத்தாசையுடன் திருப்பணிச்சபைத் தலைவராக இருந்த காலத்தில். ஸ்ரீ உகந்தை முருகன் மடாலயமாக இருந்ததை மாற்றியமைத்து ஆகம விதிப்படி குடமுழக்குச் செய்து வைத்த பெருமை இவரையே சாரும் அன்னார். *2011.09.13* அன்று இறைபதம் அடைந்தார்.

## VII. ஓய்வு பெற்ற அதிபர் பாலபண்டிதர் திரு.ச.வன்னியசிங்கம்

ஆழிக்கரையிலமைந்துள்ள தொல் பதியாம் சீர் பெருகு தம்பிலுவில் இவ்வூரில் சங்கமன் வன்னியசிங்கம் *1931.10.29*ல் பிறந்தார் இவர் தனது கல்வியை ஊரிலுள்ள பாடசாலையிலேயே கற்றார். பின் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைப் பரீட்சையும் எழுதினார். அதில் கிழக்கு மாகாணத்திலிருந்து பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவாகிய இருவரில் திரு. வன்னியசிங்கமும் ஒருவராவார்.

தனது 20வது வயதில் பயிற்சி பெற்று வெளியேறி பேருவளையிலுள்ள பாடசாலையில் கடமை ஏற்று தொழில் புரிந்தார். பின் பற்பல பாடசாலைக் கும் இடமாற்றமாகி கடைசியாக தனது சொந்த ஊருக்கே வந்தார்.

தம்பிலுவில் மத்திய மகாவித்தியாலயத்தில் கடமை ஏற்றார். பின் அங்கு க.பொ.த உயர்தர வகுப்பை ஆரம்பித்து மூன்று மாணவர்களை முதல் தடவையாக பல்கலைக்கழக அனுமதியும் பெற சேவை செய்தார். "செய்யும் தொழிலே தெய்வம்" என்னும் திடம் கொண்டவர். கணிதம், தமிழ், சமயம், இலக்கியம் இவைகளை மிகத் திறம்பட நயத்துடனும், எளிதில் விளங்கக்கூடிய வகையிலும் கற்பித்தார். இவ்வாசிரியர் பொதுச்சேவைகளிலும் ஈடுபாடுடையவராக திகழ்ந்தார். கூட்டுறவு இயக்கத்தில் அக்கறை கொண்டு தம்பிலுவில் ஸ்ரீ கண்ணகை ஐக்கிய நாணய சங்கத்தின் செயலாளராகவும், தம்பிலுவில் ஊர் கூட்டச் செயலாளராகவும் கடமையாற்றி இப் பிரதேசத்தின் கூட்டுறவு வளர்ச்சிக்காக அரும் பணியாற்றினார். 1956ல் தம்பிலுவில் திருக்கோவில் இந்துசமய அபிவிருத்திச்சபை இணைச்செயலாளராக தெரிவு செய்யப்பட்டதோடு அப்பணியினைச் சிறப்பாக செய்தார்.

இவர் ஆலய உற்சவ காலங்களில் (விரதங்கள்) கந்தப்புராணம், திரு விளையாடப்புராணம், திருவாதவூரடிகள் புராணம் போன்றவைகளுக்கு பொருள் கூறி நயம்பட உரைப்பதில் (புராண படனம் செய்வதில்) மிகவும் வல்லமை பெற்ற பால பண்டிதராவார்.

இவர் பல மாணவர்களை வெளிவாரியாக கற்பித்து அவர்களுக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்து கரை சேர வைத்த கல்விமானாவார். நாட்டுக்கூத்தில் வடமோடி தென் மோடி நாடக இயக்குனராகவும் திகழ்ந்தார். அத்துடன் இவர் தம்பிலுவில் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் முருகன் வள்ளி திருக்கல்யாணம் பற்றிய திருச்சதகத்தையும் பாடி அவை பற்றிய புத்தகத்தையும் வெளியிட்டவராவார்.

இவர் ஊரில் சிறந்த கல்விமானாகவும், நல்லாசானாகவும் திகழ்ந்தது மட்டுமல்லாமல் தனது மனைவி மக்களை நல் வழி ஒழுகச் செய்து பேரன் பேத்திகளையும் கண்டு தனது 61ஆவது வயதில் இறைபதம் எய்தினார். இவர் இயற்றிய சித்திரவேலாயுத ஊஞ்சற் பாட்டில் ஒரு பகுதி,

*தம்பிலுவில் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலைய பரிபால மூர்த்தி முருகன் ஆலயம் மீது பாடிய ஊஞ்சல்பாட்டு*

அத்திமா முகவனையே நினைவிற் கொண்டு
அடல் படைத்த அவுணரிடைப் புகுத்துமேலாம்
முத்திதனைத் தடுத்து நிற்கும் இருள் போய் மாய
முரண் கடிந்து சிறை மீட்ட முதல் வனையோ
நித்திலங்கள் செறிந்திலங்கும் வழங்கள் சூழ்ந்த
நீழ் பதியாம் தம்பிலுவில் நிலைத்து நின்று
பத்தி தரும் ஆன்மாக்கள் வினையைப் போக்கும்
பரணி வேலாயுதரே ஆடிருஞ்சல்

ஆக்கியோன்
அமரர் திரு.ச. வன்னியசிங்கம்
அதிபர் அவர்கள்

6. திருநாவுக்கரசு நாயனர் குரகுலத்தின் ஸ்தாபகர் அமரர் தம்பையா அடிகளார் சுமார் 17 ஆண்டுகள் தன்னை அர்ப்பணித்து செய்த சேவைகள் என்றும் காலத்தால் மறையாதவைகள். அவர் 05.08.1995 அன்று இறைவனடி சேர்ந்தார்.

உலகில் மனிதனாய்ப் பிறப்பவர்கள் அனைவரும் மக்கள் இதயங்களின் நிரந்தரமாய் வாழ்வதில்லை. அதில் ஒரு சிலர் மாத்திரமே மனித இதயங்களில் நிரந்தரமாக வாழும் பாக்கியத்தை அடைகின்றனர். இந்த வகையிலே அமரர் இறைபணிச் செம்மல் தம்பையா அடிகளார் சான்றோர்களில் ஒருவராவர். தன்னலம்

அற்ற சேவை தியாகம் பிறருக்கு இரங்குதல், சமூக சமயப்பணிகள் என்பவற்றில் தனது வாழ்வினை அர்ப்பணித்து பலரின் இதயங்களில் நிரந்தர இடத்தைப் பிடித்துள்ளார். வட இலங்கையில். யாழ்ப்பாணத்திலே சுண்ணாகம் ஜயனார் கோயிலைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர். திருக்கோவில் பிரதேசம் 1976 இல் தம்பிலுவில் மத்திய கல்லூரியில் ஆசிரியராக கடைமைபுரிவதற்கு வந்து சேர்ந்தார். 1978 அம் ஆண்டிலிருந்து மாணவர்களின் நன்மதிப்பை பெற்ற ஓர் சிறந்த ஆங்கில ஆசிரியராவார். இந்த வேளையிலே அப்பிரதேச மக்களின் நன்மதிப்பை பெற்றதோடு. தமது உள்ளத்தில் இருந்த இந்து சமய சமூகப் பணிகளை மக்கள் மத்தியில் வெளிப்படுத்தி அனாதைச் சிறுவர்களை அரவணைத்து. ஒரு குருகுலத்தை உருவாக்கி ஆதரவு அற்ற சிறுவர்களை பராமரிக்கத் தொடங்கினார். இதற்கு அவருடைய மாணாக்கர் ஒரு சிலரும் பக்கபலமாக இருந்தனர். இதன் பெறுபேறாக உருவாகியதே அம்பாரை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலமாகும். 1995ஆம் ஆண்டு வரை சுமார் 17 ஆண்டுகள் தம்மை அர்ப்பணித்த பெரியார் 1995.08.05 இறைபதம் சேர்ந்தார்.

தகவல்

திரு.நா.நவநாயக மூர்த்தி

வீரகேசரி பத்திரிகை பிரசுரம்

# 23. திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் காணப்பட்ட மூலிகை வகைகள் (ஆயுர்வேத வைத்தியம்)

ஈழத்தமிழ் நாட்டின் கிழக்கிலங்கையில் அக்கரைப்பற்றுத் தென்பகுதி திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் ஆதிகாலம் தொட்டு இங்கு வாழ்ந்த முன்னோர்களால் கண்டறியப்பட்ட சித்த ஆயுர்வேத வைத்தியத்திற்கு உதவக்கூடிய மூலிகைவகைகள் அக்காலத்தில் மிகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதனை உணரக்கூடியனவாய் இருக்கின்றன. ஏனெனில், இப்பிரதேசத்தில் வைத்திய திலகம் எனப்பட்டங்கள் பெற்று ஒருசில ஆயுர்வேத வைத்தியர்கள் இப்பகுதியில் காணப்பட்டனர். இப்பகுதியில் காணப்படும் மூலிகைகளைக் கொண்டு தங்களது பரிகார வைத்தியங்களை திறம்பட செய்திருக்கின்றார். என்பதனை அறிய முடிகின்றது.

இப்பகுதியில் காணப்பட்ட மூலிகை வகைகள் பின்வருமாறு காணக்கிடைக் கப் பெற்றன. அவை வேர்வகை, இலைவகை, கொடி, செடி, பூ, மரம், விதை, பட்டை வகை, கிழங்கு வகை இவை யாவும் மேட்டுநிலப் பகுதியில் காணப்படும் மூலிகை வகைகளாகும் அவை போக காட்டுப் பிரதேசங்களில் சீந்தில், செங்கத்தாரி, காந்தோட்டி, நிலவேம்பு என்பன வயல் பிரதேசங்களிலும் (உதாரணம்) நாராக்கிராந்தி, பிரமி, சீதேவியார், செங்கழுநீர், சித்தமட்டி, பேரமட்டி, அவுரி போன்றவையும் ஆற்றுப்பிரதேச ஓரங்களில் காணப்படும் பூங்கை, கோமரசு, களஞ்சி, காத்தாவாரி, கருக்குவாச்சி, மாவிலங்கு போன்றவையும் மற்றும் கடற் பிரதேசங்களில் (உதாரணம்) வெள்ளறுகு, தாழவிழுது, தாழம்பூ, இசங்கு போன்றவையும் மற்றும் மேட்டுநிலப் பகுதிகளில் (உதாரணம்) விஸ்னுகிராந்தி, இருவேலி, சிறியாள் நங்கை போன்றவையும் மற்றும் தாழ்நில பிரதேசத்தில் (உதாரணம்) கையாந்தகரை, வௌவாலுட்டி, தயிர்விளா, ஆடுதின்னாப் பாலை

போன்றவையும் இன்னும் எத்தனையோ அரிய வகையான மூலிகை வகைகள் காணப்பட்டு அழிந்தும் போயுள்ளன.

இப்பிரதேசங்களில் இறைவனால் கொடுக்கப்பட்ட இவ்வரிய செல்வங்கள் மக்கள் குடியேற்றம் நாடளாவிய ரீதியில் அதிகரித்தமையால் காடுகள் அழிக்கப்பட்டு காணிகள் ஆக்கப்பட்டமையாலும் இவை எல்லாம் அழிந்தொழிந்து வருகின்றன. அத்தோடு ஆங்கில வைத்தியத் துறையை பின்பற்றுவதும் ஓர் காரணமாய் இருக்கலாம். இருந்தாலும், இன்னும் ஒருசில மக்களால் இந்த சித்த ஆயுர்வேத மருந்து வகைகளை பின்பற்றுவதை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

## 24. இப்பிரதேசத்தில் வாழ்ந்த ஆயுர்வேத வைத்தியர்கள்

1. கதிரமாலை சரவணமுத்து வைத்தியர் (தம்பிலுவில்)
2. கோணாமலை வைத்தியர் (தம்பிலுவில்)
3. நாச்சி கௌண்டர் வைத்தியர் (தம்பிலுவில்)
4. வைத்திய திலகம் முருகப்பன் தாமோதரம் வைத்தியர் (தம்பிலுவில்)
5. நாகன் பரிகாரி (தம்பிலுவில்)
6. கந்தையா பரிகாரி (திருக்கோவில்)
7. இளையதம்பி பரிகாரி (திருக்கோவில்)

இப்பிரதேசத்தில் வாழ்ந்த ஒருசில வைத்தியர்களின் வாழ்க்கை வரலாறு கள் கிடைக்கப்பெற்றவைகளைக் கொண்டு தகவல்கள் பின்வருமாறு.

## I. வைத்திய திலகம் "முருகப்பன் தாமோதரம்" வைத்தியர் அவர்களின் வாழ்க்கை வரலாறும் வைத்திய சேவையும்

"உத்தம குணத்தை உள்ளோன்
உயர் பெரும் கீர்த்தி உள்ளோன்
சத்திய வார்த்தை உள்ளோன்
தர்ம சிந்தனை உள்ளோன்
குத்திர வார்த்தை பேசா குணன் பரிகாரியாமே"...

ஈழத்தமிழ் நாட்டின் கிழக்கிலங்கையில் அக்கரைப்பற்றின் தென் பகுதியில் உள்ள பழம் பெரும் தம்பிலுவில் கிராமத்தில் தருமை வைத்தியரின் பேரனும் முருகப்பன் பொன்னம்மா தம்பதிகளின் மூத்த புதல்வராக 15.08.1912ம் ஆண்டில் தரணியிலே பிறந்தார் முருகப்பன் தாமோதரம் வைத்தியர்.

இவர் தனது சிறுவயதிலே ஆரம்பக்கல்வியை கற்று, தனது 7வது வயதிருந்தே தனது பாட்டனாரான தருமை வைத்தியர் இவருக்கு ஒரு தாய் எவ்வாறு தன் குழந்தையை மடிமீது அரவணைத்து அறுசுவை உணவு ஊட்டுவாளோ அது போல தன் பேரனுக்கு வைத்திய அறிவையும் மூலிகை வகைகளையும் அவற்றின் குணங்கள் பற்றியும் இளவயதி லிருந்தே அவருக்கு கற்றுக்கொடுத்தார். இதன் மூலம் வைத்திய வாகடத்தில் உள்ள பாடல்களைக்கற்று வைத்திய ஆரம்ப அறிவைப் பெற்றார். தருமை வைத்தியரின் மறைவின் பின்னர் அவரது மகனான சீனித்தம்பி வைத்தியர் (தாய்மாமன்) மூலம் மீண்டும் தொடர்ந்து வைத்திய கல்வியை திறன்படக்கற்றார்.

சித்த ஆயுர்வேதவைத்தியப் பரம்பரையில் பிறந்த இவர் தாய் வழியில் ஐந்தாவது தலைமுறையைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. பரம்பரை பரம்பரையாக கேள்வி நடைமுறையில்

வந்த பாடல்களையும் வைத்திய ஏடுகளையும் கற்றதுடன் இவர் 1954ம் ஆண்டில் நடைபெற்ற சித்த ஆயுர்வேத மருத்துவ பரீட்சையில் சித்தியடைந்து பதிவு செய்ப்பட்டு (பதிவு இலக்கம் 713) சிறந்த ஆயுர்வேத வைத்தியராக திகழ்ந்தார்.

அதன் பின்னர் பல வைத்திய ஏடுகளை தன்னகத்தே கொண்டு அவற்றை முறையாக வாசித்து விளங்கிக் கொள்ளும் ஆற்றலும், அறிவும் இவரிட மிருந்தமையினால் நோய்களை இனங்கண்டு நாடி பிடித்துப் பார்த்து நோயியல் பற்றியறிந்து குணப்படுத்தம் ஆற்றல் பெற்றவராகவும் விளங்கினார். அத்துடன் சித்த ஆயுர்வேத வைத்திய ஏட்டுச் சுவடியை நூலுருவாக்கி: அதிலுள்ள செய்யுள்களுக்கு கருத்துக்களை தெளிவான உரைகளில் எழுதிய பெருமைக்குரியவர் முருகப்பன் தாமோதரம் வைத்தியர் என்பது குறிப்பிடத்தக்கது.

அது மட்டுமன்றி நோய்குணம், மருத்துவக்குணம், மூலிகைக்குணம் இயல்புகளை பாடல்கள் மூலம் பாடுவதில் அப்போது அவருக்கு நிகரான ஓர் விசேட அம்சமாகும். அத்துடன் இவர் வைத்திய சேவையை திறன்படச் செய்வதற்கு நாடி சாஸ்திரம், மூலிகை அகராதி, வைத்திய சாரசங்கிரகம், பதார்த்த குணம், வைத்திய சிந்தாமணி, புலிப்பாணி, வைத்திய கிரிச்சாதம், அங்காதிபாதம் போன்ற வைத்திய நூல்களும் ஊன்று கோலாக இவருக்கு அமைந்தன.

இவர் கடந்த பல வருடங்களாக கிழக்கு மாகாணத்தில் தான் பிறந்தஊரான தம்பிலுவில் மட்டுமன்றி வெளிமாவட்டங்களிலும் வைத்திய சேவையை ஆற்றியுள்ளார். இவரது சேவையானது சர்வாங்க ரோகம் (வாதம், பித்தம், சிலேத்துமம்) பைத்தியரோகம் (மனநோயளர்) போன்றவற்றிக்கும் வைத்திய சேவை புரிந்து ஆயிரக்கணக்கான நோயாளிகளைக் குணப்படுத்தி மக்கள் மத்தியில் சிறந்த வைத்தியர் என்று பெயர் பெற்றுள்ளார்.

அத்துடன் இந்த வைத்திய சேவையை திறன்படச் செய்வதற்கு மூல காரணம் எமது தம்பிலுவில் கிராமமே. ஏனெனில் இப்பகுதியில் காணப்படும் மூலிகைகளே ஆகும். அவை வேர், இலை, கொடி, செடி, பூ, பழம், விதை, பட்டவகை, கிழங்குவகை என்பன காடுகளிலும் வயல்வெளிகளிலும் ஆற்றோரங்களிலும் கடல் பிரதேசங்களிலும் மேட்டு நில தாழ்நில பிரதேசத்திலும் காணப்படும் மூலிகைகளாகும். அவையாவன காட்டு பிரதேசத்திலும் காணப்படும் (உ-ம்) சிந்தில், செங்கத்தாரி, கத்தோட்டி, நிலவேம்பு போன்றவையும் வயல் பிரதேசத்தில் (உ-ம்) நாறா கிரந்தி, பிரமி, சீதவியார் செங்கழுநீர், சித்தமட்டி பேரமட்டி அவுளி போன்றவையும் ஆற்று பிரதேசத்தில் காணப்படும் (உ-ம்) புங்கை, கோமரசு, களச்சி, சாத்தாவாரி, கருக்குவாச்சி, மாவிலங்கு போன்றவையும் கடல் பிரதேசத்தில் (உ-ம்) வெள்ளறுகு, தாழவிழுது, தாழம்பூ, இசங்கு போன்றவையும் மேட்டுநில பிரதேசத்தில் (உ-ம்) விஸ்ணு சிராந்தி, இருவேலி, சிறியாள் நங்கை, ஆடுதின்னாபாலை போன்றவையும் தாழ்நில பிரதேசத்தில் (உ-ம்) பிரமி, கையான்தகரை, வெள்ளவால்லூட்டி, தயிர் விளா போன்றவையும் இன்னும் பல அரிய வகை மூலிகைகள் கிடைப்பதே இறைவனால் இப் பிரதேசத்திற்கு கிடைக்கப்பட்ட பெரும் பாக்கிமென்றே கூறமுடியும். இந்த மூலிகைவகைகளைப் போல் வைத்தியம் செய்வதற்கு சரக்கு வகைகளும் முக்கியமாக பயன்படுத்தப்படுகிறது. அவைகள் (உ-ம்) சுக்கு, மிளகு, திப்பிலி, சாதிக்காய், கராம்பு, வசுவாசி, ஏலம், கோட்டம், இலவங்கம், அமுக்கிறா, நிலவாகை, சாதிலிங்கம், மனோசிலை, கோரோசனை, கஸ்தூரி, குங்குமப்பூ, சவ்வாது இவைகள் எல்லாம் சுத்திசெய்து தயாரிக்கப்பட்டு மூலிகை சரக்கு வகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்து வகைகள் சூரணம் குளிசை வகை பஸ்பம் செந்தூரம் மெழுகு வகை தைலம் எண்ணெய் வகை குடிநீர் வகைகளை இறைவணக்கத்துடன் தயாரித்து இந்த மருந்து வகைகளை நோயாளிகளுக்கு கொடுத்து நோய்களை குணமாக்கி தனது வைத்திய சேவையை பொதுமக்களுக்கு

செய்துள்ளார்.

இவர் மிக விசேடமாக பைத்தியரோகத்திற்கு (மனநோய்) சிகிச்சை செய்து குணமாக்கி உள்ளார். மனநோயால் பாதிக்கப்படவர்களை மிக சாமத்தியமாக தனது அறிவால் பாதுகாப்பாகவும் தனது வைத்தியத்தால் குணமடையச் செய்துள்ளார். தனது கிராமத்தில் மட்டுமல்லாது வெளிமாவட்டங்களிலும் இருந்துவரும் பலஇன மக்கள் அதாவது சிங்களவர், முஸ்லீம்கள், பறங்கியர்கள் போன்றவர்களுக்கும் இவர் தனதுவைத்திய சேவையைச் செய்துள்ளார். என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும் இப்படி வைத்திய சேவை செய்வதன் மூலம் "தாமோதரம் வைத்தியரிடம்" சென்றால் நோயைக் குணப்படுத்தலாம் என்று கூறும் அளவிற்கு தனக்கென ஒரு இடத்தைப் பிடித்து தன்னுடைய பெயரையும் புகழையும் நிலை நிறுத்திக் கொண்டார்.

அத்தோடு இவர் வைத்திய சேவைசெய்யும் காலத்தில். எமது பகுதியில் அமைந்துள்ள கண்ணகி அம்மன் ஆலயத்தில் நடைபெறும் வடசேரி தென்சேரி எனும். இரு பிரிவினருக்கு கொம்பு விளையாட்டு நடைபெறும் காலத்தில். இவர் வடசேரி பகுதிக்கு ரதத்திற்கு (தேர்) சிற்ப வேலைகளால் முடி செய்து கொடுப்பதில் முடிவகைகளையும் அதற்கு தேவையான பொருட்களையும் செய்து கொடுப்பதில் மிகவும் கைதேர்ந்தவராக விளங்கினார். இப்படி இவரது சேவைகள் பல எமது கிராமத்திற்கு கிடைக்கப்பட்டது மிகப்பெரும் பாக்கியமாகும்.

இவ்வாறு இவர் வைத்திய சேவையை மக்களுக்கு செய்து தனது 73ம் வயதில் 20.11.1985ம் ஆண்டில் "கந்தசஸ்டி கலியாணப் படிப்பு" அன்று இறைபதம் எய்தினார் இவரது மறைவு தன் பிள்ளைகளுக்கும் குடும்பத்தாருக்கும் ஊர் மக்களுக்கும் பேரிழப்பாக இருந்தது.

தகவல் வழங்கியவர்
அவரது மகள் சிவிமணி வைத்தியர்

## II. கதிரமலை சரவணமுத்து வைத்தியர்

*1901*ம் ஆண்டு கதிரமலை வைத்தியருக்கு சரவணமுத்து வைத்தியர் மகனான பிறந்தார். இவருடைய தந்தையார் ஒரு வைத்திய பரம்பரையைச்சேர்ந்தவர். இவர் சிறந்தவோர் கல்விமானாகவும் இருந்தார். இவர் அக்காலத்தில் ஓலைச்சுவடிகளாக இருந்த முக்கியமான வைத்திய ஏடுகளைக் கற்று சகல குறிப்புக்களையும் ஏட்டுச்சுவடுகளில் ஏழுதினார். தந்தையார் எழுதி வைத்த அச்சுவடிகளான வைத்திய ஏடுகளை தன்னகத்தே கொண்டு அவற்றை முறையாக வாசித்து விளங்கிக் கொள்ளும் ஆற்றலும் அறிவும் இவரிடம் இருந்தமையினால் நோய்களை இனங்கண்டு குணப்படுத்தம் ஆற்றல் மிக்கவராக விளங்கினார்.

இவர் இப்பிரதேசத்திலே விஷ வைத்தியத்திலும், சோதிடம் பார்த்தல், கெடுதி சொல்லுதல், வீட்டுக்கு நிலையம் எடுத்தல் போன்ற துறைகளிலும் அத்தோடு. சரீரம் எனும் நாட்டுக்கூத்தில் அண்ணாவியார் ஆகவும் சிறந்த பாடகராகவும் இருந்தார். அதுமட்டுமல்லாது கிராமிய சடங்குமுறை களுக்கான அம்மாளுக்குச் செய்தல், வைரவர் பந்தல் அமைத்து சடங்குகளில் பேய் விரட்டி கட்டுசொல்லுதல் போன்ற மந்திர உச்சாடனங் களில் கைதேந்தவர் ஆவார். இவரது கைதேர்ந்த வைத்தியங்களில் முக்கியமானவை பாம்புக்கடி விஷ வைத்தியமாகும். தூதன் குறியறிந்து விஷத்தின் தன்மை கூற வல்லவர்.

"தூதன் சொன்ன சொல்லதனைத்
துணிந்து மூன்று கூறாக்கி
ஆயுமளவொர் பங்காகில்
ஆமோர் விடமும் அங்கில்லை
போயங் கெழுத்தில் இரண்டாகில்
பொன்றுத வில்லை விடமுண்டு
ஆயுமோர மெழுத்தானால்

மாண்டா னென்று மதித்திடுமே"

என்பது முதலான அவ்வாறு தூதன் வரவு சொல் என்பவற்றைக் கொண்டு பாம்புக் கடி பற்றி தீர்மானிக்க உதவுவனவாய் வைத்திய வாடகங்களிலுள்ள. சரவணமுத்து வைத்தியர் எண்பவரின் விஷக்கடி வைத்தியத்தின் சிறப்பினை இப் பாடல் மூலம் அறிய காணலாம்.

இவருடைய திறமைக்குச் சான்றாக் தம்பிலுவில் விஷ்ணு ஆலயத்திற்கு அருகாமையில் நடப்பட்டுள்ள விஷக்கல் சான்று பெறுகிறது. தனது கிராமத்தில் மட்டுமல்லாது அயல் கிராமங்களிலும் இவர் வைத்தியத்தால் போற்றப்பட்டு வந்தார். இவரிடம் காணப்படும் பல்வகைப்பட்ட திறமையினால் மக்களைத் தன் வசம் கவரும் மனிதனாக திகழ்ந்தார் என்பது பலரின் கருத்தாகும்.

தகவல் - குடும்பத்தாரின்

## III. கோணாமலை வைத்தியர்

இவர் *1913.08.12* இல் தம்பிலுவில் பிரதேசத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சின்னத்தம்பி மகனான கோணமலை சித்த ஆயுர்வேத வைத்தியர் ஆவார். நோய்களை இனங்கண்டு நாடி பிடித்தும் பார்த்து நோய் பற்றி அறிந்து குணப்படுத்தும் ஆற்றல் மிக்கவராக விளங்கினார். அது மட்டுமன்றி நோய்குணம் மூலிகை குணவியல்புகைள பாடல் மூலம் பாடுவதில் வல்லவரும் ஆவார். அத்தோடு இவர் வாதநோய், பித்தம், சிலோற்பனம், பேய் விரட்டுதல், திருநீறுபோடுதல், தண்ணீர் ஓதல், வயிற்றோட்டம் போன்ற வைத்தியத் துறையில் கைதேர்ந்த வைத்தியராக விளங்கினார். குறிபாத்து வைத்தியம் செய்வதில் இவர் ஓர் திறமை மிக்கவராகவும் திகழ்ந்தார்.

தகவல் - அவரது மகள்

## 25. இப் பிரதேச நில அமைப்பு விஸ்திரணம்

நில அமைப்பு: இப் பகுதி நில அமைப்புக்கள் பெரும்பாலும் சமவுயரக் கோட்டு வலயங்கள் அமைந்து காணப்பட்டுள்ளன. இவ் எல்லைக்குள் சாகாமம், மொட்டையாமலை, தாலிபோட்ட ஆறு, ரூவஸ்குளம், மன்னங் குளம், குச்சிப்பணிக்கந்தலாவை சங்கமன்கண்டி, தாண்டியடி, பாலக்கரச்சி, வில்காமம், இராமன் குளம், ஊரக்கவெளி, தாமரைக்குளம் என்னும் குளங்களும், அவற்றின் கிழ் வயல்களும் பயன்படுகின்றவாறு அமைந்துள்ளன. இதில் அனேகமானவைகள் தூர்து போனா நிலையில் காணப்படுகின்றன. இதில் கரையோரப் பிரதேசமான தில்லங்குளித் தோட்டம், கண்டக்குளி. காடியர் தோட்டம், முப்பது ஏக்கர் தோட்டம், சிங்கபூரார் தோட்டம், (பேரம்பல வாத்தியார்) வன்னியனார் தோட்டம், தங்கராசா ஓவிசர் தோட்டம், கண்டாக்கர் தோட்டம், மார்க்கண்டு முதலியார் தோட்டம், மங்கமாரியம்மன் தோட்டம். சேர்ந்த இப்பகுதிகள் பெரும்பாலும் தென்னந்தோட்டமாக ஒரே தென்னஞ்சோலையாக காணப்பட்டது. அதில் தம்பிலுவில் வடக்கே உப்புக்கரச்சி கண்டக்குழி எனும் பகுதியில் களிநிலமாகவும் இருந்தது. அக்கால மக்கள் தங்களது வீடுகளை அமைப்பதற்கு தலைச்சுமையாகவும் வண்டில் மூலமாகவும் களிமண்களை எடுத்துச் சென்றனர்.

இவ் விடத்திற்குக் கிழக்கே இப் பிரதேச மக்களின் மயான நிலமாகவும் இருந்தது. (தற்போதைய மயானமும்) இவ் மயான நிலம் மிகவும் அடர்ந்த காட்டுப்பகுதியாகவும் இங்கு காஞ்சிரமரம், ஆலமரங்கள் போன்றன காணப்பட்டன. இங்குள்ள சித்த வைத்தியர்களின் வைத்தியத்திற்கான மூலிகைகள் இங்கே காணப்பட்டன. அத்தோடு சில கொடி வகைகளும் காணப்பட்டன. அவை தெவிழம் கொடி நவ்வக்கொடி போன்றவை இவைகளை அக்கால மக்கள் தங்கள் வீடு கட்டப் பயன்படுத்தினர்.

விஸ்தீரணம் : முற்கால எல்லைக்கு அமைவாக வடக்கே அக்கரைப்பற்றும் தெற்கே பொத்துவில் பிரதேசமும் உள்ளடங்கியிருந்தது. 1961ம் ஆண்டுகளுக்கு முன்னர் வடக்கே வெருகல் தொடக்கம் தெற்கே கூமுனை வரையும் பரந்து விரிந்த பழைய மட்டக்களப்பு மாவட்டத்தையும் உள்ளடங்கியிருந்ததாக அறியமுடிகின்றது.

அன்றைய திரக்கோவில் 78.1 சதுரமைல் பரப்பினை உள்ளடக்கிய தமிழர்கள் செறிந்து வாழும் கரையோர பிரதேசமாகும். இப்பிரதேசம் 22 கிராம உத்தியோகஸ்தர் பிரிவுகளாக கொண்டு ஓர் திருக்கோவில் பிரதேச சபையும் தம்பிலுவில் ஊரில் அமையப் பெற்று காணப்பட்டன.

இப்பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் பூர்விக காலம் தொட்டு செய்தொழிலாக விவசாயம் செய்து வந்தனர். இப் பகுதி மக்கள் கூடுதலாக கால் நடை மற்றும் விவசாயம் என்பவற்றை முக்கிய தொழிலாகக் கொண்டனர். முன்னைய ஆண்டின் பதிப்பீட்டின் பிரகாரத்தில் கிடைத்த தகவல்களில் அடிப்படையில் எத்தனை எத்தனை ஏக்கரில் என்ன என்ன வகையான பயிர்கள் செய்கை பண்ணலாம் என்பதனை அறிய முடிகின்றது.

# 26. பயிர் வகைகள்

1. நெற்பயிர் செய்கை 8994 ஏக்கரிலும்
2. தென்னை 2195 ஏக்கரிலும்
3. பழங்கள் 337 ஏக்கரிலும்
4. மரக்கறி வகை 586 ஏக்கரிலும்
5. சோளம் 1900 ஏக்கரிலும்
6. நிலக்கடலை 1443 ஏக்கரிலும்
7. ஏனைய பயிர் வகைகள் 412 ஏக்கரிலும் பயிர் செய்யப்படுவதாக அறிந்து கொள்ள முடிகின்றது.

தென்னை : கடற்கரையை அண்டிய பிரதேசத்தில் அடர்ந்து சோலையாக காணப்பட்டது. அக்காலத்தில் இதனைப் பரிபாலிக்க துப்பாக்கி ஏந்திய காவற்காரர்களும் நியமிக்கப்பட்டதாகவும். காவற்காராக அந்திஸ்வண்டையா என்பவர். வெடிக்காரராக இருந்தார் என்றும் கூறப்பட்டது. இவர் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் களுதாவளையைச் சேர்ந்த சைவப் பெண்ணான தெய்வானை என்பவரைத் திருமணம் முடித்து தம்பிலுவிலில் வாழ்ந்தார். இவர்களுடைய வாரிசு இங்கே வாழ்ந்து வருகின்றனர். அத்தோடு முட்கம்பி வேலிகளும் அதனைச்சுற்றி முள் மரங்களும் சூழ்ந்து இருந்தது. அனுமதியின்றி தோட்டங்களுக்குள் புகுந்தவர்கள் பிடிக்கப்பட்டு மரத்தில் கட்டப்பட்டு ஆக்கினையும் செய்யப்பட்டனர்.

தம்பட்டைக்கு அப்பால் தம்பிலுவில் தொடக்கம் மங்மாரி அம்மன் தோட்டம் வரை செழிப்புற்று ஓங்கி வளர்ந்து காணப்பட்டன.

இங்கிருந்து கொப்புறா எடுத்து ஏற்றுமதியும் செய்யப்பட்டது. அக்காலத்தில் சந்தையில் அதிக தேங்காய்களையும் காணலாம். எஸ்.எஸ். தருமரெட்ணம் வன்னியனாருக்கு அதிகம் தென்னந்தோட்டம் இருந்ததாகவும் இவருடைய தோட்டத்திலுள்ள தேங்காய்களைச் சேகரிப்பதற்கு யானை வண்டில்

உபயோகிக்கப்பட்டதாகவும். இவருடைய் பங்களாவில் மிகவும் உயரமான யானை ஒன்றும் கடினமான சங்கிலியால் கட்டப்பட்டு இருக்கும் என்றும் அறிய முடிந்தது. அக்காலத்தில் இவ் யானைப் பாகனாக இவ்வூரைச்சேர்ந்த குச்சித்தம்பி என்பவர் இருந்தார். இவருடைய பரம்பரையை யானைக்காரக் குஞ்சன் பரம்பரை என கூறுவர். இக்காலகட்டத்தில் ஸ்ரீ உகந்தை மலை முருகன் ஆலயத்தில். கதிர்காமக் கந்தன் பாதயாத்திரை செல்வதற்காக. வன்னியனாரின் பரம்பரையினர் ஒரு தங்குமிடம் கட்டியிருந்ததாகவும். இம் மடமானது மரத்தாலும் மண்ணாலும் கட்டப்பட்டும் இதற்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட தென்னங்கிடுகுகள் மேற்கூரைக்கு மேய்வதற்காக யானை வண்டிலில் கொண்டு சென்றதாக ஓர் கர்ணபரம்பரைக் கதை உண்டு. (ஆதாரம் கூமுனைப்பதி காவிய நூல்)

## 27. அக்கால மக்களின் குடியுருப்புக்கள்

அக்கால மக்களின் குடியிருப்புக்கள் பெரும்பாலும் வைக்கோல், இலுப்பைப் புல், தளப்பத்தை போன்றவற்றால் மேயப்பட்டு சிறுகுடிசை யாகவே இருந்தன. இத்தளப்பத்தையையே மக்கள் மழைக்கவசமாகப் பயன்படுத்தினர். காலம் செல்லச் செல்ல மண் குடிசைகள் ஆகவும் பின்னர் மூன்று அறைகள் கொண்ட வீடுகளாகவும் உருப் பெற்றன. தென்பக்கத்து அறையை சாப்பறை என்றும் அல்லது மஞ்சி அறை என்றும், சுவாமி அறையை உள்வீடு என்றும் அழைப்பர். சுவர்களுக்கு காட்டில் சென்று கத்தியால் கம்பு வெட்டி வந்து. அதை நட்டு மெல்லிய கம்புகளை அடுக்கி நேர்பார்த்து. நாட்டப்பட்ட கம்புகளில் மாவரக்கம்புகளை கட்டுவர். (நவ்வக் கொடி என்று சொல்லப்படும் நார் போன்ற கொடி வகையைச்சேர்ந்து கட்டுவர்) அவ்வரியின் மேல் களிமண் எடுத்து வந்து நீரும் மணலும் சேர்ந்து துவைத்து. சிறு சிறு உருண்டையாக உருட்டி அதில் வைத்தும், எறிந்தும், அப்பியும் இருபக்கமும் பள்ளமாக இருந்தால் சிரட்டை அல்லது சில்லாங் கொட்டை கொண்டு மினுக்குவர். வீட்டின் மேல் தென்னங்கிடுகு வைக்கோல் கொண்டு மேய்ந்திருக்கும்.

வளவுக்கு நாற்புறத்திலம் சுற்றி வர வேலி கட்டுவர். இவ் வேலிக்குத் தேவையான கம்பு கட்டைகள் அனைத்தும் மாட்டு வண்டிலில் கொண்டு வந்து சேர்ப்பர். இக் கட்டையை வரிசைக்கிரகமாகக் கூர் போடுவர். அதனை வளவுக்குச்சுற்றி வர எல்லையாக நட்டு மாவரைக்கம்பு வரிச்சி வைத்து கொடிகளால் வரிந்து கட்டுவர். போக்குவரத்துக்கு என்று வழியும் உழலையும் வைப்பர்.

## I. கிணறு குடிநீர்

இக்கால குளியலறை போன்று அக்காலத்தில் யாவரும் அறிந்திலர். பெரும் போர் கொண்ட பாலைமரத்தைக் குடைந்து எடுத்து இரண்டு பேர் சேர்ந்து தோளில் வைத்து காவி வந்து நடு வாசலில் நாட்டி கிணறு போடுவது வழக்கம். இக் கிணற்றடியில் சுவாமியறை வெளிச்சம் தெரிய வேண்டும் என்பது மரபாகும். அக்காலத்தில் கிணற்றில் இருந்து நிர் அள்ளுவதற்கு மரபட்டை வாளியையே உபயோகித்தார்கள். இச் சொல் இன்றும் "வாளிப்பட்டை" என்று சில இடங்களில் உபயோகிக் கப்படுகின்றது. ஓர் மரத்துண்டை வட்டவடிவமாகக் குடைந்து எடுத்து இப்பட்டையின் நடுவில், நீண்டகம்பை நீர் ஒழுகாதவாறு பொருத்தி அதன் மூலம் தண்ணீர் அள்ளினர். அதன் பிற்பாடு சில காலங்கள் செல்ல செங்கல்களினாலான கிணறுகள் கட்ட ஆரம்பித்தனர்.

## II. வீசு மரம் தூலாப்போடல்

இப் பிரதேசத்தில் இன்றும் காணக்கூடியவாறு சில இடங்களில் வீச மரம் உள்ளன. இதற்கென்று சில மரங்களைத் தெரிவு செய்வர். முதிரை, திருக்கொன்றை மரம் போன்ற மரங்களில். முற்றிய வைர மரமாகத் தெரிவு செய்து இரண்டு கவையுள்ளாதாக எடுப்பர். கவையின் நடுவேமரத்துண்டு ஒன்றை குறுக்கே வைத்து (அச்சுலகை) அதன் மேல் நீண்ட ஓர் மரத்துண்டை வைப்பர்.

இதனை வீசுமரம் என அழைப்பர். அச்சுலக்கையும் வீசு மரத்தையும் இணைத்துப் பிடிப்பதற்கு வளைவாக ஒரு சிறு துண்டை வைப்பர். இது குரங்கொட்டி என்று சொல்லப்படும். வீச்சு மரத்தின் நுனியில் வெல்வந்த நாரால் திரிக்கப்பட்ட கயிறு கட்டப்பட்டு இருக்கும் அக்கயிற்றில் வாளிப்பட்டை பொருத்தப்பட்ட கம்மைபைக்கட்டி இலகுவாக தண்ணீர் கிணற்றில் இருந்து எடுத்தனர். இக் கிணற்றை சுற்றி வர மாதுளை, மல்லிகை, செவ்வரத்தை என்பவற்றோடு கமுக மரமும் நிறைந்து காணப்படும்.

## 28. பெரிய களப்பு முகத்துவாரச் சிறப்பு

அக்கரைப்பற்றுக்கே தெற்கே கோளாவில் பனங்காட்டுக்கு கிழக்கே அழகிய தம்பிலுவில் ஊர் அமைந்துள்ளது. மழைக்காலங்களில் இங்குள்ள பள்ளவழி, கண்டங்குழி மேலும் களப்பை அண்டிய அனைத்து தாழ் நிலங்களும் வெள்ளத்தில் மூழ்கி இப் பகுதியில் மக்கள் இருப்பிடங்கள் அற்று வெளியேறி பள்ளிக் கூடங்களில் தங்குவர். அரசினால் அவர்களுக்கு வெள்ள நிவாரணப் பொருட்கள், பண உதவிகள் என்பன வழங்கப்படும். களி மண் வீடுகள் வெள்ளத்தில் சிக்குண்டு அழிவதும் உண்டு.

அக்காலத்தில் இப்பகுதியில் களப்புக் அருகில் அனேகமான சலவைத் தொழிலாளர்களே அவர்களின் தொழில் நிமித்தம் கட்டாயம் வாழ வேண்டியதாகிற்று. பெரிய முகத்துவாரம் பிரதான வீதி போக்குவரத்துக்கு முற்றாக தடைப்பட்டிருக்கும். அவ்வேளை கடலும் களப்பும் சங்கமாகும். இவ் வேளையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு இதில் வரும் மீன், நண்டு, பாம்பு, முதலை, இறால், குப்பைகூளங்கள், மரம், தடி (மூங்கில்) கடற்கரையில் ஒதுக்கப்பட்டு கிடக்கும் இவற்றை மக்கள் பார்ப்பதற்குச் செல்வர். இதனை வருடா வருடம் பெரிய முகத்துவாரம் பார்க்கப்போவதாக சொல்வர். இதற்கு மக்கள் கூட்டம், கூட்டமாக போவார்கள். பெப்ரவரி மாதம் வரை மழை பெய்வது வழக்கம் இவ்வேளையில் தவளை இனங்கள் விதம் விதமான வித்தியாசமான ஓசை எழுப்பும் இதுவோர் புதினமாகவும் இருக்கும்.

## 29. நால்வகை திரவியங்கள்

இங்கு கடல், காடு, நீர், நிலம் என நால்வகை திரவியங்கள் உள்ளன. இவைகளில் இருந்த பல பொருட்கள் பெறப்படும். அவைகள் இவ்வூரின் தனித்தன்மைக்கும் செல்வச்செழிப்புக்கும் காரணமாகிச் சிறப்பளிக்கின்றன. கடலிலிருந்து பெறும் திரவியங்களில் கிழக்கே கூடுதலானபரப்பு காணப்பட்டன. பருவகாலத்தில் இக்கடலில் ஒரு வகையான மீன்கள் காணப்பட்டன. இங்கு வீடு கட்டுவதற்காகவும் தாழ் நிலப்பிரதேசத்திற்கு மண் நிரப்புவதற்காககவும் மண் பயன்படுகின்றது. கடற்கரைத் தாவரமான தாழம்பூ, தாழம் இலை, தாழங்காய், தாழம்பழம் ஆகியன இங்குள்ள சித்த வைத்தியத்தர்கள் வைத்தியத்திற்கான மூலிகைகளாக பயன்படுத்தப்பட்டன. சிப்பியினைக் கொண்டு சுண்ணாம்பு செய்யப்பட்டது.

### I. காடு தரும் செல்வங்கள்

இக் கிராமத்தை அண்டிய பகுதியில் அடர்ந்த காடுகள் காணப்பட்டன. காஞ்சிரங்குடா (வெருகல் அடி) இவ்விடத்தில் மரம் பிடிப்பதற்கு என்று ஒரு பாதுகாப்புக் காவலர்கள் இருந்தனர். அதற்குப் அப்பால் காஞ்சிரம்குடா, கஞ்சிகுடிச்சாறு, வில்காமம் தாண்டியடி, ரூபஸ்குளம், சாவாறு போன்ற இடங்களில் மான், மரை, பன்றி போன்ற மிருகங்கள் இறைச்சிக்காக வேட்டையாடப்பட்டன. இவை இவ் இடங்களில் சரமாரியாக திரியும் இக் காலங்களில் காடுகள் அழிக்கப்பட்டு வயல் நிலங்களாகவும் குடியிருப்பு நிலங்களாகவும் மாற்றம் பெற்றன. கஞ்சிகுடிச்சாறு கிராமம் தங்கவேலாயுதபுரம் தாண்டியடி போன்ற கிராமங்களும் உருவாகின. வனாந்தரமான இப் பகுதியில் அதிக மழைவீழ்ச்சியும் இருந்தது. நல்ல வைரமான முதிரை, கருங்காலி, சமுளை, ரானை, திருக்கொன்றை, பாலை போன்ற பெறுமதிமிக்க மரங்கள் இக்காடுகளில் இருந்து வெட்டி எடுக்கப்பட்டன. 1957ம் ஆண்டு ஏற்பட்ட பெரு வெள்ளத்தினால் களி மண்ணால் ஆன வீடுகள்

சேதமடைந்ததனால் பின்பு அங்கு அமைந்த வீடுகள் நல்ல சிறப்பான வீடுகளாக செங்கல் வீடுகளாகவும் கதவு நிலைகள் உள்ள வீடுகளாகவும் உருமாற்றம் பெற்றன. கதவுகள் அனைத்தும் முதிரை மரத்தால் செய்யப்பட்டன. வீட்டின் மேல் கோப்பிசம் சமுளை, ரானை மரங்களாலும் செய்யப்பட்டது.

## II. நிலம் தரும் திரவியங்கள்

இவ்வூரில் உள்ள நிலங்களில் கிறவல், களி, சேறு, செம்மண் போன்ற மண் வகைகள் காணப்படுகின்றன. களி மண்ணால் சட்டி, பானை, கைப்பணிப் பொருட்கள், உருவங்கள் போன்றன செய்யப்பட்டன. மணல் வீடுகட்டுவதற்காகவும் கடல்மண், ஆற்றுமண் என்பன தேவையாக இருந்தது. கிறவல் மண்வீட்டுக்குள் நிலத்தில்போடப்பயன்படுகின்றன. சேத்து நிலங்களில் பயிர்கள் வளர்க்கக் கூடியனவாக அமைந்துள்ளதால் தாமரை அவற்றின் பூ, கிழங்கு, இலைகள், காய்கள் போன்ற உணவுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. கடற்பரப்பில் தென்னையும் (மணல்) வாழையும், மேட்டுநிலத்தில் சோளம், கச்சான், குரக்கன், இறுங்கு போன்ற தானியங்களும் மலைப்பகுதிகளில் மரவள்ளிச் சேனையும் பெரும் பரப்பில் செய்யப்படுகின்றன.

## III. நீரில் இருந்து பெறும் செல்வங்கள்

பெரிய களப்பு, சாகாமம், ரூபஸ்குளம், கஞ்சிகுடியாற்றுக்குளம், புதுக்குளம், இராமன் குளம், கோரக்களப்பு போன்ற நீர் தேக்கங்களிலும் முறாவோடை, உப்புக்கரச்சி, ரூபஸ் குளத்தில் பொட்டியான், துரைவளத்தான், கொக்கிச்சான் போன்ற மீன்கள் தோணியில் சென்று வலை வீசிப் பிடிப்பர். முறா வோடையில் இறால், நண்டு, மணலைமீன், சள்ளல் மீன், செல்வன், கணையான் என்பனவும் இராமன் குளத்தில் குறட்டை, பனையான், உழுவை, விரால், சுங்கான் என்பனவையும் பெரிய களப்பில் இறால், நண்டு, மணலை, ஆற்றுமீன் என்பனவும் கிடைக்கப் பெறும். இங்கு சில

நிர்த்தேக்கங்கள் வயல் நிலமாகவும் மக்கள் குடியேற்றத்தால் மாறி வேறு தேவைக்கும் பயன்படுத்தப்படுகின்றன. பெண்கள் அத்தாங்கு பொட்டு கூனி வடிப்பர். சென்னக்கூனி, ஐயாமாசி போன்ற கூனிகளை வடித்து எடுப்பர்.

## 30. போக்குவரத்துச் சாதனங்கள்

அக்காலங்களில் முறையான போக்குவரத்துச் சாதனங்கள் இருக்கவில்லை. கால் நடையாகவே பெரும்பாலும் போக்குவரத்து மேற்கொண்டனர். பாதைகளின் இருமருங்குகளும் வனாந்தரமாகவே காணப்பட்டன. யானை, மாடுகளின் அரவங்கள் காடுகளின் குறுக்கு மறுக்காகவும் காணப்பட்டன. இதனூடாக நடந்து எவ்வளவு தூரம் செல்லுவதாக இருந்தாலும் வேறு வழியில்லாமல் நடந்தே செல்ல வேண்டும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் அக்கால மக்களின் வழக்கு, வாதம், கச்சேரி போன்றவைகள் அவ்வூர்களில் நிறுவப்பட்டு இருந்தது. இங்குள்ளவர்கள் நடந்து அவ்வூர்களுக்குச் சென்றனர். அக்கால கிராமாட்சி மன்ற தவிசாளராக இருந்த நெருப்புக் கொள்ளித் தம்பி முத்தர், கண்டாக்கர் போன்றோர் இவ் இடங்களுக்கு சென்று வந்தனர்.

இப்பிரதேசத்திற்கு மக்கள் முச்சந்தி வியாபாரத்திற்காக பல பகுதிகளில் இருந்தும் வருகை தந்தனர். பக்கமுட்டியாவ, லகுகல, மாந்தோட்டம் ஆகிய பகுதிகளில் இருந்து வந்து சென்று போவது வழக்கம். ஆரம்காலங்களில் பொருட்கள் தலைச்சுமையாகவே கொண்டு செல்லப்பட்டன. பின்னர் காவுதடிகள் மூலம் கொண்டு செல்லப்பட்டன. அதன் பிற்பாடு முஸ்லிம் வியாபாரிகளின் வருகையும் ஆரம்பித்தது. இவர்கள் முதன் முதலில் தவளம் (பொதிமாடு) எனும் புது போக்குவரத்துச் சாதனத்தை அறிமுகம் செய்து வைத்தனர். அதன் பின் வந்த மாட்டு வண்டில், டச்சுக்காரர், ஒல்லாந்தர் காலத்தில் ஏற்பட்டதென்றும் இதற்கு முன் தவளம்

முறை பயன்படுத்தப்பட்டது என்றும் டாக்டர் பாலேந்திரா கூறினார் என்று அக்கரைப்பற்று வரலாற்றில் (பக்கம் 168 இல்) குறிப்பிடப்பட்டுள்ளது. எருமை மாட்டின் மூலமே அக்காலத்தில் (தவள மாட்டின் மூலம்) வயலில் விளைந்த நெல்லை போடியார் வீட்டுக்கு ஏற்றிச் சென்றனர். அம் மாட்டின் கழுத்தில் பெரிய மணி ஒன்று கட்டியிருக்கும். மாட்டின் இரு விலா முதுகில் நெல் மூடையைதொங்க விடுவர். போக்குவரத்துக் காலங்களில் மிருகங்களை விரட்டவே மாட்டின் கழுத்தில் மணி கட்டப்பட்டு இருக்கும். அதாவது மணியின் சத்தம் கேட்க மிருகங்கள் பயந்து விலகி ஓடும்.

ஆரம்பகாலங்கலில் சிறு பொருட்களை ஏற்றி தள்ளிக் கொண்டு போகும் தள்ளு வண்டி இருந்தது. பின் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் ஒற்றை மாட்டுவண்டி, இரட்டை மாட்டு வண்டி முறை புகுத்தப்பட்டது. இது வில் கரத்தை எனும் அமைப்பாக மாற்றம் பெற்றது. (பக்கி) இது இரும்பும், பலகையும் சேர்ந்து செய்யப்பட்டது. இதில் பெரும் தனவந்தர்களும், தலைவர்களும் பிரயாணம் செய்யவே உபயோகித்தனர். இக்காலத்தில் தரும ரெத்தினம் வன்னியார் அவர்களுக்கும் ஓர் குதிரை வண்டியும் இருந்தது. பிரயாணம் செய்ததாகவும் அறிய முடிகின்றது. அக்காலத்தில் இங்கு இருந்து பனங்காடு, கோளாவில், கருங்கொட்டித்தீவுக்கு. மக்கள் செல்வதாய் இருந்தால் நீர்நிலைகளை கடக்க தோணிகளை உபயோகித்தனர்.

பண்டு தொட்டு இங்கிருந்து பழமையான பாதை இருந்தது. அப்பாதை தம்பிலுவிலூரில் இருந்து (பெரிய களப்பு) தம்பட்டை முனை ஊடாக வந்து. பனங்காடு மேற்காய் காட்டுக்கடுப்பு, புல் மேடு, பட்டியடிப்பிட்டி, மொட்டையான் வெளி, முள்ளி குளத்து மலை, காக்காத்திப்பிட்டி, மல்லிகைத்தீவு, மல்வத்தை, சவளக்கடை, படுவான் கரையை அடைந்தது.
(குறிப்பு : அக்கரைப்பற்று வரலாறு பக்கம் 171)

அக்காலத்தில் தம்பிலுவிலிலிருந்து கருங்கொடித்தீவுக்கும், மட்டக்களப்புக்கும், கரையோரப்பாதை இருக்கவில்லை. தனவந்தரும் பணம் படைத்தவர்களும் கூடார வண்டிலில் சென்றனர். காலப்போக்கில் 1910 இல் இப்பகுதியில் துவிச்சக்கரவண்டி வழக்கத்திற்கு வந்தது. 1912இல் தனியார் பஸ் ஒன்றும் மட்டக்களப்பில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது. அக்கரைப்பற்றில் இருந்து பொத்துவில் வரை தனியார் வேன்களும் ரக்குகளும் ஓட ஆரம்பித்தன. பின் தி.ஜி.எம். சைமன் சில்வா என்பவரால் காடி மோட்டார் சேவிஸ் கம்பனி என்ற பெயரில் ஓர் பேருந்துச்சேவை நடத்தப்பட்டது. அதன் பின் பிஸ்ரன் பஸ் கம்பனி ஆரம்பமானது. அக்கரைப்பற்றிலிருந்து, மட்டகளப்புக்கு பஸ் கட்டணமாக ஒருவருக்கு இருபது சதம் அறவிடப்பட்டது. (இது 1915ம் ஆண்டு)

தம்பிலுவில் திருக்கோவிலிலிருந்து அக்கரைப்பற்று போக்குவரத்துக் கட்டணமாக பத்து சதம் அறவிடப்பட்டது. பொத்துவிலிலிருந்து தம்பிலுவில் திருக்கோவிலூடாக அக்கரைப்பற்று போக்குவரத்துக் கட்டணமாக பன்னிரெண்டு சதம் அறவிடப்பட்டது. மட்டக்களப்பில் 1928ம் ஆண்டு முதல் புகையிரத வண்டி வந்தது. கல்முனையில் இருந்து அக்கரைப்பற்று பிரதான வீதி கரடு முரடாக இருந்தது. 1916ம் ஆண்டளவில் இப்பாதை 39ம் கட்டை வரை போடப்பட்டு இருந்தது. 39ம் கட்டையில் இருந்து பொத்துவில் வீதி மணல்பரவாமல் கற்களாகவே இருந்தது. இச்சந்தர்ப்பத்தில் ஆங்கிலேயர் ஆட்சியில் கரையோர பகுதியில் தென்னை பயிரிடத்திட்டம் வகுக்கப்படதனால் பாதையின் அவசியம் உணரப்பட்டு அதன் பின் 1916ம் ஆண்டிலிருநது அவ்வீதி புனரமைக்கப்பட்டு தார் ஊற்றப்பட்டது. இதன் மூலம் அக்கரைப்பற்று, தம்பட்டை, தம்பிலுவில், திருக்கோவில், கோமாரி, பொத்துவில் ஆகிய பிரதேசங்களில் தென்னந்தோட்டங்களை அபிவிருத்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இப் பகுதிகளை எஸ்.எஸ்.ஆர் என்பவர் மேற்பார்வை செய்தார்.

சாகாமக்குளம் கட்டுவதற்காக சாகாம வீதி அமைக்கப்பட்டது. சாகம விடுதியிலிருந்து 1982ம் ஆண்டு அக்கரைப்பற்று வரை பஸ் போக்குவரத்து ஆரம்பமாகியது.

## 31. தம்பிலுவில் பிரதேச மக்களின் கலை கலாசார பண்பாட்டு மரபு வாழ்க்கைப் பாரம்பரியங்கள்

இவர்கள் பலவிதமான கட்டுப்பாட்டு ஒழுங்குமுறைச் செய்திறன்களை நடைமுறைப்படுத்தியதால் பெரும்பாலும் ஆறுதலான வாழ்க்கையில் ஆனந்தம் கொண்டனர். அத்தோடு அவர்களுடைய பெருமையும் பாதுகாக்கப்பட்டது. இந்த அடிப்படையில் மரபு என்பன மிக உயர்ந்த நிலையில் இருந்தன. பஞ்சாயத்தின் மேற்பார்வைக்கு அவர்கள் உட்படத்தப்பட்டு இருந்தனர். தலைமை என்னும் ஓர் கண்ணியத்துக்கும் அடிபணிந்தனர். ஆலயங்கள் போன்ற வணக்கத்தலங்களே தலைவர்களை உருவாக்கும் களமாக இருந்தன. கட்டுப்பாட்டை மீறியவர்களுக்கு தண்டனையும் வழங்கப்பட்டது. திருமணம் என்றாலும் ஏனைய விசேட நிகழ்வுகள் என்றாலும் இப் பஞ்சாயத்திற்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டியு ள்ளதாயிற்று எங்கு திருமணமோ அல்லது மரணவீடோ அங்கு கிராம மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு நிற்பர். ஒவ்வொருவரின் வீட்டிலும் இந் நிகழ்வுகள் நடை பெறுவதாக எண்ணி செயற்படும் வண்ணம் தோழமை உணர்வுகள் அவ்வேளை உயர்ந்து காணப்படும்.

ஆடை அணிகலங்கள்: பெண்கள் உடல் முழுவதும் மூடியவாறு சேலை அணிந்திருப்பர். மெல்லிய ஆடை அணியும் பழக்கம் அக்காலத்தில் இருக்கவில்லை.

அணிகலன்கள்: அக்காலப் பெண்கள் தங்க நகைகளில் மிகவும் ஆர்வமாக இருந்தனர். பூட்டுக்காப்பு, கொம்புக்காப்பு, அடுக்கு காப்பு, பட்டிக்காப்பு,கைகட்டு வளையல், மூக்குத்தி, அல்லிக்குத்து,

கொப்புறுவாளி, வாழைப்பூவாளி, சிமிக்கி, கொண்டைக்குத்தி, கை மோதிரம், கால் மோதிரம், தட்டு மோதிரம், குத்து மணிக் கோர்வை, சவுக்கு மணி, சகரமணி, உருட்டைக் கொடி ஒட்டுக்கொடி, சவடி, சங்கிலி கொண்டைப்பூ மயிர் மாட்டி என்பன அணிவதுண்டு.

**ஆண்கள்** : எட்டுமுழ வேட்டியும், ஆறுமுழச்சால்வையும், வாலாமணியும் அணிவர். ஆண்கள் இடுப்பில் அரைநாண்கொடி (அறுநாக் கொடி) கட்டுவர். சிலர் காதில் கடுக்கன் மின்னி என்பன அணிந்திருப்பர். ஆண் பிள்ளை களுக்குச் சிறு வயதில் கழுத்தில் வெள்ளிக்காறையும், காதில் மின்னியும், கைகளில் காப்பும் போடுவர். இவர்களிடத்தில் வெற்றிலை பாக்கு (தாம்பூலம்) போடும் பழக்கம் நீண்டகாலமாக இருந்து வந்திருக்கின்றது. வெற்றிலை வட்டா, சுண்ணாம்பு வைக்கும் கிள்ளவடு எப்போதும் தயாராக இருக்கும். பனையோலையால் இழைக்கப்பட்ட வெற்றிலைக்குட்டான் என்பது எல்லோரின் வீட்டிலும் வைக்கப்பட்டிருக்கும் பெண்கள் அவர்களது காசுகளை சேலை தொங்கல் நுனியில் கட்டி முடிந்து கொள்வர். ஆண்கள் அவர்களுடைய வெற்றிலை, பாக்குகளை வல்லுகப் பையில் வைத்திருப் பர். ஒரு பைசாவை ஒரு ரூபா என்றும், ஐம்பது சதத்தை சிலின் என்றும், 25 சதத்தை நாலு பணம் என்றும், எழுபத்தைந்து சதத்தை முக்கால் ரூபா என்றும், ஆறு சதத்தை ஒருபணம் என்றும் பத்து ரூபாவை ஒரு பவுண் என்றும் கூறுவர்.

இக்காசிப்புழக்கத்தில் ஒரு பவுண் தங்கக்காசு, பத்து ரூபாவாக இருந்தது. ஒரு ரூபா, ஐம்பது சதம், இருபத்தைந் சதம், பத்து சதம், ஐந்து சதம், வெள்ளிக்குற்றிக்காசாக இருந்தது. இரண்டு சதம், ஒரு சதம், சல்லிக்காசு (அரைச்சதம்) இவைகள் செம்பு, பித்தாளைக் காசாக இருந்தது. ஒரு சல்லிக்கு சொக்கிச்காய், ஒரு சல்லிக்கு மல்லி, மிளகு என்ற ரீதியில் சாமான்கள்

வாங்கக்கூடியதாக இருந்தன. நாளொன்றுக்கு அன்றாடச் செலவாக பத்துச் சதம் போதுமாக இருந்தது. 1907ம் ஆண்டு ஒரு மரக்கால் நெல்லின் விலை இருபத்தைந்து சதமாகவும், ஒரு பூசல் ஒரு ரூபாயாகவும் இருந்தது. இப்போது, பணம் மதிப்பற்று விலை வாசி வானைத் தொட்டு விட்டது எனலாம்.

## 32. அரும்பணிக்கான அமைப்புக்கள்

வாவி சங்கமிக்கும் வடக்கே, முகததுவாரம் தொடக்கம் வரலாறு கூறும் திருக்கோவிலுக்கு தெற்கேயும், காவியம் சொல்லும் களப்பிற்கு மேற்கேயும், கருங்கண்ணி மீன் நிறைந்த கடலின் கிழக்கேயும், அரும்பணி ஆற்றும் அமைப்புக்கள் சில இருந்தன. அம்பாரை மாவட்ட மக்கள் ஒன்றிய அமைப்பு 1983ல் ஆரம்பிக்கப்பட்டது. இது இம்மாவட்டம் முழுவதிற்கும் உரியதாகும். கல்வி கலாசாரம் சமயப்பணிகளின் ஊடகமாக இருந்தது. இதன் அங்கத்தவராக இருந்த திரு. என்.நடராசா தருமலிங்கம் அவர்கள் அக்கரைப்பற்று தெற்கு கிராமட்சிமன்றம் இருந்த காலத்தில் அதன் தவிசாளராக இருந்து இப் பிரதேசத்தில் பெரும் பணியை ஆற்றியுள்ளார். இக்கிராமாட்சி மன்றம் ஊடாக குடிநீர் இல்லாத இடங்களுக்கு கிணறு கட்டுதல், வீதி அபிவிருத்தி செய்தல், தம்பிலுவில் மத்திய சந்தை என்பன இப் பிரதேசத்திற்கு கிடைக்கப்பெற்றன. மேலும் அரும்பணிக்கான அமைப்புக்கள் இங்கு இருந்தன. இவைகளுடாக அக்காலத்தில் இப் பிரதேச மக்களின் கலை கலாசாரம் வெளிப்பட்டன. முரசொலி கலாமன்றம், மதியொலி கலாமன்றமும், அதன் பிற்பட்ட காலங்களில் இந்துமாமன்றம், இந்து இளைஞர் மன்றம் போன்றன காணப்பட்டன. இந்த இந்து இளைஞர் மன்றம் மூலமாக சில மேடை நாடகங்கள், நாட்டுக்கூத்து கண்ணகி விழா என்பன சிறப்புற நடைபெற்றன. அத்தோடு தம்பிலுவில் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு கும்பாவிஷேகம் அவ் அமைப்பின் அனுசரனையுடன் நடத்தப்பட்டது ஒரு விஷேட அம்சமாகும்.

இதற்குப் பிற்பட்ட காலப்பகுதியில் சமூக நேயம் கொண்ட அமைப்புக்கள் உருவாக்கம் பெற்றன. திருநாவுக்கரசு நாயனர் குருகுலம் தம்பிலுவில். (1987ம் ஆண்டு), சிவ தொண்டர் அமைப்பு என்பனவாகும். தம்பிலுவில் (2002) சிவதொண்டர் அமைப்பானது நாட்டில் (2004ம் ஆண்டு) ஏற்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரும் பணியாற்றியது குறிப்பிடத்தக்கது.

திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்தில் இற்றைக்கு நூற்றாண்டுக்குட்பட்ட காலத்தில் மிகவும் வேகமாக வளர்ச்சியுற்று வேறு சில கிராமங்களும் உருவாகின.

1963ம் ஆண்டு இங்குள்ள மக்கள் விநாயகபுரம் என்னும் கிராமத்தில் குடியேறினர். அதேபோன்று காயத்திரி கிராமம், சின்னத்தோட்டம், கனகநர் பொன்ற கிராமங்கள் உருவாக்கப்பட்டன. இக்கால கட்டத்தில் இவ் இடங்களில் வெவ்வேறு பாடசாலைகளும் வணக்கஸ்தலங்களும் உருவாக்கப்பட்டது.

ஆரம்பத்தில் திருக்கோவில் பிரதேசம் மூன்று பிரிவுகளாக இருந்தது. தம்பிலுவில் 1ம் குறிச்சி தம்பிலுவில் 2ம் குறிச்சி மற்றையது திருக்கோவில் ஒரு பிரிவாகவும் இருந்தது. அப்போதைய திருக்கோவில் பிரதேசசபையில் ஓர் உதவி அரசாங்க அதிபர் காரியாலயமும் தற்காலிகமாக முன்னர் இருந்த கிராமாட்சி மன்றக் கட்டிடத்தில் திருவாளர் என்.நடராஜா தருமலிங்கம் அவர்களின் முயற்சியால் தற்காலிகமாக இயங்கி வந்தது. இதற்கு முந்தைய காலம் அக்கரைப்பற்று உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்துடன் இயங்கி வந்தது.

அதன் பிற்பாடு காலப்போக்கில் தனியான ஓர் காரியாலயம் திருக்கோவில் ஊரில் உருவாகிற்று (1975 - 1976) இக்காலகட்டத்தில் கிராம ஆட்சி மன்றம் அனைத்தும் அம்பாறை மாவட்ட அபிவிருத்திந் சபை என திருக்கோவில் உள்ளூராட்சி மன்றம் பெயர் மாற்றம் பெற்றது. அதன் பிற்பாடு இவ்

அபிவிருத்திச் சபைக்கு திருக்கோவில் உதவி அரசாங்க அதிபராக வந்திருந்த அமரர். எஸ்.வி.ஆர். வேதநாயகம் (S.L.A.S) அவர்கள் *(1978.08.19)* விசேட ஆணையாளராக நியமிக்கப்பட்ட காலகட்டத்தில் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் பிரதேச செயலகமாக மாற்றம் பெற்றது. திருக்கோவில் கிராமம் மிகவும் வளர்ச்சியுற்று திருக்கோவில் பிரதேசத்தில் ஓர் திருக்கோவில் பிரதேச செயலகம் உருவாகலாயிற்று. இப் பிரதேச செயலகத்தின் செயலாளராக பி.இரா.செல்வக்குமார் (S.L.A.S) அவர்கள் *(1991.09.04)* நியமனம் பெற்றார். முதல் பிரதேச செயலாளர் என்ற பெருமை இவரையே சாரும். அத்தோடு தம்பிலுவில் ஊரில் அரசாங்க நிர்வாக சேவை பரீட்சையில் சித்தியடைந்த பெருமையும் இவருக்குரியதே ஆகும். இக்காலகட்டத்தில் இவர் திருக்கோவில் பிரதேச சபையில் விஷேட ஆணையாளராகவும் கடமையாற்றினார்.

## 33. தம்பிலுவில் ஊரின் முதல் பாடசாலை ஆரம்பம்

பாடசாலை வரலாற்றின் அடிப்படையில் வரலாற்றை உரசி ஆராய்ந்தால் ஆரம்பத்தில் இரண்டு பாடசாலைகள் உருவாக்கம் பெற்றது எனலாம். முறையே கிழக்கு பள்ளிக்கூடம், மேற்கு பள்ளிக்கூடம் இவை இரண்டும் அரசினர் தமிழ் கலவன் பாடசாலைகள் ஆகும். மேற்கு பாடசாலையாக தற்போதைய கலைமகள் வித்தியாலயமிருந்தது அந்த வித்தியாலயத்தின் முதல் அதிபராக திரு.சௌந்தர்ராஜன் என்பவர் கடைமயாற்றினார். அதனைத் தொடர்ந்து *1946 - 1965*ம் ஆண்டுகளில் திரு. பரநிருபசிங்கம் அவர்கள் அதிபராகவும், ஐந்து ஆசிரியர்கள் இருந்ததாகவும், *265* மாணவர்கள் கல்வி கற்றதாகவும் அறிய முடிகின்றது. (குறிப்பு திருக்கோவில் பிரதேச கலாச்சார . மலர் விளைநிலம்)

கிழக்கு பாடசாலையாக இருந்த பாடசாலையேதான் தற்போதைய சரஸ்வதி வித்தியாலயம் ஆகும். இப் பாடசாலையின் வரலாற்றுப் பிண்ணனியை உரசி ஆராயுமிடத்தில் 1880ம் ஆண்டளவில் மேலைத்தேய மிஷனரிகளால் ஆரம்பிக்கப்பட்டு 1925ம் ஆண்டளவில் குருகுலக் கல்வி முறை இருந்ததாக அறிய முடிகின்றது. அப் போதைய அதிபராக திரு.மு. வயிரவப்பிள்ளையும் இருந்தார். 04 ஆசிரியர்களும் அவருடன் இருந்தனர் அத்துடன் 10 மாணவர்கள் கல்வி கற்றதாகவும், இவர்களுடைய கற்றல் முறைகள் மணலில் எழுதிக் கற்பிக்கப்பட்டதாகவும் இப்பள்ளிக் கூடம் ஓலையால் வேயப்பட்டதாகும் அக் காலத்தில் அனைத்துப் பாடசாலைகளும் இதே நிலையில் இருந்ததாகவும் பின் 1945ம் ஆண்டளவில் கிழக்குப் பெண்கள் பாடசாலை என்ற பெயருடன் பெயர் மாற்றப்பட்டு இதன் அதிபராக சிவநிரூபசிங்கம் நியமிக்கப்பட்டார். திரு.பரநிரூபசிங்கம் அதிபராக இருந்தகாலகட்டத்தில் இப்பாடசாலையின் பிரித்தானிய மன்னரின் பிறந்தநாள் வைபவம் 1947ம் ஆண்டு கொண்டாடப்பட்டது சிறப்பம்சம் ஆகும்.

அதன் பிற்பாடு இப் பாடசாலை பிள்ளைகளின் கற்றல் மற்றும் திறமை காரணமாக பாரட்டுக்கள் பெற்று சில காலங்களுக்கு பின்பு 1969ஆம் ஆண்டு "சரஸ்வதி வித்தியாலயமாக" பெயர் மாற்றம் பெற்றது.

## மணற்காடு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை (தற்போதைய அருணோதய வித்தியாலயம்)

இப் பாடசாலையை ஆராயுமிடத்தில் 1959.05.04ம் திகதி ஆரம்பமானதாகவும் இதன் தலைமை ஆசிரியராக ஜ.பேரம்பலம் என்பவர் மிகவும் நீண்டகாலமாக கடமையில் இருந்தார் எனவும் அறிய முடிந்தது இப் பாடசாலையில் ஆரம்ப கல்வி கற்ற

மாணவர்கள் தம்பிலுவில் ஊரின் முதன் முதல் டாக்டர் ஆகவும், பொறியியலாளராகவும் பெருமை யைத்தேடி தந்த மாணவர்கள் என்ற வகையில் திருமதி. ராஜேந்திரா சுலோஷனா தேவி வைத்தியராகவும், திரு. செல்லையா திலகராஜா பொறியியளாளராகவும் இப் பாடசாலைக்கு பெருமைத்தேடி தந்தவர்கள் ஆவர்.

இப்பாடசாலையின் ஆசிரியராக திருமதி. வன்னியசிங்கம் கணேஸ்வரி, திருமதி. துரையப்பா ஆசிரியை மேலும் சிலர் ஆசிரியராக கடமையாற்றிய தாக அறியமுடிகின்றது.

## தம்பிலுவில் மத்திய மகா வித்தியாலம்

1958ம் ஆண்டில் கனிஷ்ட பாடசாலை எனும் பிரிவில் ஒரு பாடசாலை தம்பிலுவில் 2ம் பிரிவில் நிறுவப்பட்ட போது அதில் 5ம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றார்கள் இதில் திரு. கே. சோமசுந்தரமும், திரு.எஸ்.செபமாலையும் அதிபர்களாக கடமையாற்றினர். இப்பாடசாலை யில் இடம் நெருக்கடி காரணமாக தம்பிலுவில் மகா வித்தியாலயம் ஒன்று அமைக்கப்பட்டது. இப் பாடசாலை கனிஷ்ட பாடசாலையின் தொடராக அமைக்கப்பட்டது.

இப் பாடசாலைக்கான காணியை தருமரெட்ணம் வன்னியநார் வழங்கினார். ஐந்தாம் வகுப்புக்கு மேற்பட்ட மாணவர்களும் க.பொ.த(சா.:.த) வரையுள்ள மாணவர்களும் கல்வி பயின்றனர். ஒரேயோரு கட்டடத்தையும் 05 உதிவி ஆசிரியர்களையும் கொண்டதாக இப் பாடசாலை விளங்கியது. 1961இல் திரு. எஸ்.எம். லீனா அதிபராக இருந்த காலத்தில் கல்வி அதிகாரி ஜனாப் கடாட் அவர்களின் உதவியினாலும் மேலும் பல கட்டடங்கள் கிடைக்கப் பெற்றது 12 ஆம் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு, உயர்தர கலைப்பிரிவில் திரு.சாமித்தம்பி பொனுத்துரை, எனும் மாணவன் பல்கலைகழகத்திற்குத் தெரிவாகி சாதனை படைத்து தம்பிவிலுக்கு பெருமை தந்த முதல் மாணவன் என்ற பெருமை பெற்றார்.

# 34. திருக்கோவில், தம்பிலுவில் பிரதேசத்தில் வாழ்ந்த குறவர் குலம்

இவர்கள் ஆரம்பத்தில் இந்தியாவிலுள்ள (ஆந்திரா) தெலுங்கு தேசத்தில் இருந்து குடியேறிய யெரக்காளர் வம்சத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் திருக்கோவில் தம்பிலுவில் பிரதேசத்துக்கு வடக்கேயுள்ள அக்கரைப்பற்றுக்கு மேற்கு தெற்குப் பகுதிகளில் உள்ள சிறு குடிசை களில் வாழ்ந்தார்கள். இக் குடிசைகள் கம்புகளை நட்டு இலைகுழைகள் இலுக்குப்புல்களாலும் அமைக்கப்பட்ட குடிசைகள் ஆகும். இக் காலம் *150* வருடங்களுக்கு முற்பட்ட காலமாகும். இங்கு இருந்த காட்டுப்பகுதிகளான புளியடிப்பிட்டி, மொட்டையான் வெளி, முள்ளிக்குளம், அம்பலத்தாறு, ஒடியவெளி மற்றும் கிங்குரான பகுதிகளிலும் காலத்துக்கு காலம் மாறி மாறி வாழ்ந்துள்ளனர். அக்காலங்களில் இவர்களிடம் மாடுகளும், ஆடுகளும் இருந்தன.

ஒரு ஆடு கொடுத்து வேட்டை நாய் ஒன்றை மாறுவதும் ஓர் வழக்கமாய் இருந்தது. இவர்கள் புற்கள் நிறைந்த பிரதேசங்களில் தங்கள் குடிசைகளை அமைத்துக் கொள்வர். இவர்கள் தூங்கும் போது தலை வாடியினுள்ளும் மீதி உடற்பாகம் வெளியில் இருக்கும் வண்ணம் தூங்குவர் நாய், மாடு, ஆடு, பாம்பு, பாம்பு பெட்டி, ஊதுகுழல், ஈட்டி, வெள்ளெருக்கிலை என்பன இவர்களின் சொத்தாகும். ஆண்கள் இடுப்பில் துண்டைக்கட்டிக் கொள்வர். பெண்கள் சேலையைக் கட்டுவர் சட்டை போடுவதில்லை. பெண்கள் கைகளிலும், கால்களிலும் மோதிரம் அணிவதுடன் கை மணிக்கட்டில் இருந்து முழங்கை வரை வளையல் அணிந்திருப்பர். மூக்குத்தி, கழுத்தில் மாலை, காதணிகள் என்பன இவர்களுடைய அணிகலன்கள் ஆகும்.

## உணவு வகை

நாவற்பழம், உடும்பு இறைச்சி, தேன், கிழங்கு வகைகள் மற்றும் குரக்கன், தானிய வகைகளையும் உண்பர். சிறுவயதிலே வெற்றிலை உண்ணும் பழக்கம் உள்ளவராவர். சிறுவயதில் சாராயம் குடிக்கும் பழக்கத்தையும் மரபாகக் கொண்னர். இதை ஓர் கட்டாயக் கடமை போல் கருதினர். மரத்தைக் குடைந்து பொந்து உண்டாக்கி அதனுள் இறைச்சி, தேன் ஆகியவற்றை நிறைத்து சில நாட்களின் பின் சுவைத்து உண்பர்.

முருகக் கடவுளையும், வள்ளியையும், குலத்தெய்வமாக வழிப்பட்டனர். ஆனால் இவர்களுக்கு என்று ஓர் ஆலயம் இருக்கவில்லை. பருவமடைந்த பெண்கள் ஆண்களுடன் பேசுவது தடையாக இருந்தது. காதல் திருமணம் என்பது இவர்களிடம் இருக்காது. பெற்றோர் பெரியோர்கள் பேச்சுவார்த்தை வைத்து திருமணம் நிச்சயிக்கப்படும். திருமணம் முடிந்தவுடன் தம்பதிகள் தனிக்குடித்தனம் நடத்துவர். இவர்களுக்குச் சீதனமாக ஒரு பாம்புப் பெட்டி, ஊதுகுழல், ஈட்டி, வேட்டைநாய் என்பன வழங்கப்படும். குழந்தை பிறந்தால் கட்டாயம் முகிலி வகைகளை எடுத்து நன்றாகப் பிசைந்து அத் தாய்க்கு கொடுப்பர். குடிநீர் பாவனைக்காக பூவல் தோன்றி நீர் எடுப்பர். தண்ணீர் எடுக்கும் பாத்திரமாக நாடங்குடுகுகளைப் பயன்படுத்தினர்.

இவர்கள் தமக்கிடையே தெலுங்கு மொழியையும் பேசிக் கொண்டனர். இப் பகுதியில் இதனைக் குறப்பாசை என்று கூறுவர். இவர்கள் வெளியில் எங்கு செல்வது என்றாலும் கூட்டமாகவே செல்வது வழமை வயது முதிந்தவர் மட்டு தனித்தனியே செல்வர். அடிக்கடி திருக்கோவில் முச்சந்திக்கு வருவதை வழக்கமாகக் கொண்டனர். தமிழ் மொழியை திருத்தமின்றிக் கதைப்பர்.

சிங்களத்திலும் இவர்களுக்கு நாட்டம் இருந்தது. பாம்பாட்டி பணம் வசூலிக்கும் பழக்கத்தை சில குறவர்கள் தொழிலாகக் கொண்டனர். இப்படியாக அங்குமிங்கும் அலைந்து திரிந்த குறவர்களை கிட்டத்தட்ட நூற்றாண்டு மேற்பட்ட காலத்தில் கிறிஸ்தவ மதத்துக்கு மாற்றம் செய்ய அக்கால பாதிரியார்கள் கடும் முயற்சி எடுத்தனர். என்றாலும், இவர்களில் சிலர் மறுப்பு தெரிவித்தனர். எனினும் இவர்களில் சிலர் திருக்கோவில் பிரதேசம் காஞ்சிரம்குடா, தாமரைக் குளம் போன்ற பிரதேசங்களில் குடியேற ஆரம்பித்தனர். ஆரம்பத்தில் 50 குடும்பத்தைச் சேர்ந்த 150 பேர் வாழ்ந்தனர். தேவகி கிராமம் எனும் அளிக்கம்பையில் வசித்து வருகின்றனர். அதன் பிற்பாடு காஞ்சிரங்குடாவில் வாழந்த ஆதிவாசிகளுக்கு அரசாங்கத்தினால் பாடசாலை வசதி, வீடுகள், உணவு பங்கீட்டு முத்திரைகள் வழங்கப்பட்டு இன்று சில மாற்றங்கள் காணக்கூடியதாக உள்ளன.

குறிஞ்சி நில குறவர், பாலநில குறவர்கள் என்ற இரு சாதிகளும் கலந்த பழங்கால கூட்டுக்குடும்பமே இக் குறவர் ஆவர். இவர்களுடைய பேச்சு வழக்குச் சொற்கள் வருமாறு சில எடுத்துக்காட்டாக இங்கே தரப்பட்டுள்ளன.

1. ஆண் : மகபரா
2. பெண் : ஆண்டிமடாய்
3. தாய் : அம்மா
4. தகப்பன் : அப்படு
5. அண்ணன் : அண்ணடு
6. தம்பி : தம்பிடு
7. அக்கா : அக்கா
8. தங்கை : பிடா
9. மாமா : மாமா
10. மாமி : அத்தா
11. மச்சாள் : வதனா

| | | |
|---|---|---|
| 12. | மச்சான் | : மர்தால் |
| 13. | ஆச்சி | : அவாடு |
| 14. | அப்பச்சி | : தாத்தா |
| 15. | மாப்பிள்ளை | : முகுடு |
| 16. | மணப்பெண் | : பெங்கி |
| 17. | குழந்தை | : சின்னபரா |
| 18. | கறி | : புறிச்சு |
| 19. | தண்ணீர் | : நீள் |
| 20. | நாய் | : குக்கா |
| 21. | மாடு | : எத்து |
| 22. | ஆடு | : மேகா |
| 23. | வீடு | : இல்லு |
| 24. | சட்டை | : அங்கி |
| 25. | சூரியன் | : சுக்கா |
| 26. | காசு | : யக்கா |
| 27. | துக்கம் | : துக்கா |
| 28. | பழம் | : பந்து |
| 29. | மரம் | : மாறு |
| 30. | காடு | : அடவி |
| 31. | ஊதுகுழல் | : நாசரம், |

இத்தகவல் வழங்கிய குறவர்கள்
தேவகி கிராமத்தைச் சேர்ந்த,
ரங்கன் மயில் என்பவரும்,
விதானை வெள்ளச்சியும்

# 36. திருக்கோயில் (தூண் கல்வெட்டு)
# (விஜயபாகு என்ற மகோன் பொறிறத்தது)

## பக்கம் (அ) கல்வெட்டு விளக்கமும்

ஸ்ரீசங் : ஸ்ரீசங்
கபோ : கபோ
திபரும : திபரம
ரானாதி : ரானாதி
றிபுவன : றிபுவன
சசகிறா : ச்சக்கிர
வததக : வத்திக
ளஸ்ரீவி : ளஸ்ரீவி
சயவர : சயபா
குதேவ : குதேவ
ரகுஆ : ருகுஆ
ணடுப : ண்டுப
ததாவ : த்தாவ
மரதம : மாதம்
20 தியதி : 20 திளதி

## பக்கம் (ஆ) கல்வெட்டு விளக்கமும்

சிவனான : சிவனான
சங்கரக : சங்கர(க்)
கோயி : கோயி
லுக்கு : லுக்கு
கொடு : கொடு
தவோ : தவொ
விலஏ : வில இ
தைதன : ன்ததன்
மததுக : மத்துக்
குஅகி : குஅகி
தமசெம : தமசெ(ய்)
தரனாகி : தானாகி

| | |
|---|---|
| லகெங | : ல்கெங் |
| கைகக | : கைக்க |
| ரையில | : ரையில் |
| காராமப | : கராம்ப |
| சுவைக | : சுவைக் |
| பரவதனா | : பாவத்தை |
| தகெரள | : தகொள் |
| ளகடவ | : ளகடவ |
| ராகவும் | : ராகவும் |

## விளக்கம் வருமாறு:

**பக்கம் (அ) :** ஸ்ரீ சங்கரபோதி பரமரான திரியுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ விஜயபாகு தேவற்கு, ஆண்டு பத்தாவதில், தைமாதம் 20ம் திகதி

**பக்கம் (ஆ) :** சிவனான சங்கரக் கோயிலுக்கு கொடுத்த வொலில இந்தத் தர்மத்துக்கு அகிதம் செய்தானாகில், கெங்கைக் கரையில் காராம் பசுவைக் கொன்ற பாவத்தைக் கொள்ளக் கடவராகவும்.

குறிப்பு : இக் கல்வெட்டின் எழுத்துக்கள் கி.பி. 12ம், 13ம் நூற்றாண்டு எழுத்துக்களை ஒத்தவை. இதில் வரும் “அகிதம்” இந்து மரபு வாசங்கள் எனவே இதைப் பொறித்தவன் 40 வருடங்களுக்கு மேல் ஆட்சி செய்த விஜயபாகு என்னும் பெயர் கொண்ட மகோன் எனப்படுபவனே சில ஆய்வாளர்கள் கருதுவதுபொல் சிங்கள மன்னனான 1ம் விஜயபாகு அல்ல. இலங்கை வரலாற்றில் விஜயபாகு என்னும் பெயர் கொண்ட ஆறு சிங்கள மன்னர்களின் பெயர்களும், அவர்கள் எவராவது இக் கல்வெட்டைப் பொறித்திருக்க முடியாது என்றும் எவராவது இக் கல்வெட்டைப் பொறித்திருக்க முடியாதென்பதற்கான விளக்கமும் “குளக்கோட்டன் தரிசனம்” பக். 55-57ல் கொடுக்கப்பட்டுள்ளன.

## I. திருக்கோவில் துண்டுக்கல்வெட்டு (விஜயபாகு என்ற மகோன் பொறித்தது)

கல்வெட்டு வாசகம்

ஸ்ரீ மதசங்க போதி வரமரானா
திரிபுவன சககிரிய வததிகளா
ன சிவஞான சங்கரிககளா
சிரி விசய வாகு தேவகுரு
யாண்டு கயவதிலதை மாயததி
திருக் கவயவதிலதை மாயததி
திருக் கோயில சிததிரவே
லாயுத சுவாமி கோயிலுகசு
கிளகசு கடல் யாமேறகு
தலை ...... ..... ......

கல்வெட்டு விளக்கம்

ஸ்ரீமத் சங்கபோதி வர்மரான
திரிபுவனச் சக்கரவர்த்திகளா
ன சிவஞான சங்கரிகள்
ஸ்ரீ விஜயபாகு தேவருக்கு
யாண்டு கயவதில் தைமாயத்தி
திருக்கோயில் சித்தரவே
லாயுத சுவாமி கோயிலுக்கு
கிளக்கு கடல் மேற்கு
தலை ...... ..... ......

இதன் திருத்திய வாசகம்

"ஸ்ரீமத் சங்கபோதி மன்னரான, திரிபுவனச் சக்கரவர்த்திகளான சிவஞான சங்கரிகள், ஸ்ரீ விஜயபாகு தேவருக்கு பத்தாவது ஆண்டு தைமாதத்தில், திருக்கோயில் சித்திரவேலாயுத சுவாமி கோயிலுக்குக் கிழக்கே கடலும் நேர் மேற்கு தலைக்கல்..."

குறிப்பு : திருக்கோயில் ஆலயத்தில் காணப்படும் மேற்படி கல்வெட்டு விஜயபாகு என்னும் மகோன் பொறித்த கல்வெட்டு என்பதற்கான விளக்கம் "குளக்கோட்டன் தரிசனம்" நூலில் (பக்கம் 47 - 48) விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

## 37. மாகோன் வகுத்த வன்னிமை (மட்டக்களப்பு மான்மியம்) முற்குகர் வன்னிமை

சீர்தங்கு வில்லவரும் பணிக்கனாரும் சிறந்த
சட்டிலான் தனஞ்சயன்றான்
கார்தங்கு மாளவன் சங்குபயத்தன் கச்சிலாகுடி
முற்குகரினமே ழேகாண்
வார்தங்குகுகன் வாளரசகண்டன்
வளர்மாசுகரத்தவன் வாளரசகண்டன்
வளரமாசுகரத்தவன் போர்வீரகண்டன்
பார்தங்கு தண்டாவணமுண்டன் பழமைசெறி
..............................................................................

சிங்களக் குடி
அரியகல மிடுமுதலி மீகான்கோடை அவுருளை
மேலச்சேனை பள்ளிச்சேனை
பெரிய கல்மடுமுதலி மூவாங்கல்லு பேர்களேழே
புத்தூர் மருங்கூரர் வீரச்சோலைபுகழ்
காரைக்கட்டாரும் கொங்கைந்தும்
வித்தகமாய் மேழிதொழில் செய்யுமென்றான்

வெள்ளாக்குடி
விறல் கலிங்கள் படையாட்சி இருவருந்தான்
முத்தக்கல்லிருத்தி வைத்து
மாகோன்தானும் முதன்மை தரும் படையாட்சி
வன்னியச் சேர்ந்தபெறும்
தோப்பாவையைக் கைவசப்படுத்திப்
படையாட்சிகுலத்தார்க்கும் பகுத்து ஈந்தான்

செட்டிகுடி

செட்டி, மங்குச்செட்டி, மாணிக்கன், சங்குச்செட்டி
சதாசிவன், சிங்கச்செட்டி
சின்னவன், பங்குச் செட்டி பகுத்ததேழே
கொச்சி வயிற்றார் முதலைக்குடி குறித்த
தாழங்குடா ஒழுங்கு உச்சக்கரையார் ஆறுடனே
பாவாடை உவந்தசலவை
ஆறுடனே அச்சமின்றி அவரவர் அறிந்துபார் நடந்தவரே

நாவிதர்

சாரியுறு மண்முனையதில் அறவுதங்கும்
மகிழடித்தீவு சவளக்கடை
ஏரியுறு பாலமுனை வழலவாயி லங்கு
சம்மான் துறையென்னுமேழாய்
வாரியுறு மானிழலில் ரசுசெய்யும் மாகோனும்
இவர்குடியை வகுத்துவைத்தான்
தாரணியறிந்தவர்கள் நாவினைத் தக்கபடி
வைத்தமுறை சாரலாமே

கரையார்

கரையூரார் கம்பளியா ராறுகாட்டி
கருதுமுதலித்தேவன் வயித்திவேலன்
தறைநெறி வங்காளம் வீரமாணிக்கன் தான்
கரையார்குடி ஏழாய்த்தரித்தான் பாரில்

சீர்பாதர்

துரைபோர்வீரகண்டன் சீர்பாதம் துடர்சிந்தாத்திரன்
காலதேவன் காங்கேயன்
நரையாவி வேளாவி முடவெனென்னும்
நாடதனில் பொட்டப்பறைச்சிகுடி யேழே
வரையாக இவர்களையும் வகுத்து வைத்து
மானிலத்திலொற்றுமையாய் வாழமென்று
திரையகல்சூழ்புவி யரசன் வகுத்து
வைத்துச்சீர்பாதம் செடியென்று செப்பினாரே

### பண்டாரப்பிள்ளை

பண்டாரப்பிள்ளை தேசத்து எச்சிக்கல்லகற்றி
பறைதூக்கி கொடிகட்டி குருத்துக்கட்டி
விண்டாரும் வீதி அதிகாரம் திருவட்டி...
மன்றாடும் போடியார் வீடு கூட்டி
மடத்தடியார் குளிசீலை பிழியுந்தொழில்கொண்டு
குகமரபினனுக்குச் செய்வதன்றி
வேறுகுலமக்களுக்கு செய்யொண்ணாதே

### தட்டார்

களுவத்த பணிக்கன் வேலன் கறுத்தகண்ணி பத்திச்சி
கொளுங்க குப்பட்டி குசவன் பாலன்குட்டி வகைகளதாக்கி
நழுவிய நம்பிமாரை நழவரென்ற வரியிற் சேர்த்து
வழுவில்லா மதுவெடுக்கும் வருணமென்றியம்பினாரே

### கம்மாளன்

சூரியன் வடப்பன் சும்மாடு கட்டாடிப்பதஞ்சலியார்
வீரிய வேளானாரு ளமொத்திக்காலமுறு வேலன்
ஆரிய ஆட்டுவள்ளி யானந்தி யாசாமி யேழகுடிகளாக
பாரினில் காலிங்கன்றான் பகுதிட்ட குடிகாளமே

### பறையர்

வள்ளுவம் தொட்டி தோட்டி வாஞ்சொலி சக்கிலியன்
துள்ளும் வெட்டி யானந்தனேழாய்ச் சுகித்திடவகுத்தவாறே
பள்ளுடன் கலந்தாலுங்கள் வரன்முறை குறையுமொன்று
வள்ளார் காலிங்க மாகோனும் வகுத்திட்டாரே

## முடிவுரை

பண்டு தொட்டு தம்பதிவில் என அழைக்கப்பட்டு பின்னர் காலப்போக்கில் தம்பிலுவில் ஊர் என வழங்கப்பட்டு எழில் வளம், இயற்கைச் செழிப்பு கொண்ட இவ்வூரின் தோற்றம் வளர்ச்சி பற்றி அறிய இச் சிறியேன் ஆர்வம் கொண்டேன். அறிவுடையோர்க்கு அவர்களின் வரலாற்றுகளில் நல்லதொரு படிப்பினை இருக்கின்றது. அது சம்பந்தமாக பல முதியோர் மூத்தோர் கல்வி மான்கள் கனவான்கள் மற்றும் ஆலயத் தலங்களோடும் எனது தொடர்பு தொடர்ந்தது, சரித்திரம், இலக்கியம், கிராமியப்பாடல், மானிடவாழ் வியல் ஆதாரங்கள், பண்பாடு மற்றும் பல அம்சங்கள் அடங்கிய சிறப்புக்களைத் தேடி அலைந்து திரட்டினேன். இவைகளை ஆராய்ந்து செவ்வனே சரிபார்த்து முழுமை செய்து கொண்டேன். எனது தேடலின் பயனாக இப்பிரதேசத்தில் அருகியும், அல்லாடியும் பெரும் அழிவின் பிடியில் சிக்கிக் கொண்டிருந்த, அரிய பிரதான காலப்புதைகள் பல உயிர் பெற்றன எனலாம். அவையாவன நான் இந்நூலின் எனது உரையில் அடங்கலாக விளக்கி இருக்கின்றேன். அத்தோடு புத்தக உள்ளடக்கத்தில் தெளிவாக வாசகர்களுக்கு காட்டியுள்ளேன்.

இறைவன் துணையோடு வேறுதுணைவின்றி தமியேன் மேந்கொண்ட இந்தப் பாரம் பாரிய பணியின் சேகரிப்பின் போது ஏற்பட்ட சிக்கல்கள், துன்பங்கள், ஏமாற்றங்கள், எதிர் விளைவுகள் முதலியன எளிதில் மறக்க முடியாதுள்ளது. ஒரு புராதனகாலப் புதையல் எடுக்கும் முயற்சி போன்றது. கொடுத்த பலிகள், வைத்த மடைகள், ஏற்பட்ட இழப்புக்கள், துன்பங்கள், எங்கிருந்த போதிலும் வந்து தாங்கிய போதிலும், எனது நிலையான பணியான நூலாக்க முயற்சியும் தொடர்ந்து கொண்டேபோனது.

உடைவுகள் ஊக்கமாகவும், முறிவுகள் முயற்சியாகவும் மாறின. இந் நூலினை நான் எழுதி முடிக்கும் தருணத்தில் இதை எழுதி வெளியிடுவதற்கு சற்று மனம் தளர்ந்தனவாய் தான் இருந்தேன். இந் நூலில் ஓர் பிரதேசத்தின் பூர்விகம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இருந்தும் இறைவன் அருளாள் ஒரு சந்தர்ப்பம் உருவாகிற்று.

கலாசார அலுல்கள் திணைக்களம் மற்றும் உள்ளக அலுவல்கள் வடமேல் அபிவிருத்தி கலாசார அலுவல்கள் அமைச்சு ஒன்றிணைந்து நடாத்தும் தேசிய கையெழுத்துப் பிரதி போட்டி (2017) யில் எனது நூலினை அனுப்பி வைத்தேன. அப் போட்டியில் எனது தலைப்புக்கு பராட்டப்பட்டு சான்றிதழும் வழங்கப்பட்டது. இதுவே எனக்கு கிடைத்த அங்கீகாரம் என மனத்தைரியத்துடன் இதனை நூலாக்க முன்வந்தேன்.

சிறேியேன் பிறந்த மண்ணின் தம் வரலாறு படைக்கப்பட வேண்டும் என்ற ஆசை நம் மூதாதையரின் வாழ்க்கை விழுமியங்கள் அவர்தம் பராம்பரிய ஆசாரங்கள், அறிவாற்றல்கள் பிற் சந்ததியினர் அறிந்து கொள்ள வேண்டும். என்ற ஆவல் கருதி வரும் இலக்கியம், வரலாறு மானிடவாழ்வியல் முதுசெம்மைகளை அறிந்து வைக்க வேண்டும். என்ற அகவுணர்வும் ஆர்வம், ஒரு புதிய வடிமைப்பான வடிவங்களை படைக்க வேண்டும் என்ற பேரவா ஆகும்.

திரட்டிய சம்பவங்களின் யாதர்தையும் அறியவும் இடைச் செருக்குகளைத் தவிர்த்தும் தக்க ஆதாரங்களுடன் இந்நூலினை வெளிக் கொணர பெருதும் முயன்றுள்ளேன். தம்பிலுவில் ஊரின், சிறப்பும் செழிப்பும், இயற்கைத் தலைப்பும், கவிகளனி உணர்ச்சி பிரவாகங்களும் மதப்பற்றும், மனித நேயமும், விழுமிய ஆசாரச் சடங்குகளும் மற்றும் விருந்தோம்பலும் பல ஊர் மக்களால் பராட்டி புகழ்ந்த அம்சங்களாகும். வனப்புற்று திகழும் வரலாற்றுச்

சுவடுகளை முத்திரையாக பதித்துத்துக் கொண்ட இவ் அடியேன் பிறந்த மண்ணான இத் தாயக்கத்தை திருச்சோழன் மகளின் பெயரால் உருவாகிய தம்பதி நல்லாள் பெயர் வரக் கரணமாய் வந்த "தம்பதிவில் தம்பிலுவில்" என்னும் அன்புசார் அறிவகத்தை இந்நூலின் வாயிலாக சமகால எதிர்கால சந்ததியினர். அறிந்து பயன் பெறலாம். படியேறலாம் என நம்புகின்றேன்.


இந்நூலுக்கான கொடுப்பனவு மேலும் உயர்ந்து செல்வதனால் சில சம்பவங்களை இந்நூலில் இடமுடியாத நிர்ப்பந்தம் உண்டாகிற்று. இதை தவிர சில பிந்திய விடயங்களையும் சேர்க்கவில்லை. மேலும் சேர்க்க வேண்டி இருக்கும் அனைத்து குறிப்புகளையும் திருக்கோவில் பிரதேசம் மாண்மியம் எனும் நூலில் திரட்டி தருவதாக இருக்கின்றேன். மேலும் உற்பத்தி செலவினை பார்க்கிலும். இந்நூலின் விலை குறைவாக இருக்க வேண்டும். என்ற எண்ணத்துடன் குறைக்கப்பட்டுள்ளது. அனைவரும் இந்நூலினைப் பெற்று வீட்டுக்கொரு புத்தகமாவது வைத்திருக்க வேண்டும் என்ற விருப்பத்தின் பெயரில் இவ்வாறு விலைகுறைப்பு செய்யப்பட்டுள்ளது.

யார் போற்றிலும் எவர் தூற்றிலும் வரலாற்றின் யதார்த்தத்தினை மறைந்திடல் ஆகாது என்பது ஒரு சரித்திமாணவனின் சத்தியப்பிரமாண மாகும். அதை அடியொற்றியே இந்நூல் எழுதப்பட்டுள்ளது என்பதை படிப்போர் அறிவர்.

நன்றிகள்.

## உசாத்துணை நூல்கள்


1. கந்தையா. வீ. சி. மட்டக்களப்பு தமிழகம்
2. லோகநாதக்குருக்கள். க. *(2001).* திருக்கோவில் சித்திலவேராயுத தல புராணம்
3. நவநாயகமூர்த்தி. நா. *(1999)* தம்பிலுவில் கண்ணகி வழிபாடு
4. நவநாயகமூர்த்தி. நா. *(2001)* பழந்தமிழர் நடுகறி பண்பாடு
5. நவநாயகமூர்த்தி. நா. *(2014)* திருக்கோவில் பிரதேச இலக்கிய வரலாறு
6. நடராஜா. F.X.C *(1952)* மடட்டக்களப்பு மான்மியம்
7. சலீம் A.R.M *(1990)* அக்கரைப்பற்று வரலாறு
8. சதாசிவம் ஐயர். தி. *(1940)* மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு
9. தங்கேஸவரி. க. *(2007)* கிழக்கிலங்கை பூர்விக வரலாறு
10. தங்கேஸ்வரி. க. *(2007)* மட்டக்களப்பு கலைவளம்
11. தங்கேஸ்வரி. க. *(2008)* கிழக்கிலங்கை வழிபாட்டு பாரம்பரியம்
12. தங்கேஸ்வரி. க. *(2005)* தமிழ் மன்னன் மாகோன் மகத்தான வரலாறு
13. திருஞானமூர்த்தி. ச. *(2012)* கூமுனை பதியுறை காளாத்தி அம்மன் வரலாறும் காவடிச் சிந்தும்
14. கலாசார சிறப்பு மலர் பிரதேச செயலகம், திருக்கோவில் *(2011 - 2012)*
15. மட்டக்களப்பு சைவக் கோவில் (வீ.சி. கந்தையா) எழுதியது.




திக்குகோவில் — சித்திரவேலாயுதசுவாமி கோவில்



திருக்கோயில் சித்திர வேலாயுத சுவாமி கோயில் கருவறை கோபுரம்




திருக்கோவிலிற் கிடைக்கும் கல்வெட்டுகள்



திருக்கோவிலிற் கிடைக்கும் கல்வெட்டுகள்




தம்பிலுவில் கண்ணகி அம்மன் கோயில்




தம்பிலுவில் கண்ணகை அம்மன் ஆலயத்திலுள்ள கொம்புகளின் படம்: இடப்பக்கம் தென்மோடிக்கொம்பு, வலப்பக்கம் வடமோடிக் கொம்பு



தம்பட்டை முருகன் கோயில்



திருக்கோவிலில் உள்ள பாதச்சுவடுகள்




மேதகு S. தர்மரத்தினம்
MSC 1937 - 1947




R.W. அரிய நாயகம் தம்பிலுவில்



பாலபண்டிதர் உயர் திரு. வன்னிய சிங்கம்
அதிபர் தம்பிலுவில்



தாமோதரம் வைத்தியர் தம்பிலுவில்



கோணாமலை வைத்தியர் தம்பிலுவில்



தம்பையா அடிகளார்




பழைய திருநாவுக்கரசு நாயனார் குருகுலம் தம்பிலுவில் சுனாமியினால் பாதிக்கப்பட்டது.



எருமைக் கடாக்களாற் சூடு போடுதல்



குரவை போடும் நிலையில் பெண்கள் மூவர்




வசந்தன் ஆட்டம்




விற்குறி பார்த்தல்




புதிர் காவுதல்



பொலி தூற்றுதல் ([illegible])



சேவரக்காலிமீது — வட்டி



[illegible]



சுனாமியால் அழிந்த தம்பட்டை கிராமம்



சுனாமியால் பாதிக்கப்பட்ட அறநெறி மாணவர்கட்கு உதவுதல்



சுனாமியால் அழிந்த சிவலிங்கப் பிள்ளையார் ஆலயம் - தம்பிலுவில்



திருக்கோவில் மீட்புப்பணிகளுக்கு அமைச்சர் டக்ளஸ் உதவி

சுனாமி அனர்த்தம் காரணமாக மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள திருக்கோவில் பிரதேசத்தின் இடிபாடுகளை அகற்றி, அப்பிரதேசத்தைத் துப்புரவு செய்யும் பணியில் ஈடுபட்டு வரும் அம்பாறை மாவட்ட சிவதொண்டர் அமைப்புக்கு கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி கூட்டுறவு அபிவிருத்தி இந்து சமய அலுவல்கள் மற்றும் கல்வி, வாழ்க்கைத் தொழிற் பயிற்சிக்கு உதவும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உழவு இயந்திரம் ஒன்றையும், தண்ணீர் பவுசர் ஒன்றையும் அமைப்பின் தலைவர் எஸ். திருஞானமூர்த்தியிடம் கையளிக்கும் போது பிடிக்கப்பட்ட படம். இவ்வைபவத்தின் போது இலங்கை மாமுந்திரிகை கூட்டுத்தாபன தலைவர் குணசேகரம் சங்கர், முன்னாள் எம்.பி. ராசமாணிக்கம் ஆகியோரையும் காணலாம்.



சுனாமியால் அழிந்த தம்பிலுவில் கிராமம் V/C வீதி.



சுனாமியால் பாதிக்கப்பட்ட ஆலயம் - துப்பரவு செய்தல்



பழைய பிரதேச சபைக் கட்டிடம்




சிவதொண்டர் அமைப்பின் குடிநீர் விநியோகம்




சிவதொண்டர் அமைப்பின் சிரமதானப்பணி



நடராசா தர்மலிங்கம்
வைபவமொன்றில்
உரை நிகழ்த்தல்



பெண்கள் மட்பாண்டம் செய்தல்



சேவரக்கால், வட்டு — ஆனி




[illegible]



காட்டுப்பகுதியில் உள்ள ஒரு குரவர் குடிசை



காட்டு வழியிற் சந்தித்த நாகபாம்பு ஒன்றைப் பிடித்தற்காகக் குறவன் தன் மகுடி இசையில் மயங்கி — அதை ஆடச்செய்தல்


மட்டக்களப்புத்
தமிழகம்
திருக்கோணமலை
கிழக்கு
மாகாணம்


தென்னோலையால் பெண்கள் கிடுகு பின்னுகின்றனர்






விறகுக் கட்டுகளைச் சுமந்து
கொண்டு வரும் உழைக்கும் மகளிர்

உழவுப் பொறியால் சூடு போடப்படுகிறது





வயலில் நெற்போர் (சூடு) வைக்கப்பட்டுள்ளது.
பக்கத்தில் ஒரு கந்து (கைச்சூடு)


தம்பட்டை சின்ன முகத்துவாரம்



## நூலாசிரியர்



நாம் எவ்வளவு செல்வச் செழிப்போடு வாழ்ந்த போதிலும் இறந்து விட்ட பின்பு அவை எதுவும் நம்முடன் வருவதில்லை. எனவே நாம் இவ்வுலகில் வாழும் மட்டும் அழியும் செல்வத்தை சேர்க்க எண்ணாமல் அழியாத செல்வமாம் இறையருளை பெறுவதே மனிதப்பிறப்பிற்கு மாண்புடையதாக இருக்கும். இது எல்லோருக்கும் எளிதில் கைகூடி வருவதும் இல்லை. "தவமும் தவம் உடையார்கே" என்பது போன்று இந்த இறையருளை கருவிலே பெற்று பெருமை பெறும் "தம்பதி நல்லாள் தம்பிலுவில்" ஊரில் உண்மையும் நேர்மையும் அன்பும் அடக்கமும் கொண்ட அமரர் சண்முகம் அவர்களுக்கு தங்கத்தாய் என்னும் தங்கப் பிள்ளைக்கும் பேறு பெற்ற மகனாக திரு. ச. திருஞானமூர்த்தி சமாதான நீதிவான் அதாவது சிவனின் பெயராலே "சிவம்" என்று செல்லமாக அழைக்கப்படும் இப் பெரும் மகனார் பிறப்பெடுத்தார். இவரின் சுபாவம் இனிமையாகப் பேசுவது எப்போதும் சிறந்த முகத்துடன் இருப்பதும் கள்ளம் கபடம் இல்லாது அன்போடு நடந்து கொள்வதும் அத்தோடு எதிலும் துடிப்புள்ளவராகவும் காணப்படுவார்.

இவரைப்பற்றி முதலில் நான் அறிந்து கொண்ட விடயம் கன்மவிணை தீர்க்கும் கதிர்மலைக் கந்தனிடம் கால்நடையாகச் செல்லும் பக்தர்களுக்கு தண்ணீர் வழங்கும் திருப்பணியை சிரத்தையோடு மேற்கொள்ளும் "சிவ தொண்டன் சிவம்" ஆகும்.

அத்தோடு சுவாமி நாதர் தம்பையா அடிகளாரின் (திருநாவுக்கரசு நாயனார் குரு குலம்) வழிகாட்டலின் கீழ் ஆலய உற்சவ காலங்களில் சிரமதானப்பணிகளிலும், பஜனைப்பாடல்கள் பாடுவதிலும், ஆன்மீக சங்கங்கள் போன்றவற்றிலும் செயற்பட்டவராவார்.

இவர் புகுந்த இடமான ஆலையடிவேம்பு பிரதேசத்தில் திருவாசகம் முற்றோதுதல் நிகழ்வை முன்னின்று நடாத்தி வைப்பார். புராண படனம் செய்தல், பஞ்சபுராணம் பாடுதல், கண்ணகி வழக்குரை பாடுதல், நாட்டுக் கூத்து இவற்றில் எல்லாம் திறமையுள்ளவராக இனம் காணப்பட்டார்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக நூல் வெளியீடு செய்யும் பணியையும் சிறப்பாக மேற்கொண்டு பல பேரின் பாராட்டைப் பெற்றார். ஏற்கனவே மூன்று நூல்களை வெளியிட்டு பிறந்த மண்ணிற்கு பெருமை சேர்க்கும் அழியாத ஒரு சின்னத்தை "தம்பதி நல்லாள் தம்பிலுவில் ஊர் சிறப்பு வரலாறு" என்னும் தலைப்பில் ஆய்ந்து அலசி தேடி முப்பத்து ஒன்பது பிரதான தலைப்புக்களில் சகல விடயங்களையும் கோர்த்து வெளியீடு செய்துள்ளார். இதை வாசிக்கும் பொழுது இவரின் தேடல் எம்மை நெகிழ வைக்கின்றது. ஊரின் கலை கலாசாரம் பண்பாடு தெய்வ தலங்கள் கல்விக்கூடங்கள் வரலாறு இப்படி பல விடயங்களைத் தேடித்தந்துள்ளார். "கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தால்" இவரின் இப் படைப்பு பராட்டு சான்றிதழ் பெற்றுள்ளது. இவர் மென்மேலும் தன் பணியை தொடர்ந்து சமூகத்திற்கு பயன்படும் ஆக்கங்கள் பல படைத்து பெயரும் புகழும் பெற எல்லாம் வல்ல எங்கள் ஊர் சித்தி விநாயகரின் அருள் பேறு என்றென்றும் கிடைக்க வேண்டும் என வேண்டி நீண்ட ஆயுளும் சகல செல்வ வளங்களும் பெற்று வாழ மனமாற வாழ்த்துகின் றேன்.

புஸ்பவதி கோபாலராசா
ஓய்வு நிலை உதவி கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி)
திருக்கோவில் கல்வி வலயம்
தம்பிலுவில்